கல்வி வழிகாட்டி கையேடு

Career guidance Book

வெளியீடு:
தமிழ்நாடு தவ்ஹித் ஜமாஅத்
மாநில மாணவரணி

TNTJ STUDENTS WING

INTRODUCTION | அறிமுகம்

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் மாநில மாணவர் அணியின் சார்பாக கடந்த பல ஆண்டு காலமாக தமிழ்நாடு முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட "எங்குபடிக்கலாம்! என்ன படிக்கலாம்!!" நிகழ்ச்சியை நடத்தி இருக்கின்றோம். இந்த நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு தங்களுடைய பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பிற்கு பிறகு 'என்னென்ன மாதிரியான படிப்புகள் இருக்கின்றன','எந்த படிப்பிற்கு அதிக ஊதியம் கிடைக்கும்', 'எந்த படிப்புக்கு ஊதியம் கிடைக்காது' என்பன போன்ற தகவல்களை நம்ஜமாஅத்தின் கல்வியாளர்கள் வாயிலாக நாம் கொடுத்து வருகிறோம். அதனைத் தொடர்ந்து, அதிகமான சகோதரர்கள் கேட்டுகொண்டதன் அடிப்படையில், மாணவரணியின் கல்வியாளர்கள் இணைந்து ஒரு புத்தகத்தை தயார் செய்யலாம் என்று முடிவெடுத்து, அதை தொகுத்து மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் தருவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

இறைவனின் அருளால் தற்போது "எங்கு படிக்கலாம்! என்ன படிக்கலாம்!!" என ஒரு புத்தக வடிவில் தொகுத்திருக்கின்றோம். இந்தக் கல்வி வழிகாட்டி புத்தகம் என்பது அனைத்து மாணவர்களுக்கும் போய்சேரவேண்டும் என்பதும், அதுமாத்திரமில்லாமல் அனைவருமே தங்களுடைய படிப்பை முறையாக தேர்ந்தெடுத்து, மக்களுக்கும் தங்களுடைய ஈருலக வாழ்வுக்கும் பயன்பெறக் கூடியவகையில் அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் நாம் இதை செய்து கொண்டிருக்கின்றோம்.

நீங்கள் இதைப்படிப்பது மாத்திரம் இல்லாமல், அனைத்து மக்களுக்கும் இப்புத்தகத்தை கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். உங்களுடைய மேலான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் எந்நேரமும் வரவேற்கப்படுகின்றன மனிதன் என்ற அடிப்படையில் தவறுகள் இருக்கும் என்பதை மறுக்க இயலாது, அந்த தவறுகளை சுட்டி காண்பிக்கும் பொழுது, இன்ஷா அல்லாஹ் அதை நாம் இந்த புத்தகத்தின் மறுபதிப்பில் திருத்திக் கொள்வோம் என்பதையும் கூறிக்கொண்டு இதற்காக உழைத்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் அல்லாஹ் பேரருள் வேண்டும் என்று பிரார்த்தித்து...

இந்த புத்தகத்தை அல்லாஹ்வின் திருப்திக்காக அனைத்து சமுதாய மக்களுக்காகவும் சமர்ப்பிக்கின்றோம்.

TNTJ STUDENTS WING

என்றென்றும் கல்விப்பணியில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் மாநில மாணவரணி எங்களுடைய facebook மற்றும் YouTube பக்கத்தை Like மற்றும் Subscribe செய்யுங்கள் தொடர்ச்சியாக வரக்கூடிய தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளுங்கள். உங்களுடைய மேலான ஆலோசனைகள், கருத்துகள், விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

TNTJ
Students Wing

TNTJ STUDENTS WING

TABLE OF CONTENTS

AFTER 10TH ? | ---------- 7

10 முடித்த பிறகு நிறைய வழிகளில் மேற்படிப்பு படிக்கலாம் ---------- 7

PLUS 1 AND 2 | பிளஸ் 1 மற்றும்பிளஸ் 2 படிப்பு ---------- 8

DIPLOMA IN ENGINEERING | டிப்ளமோ பட்டயப் படிப்பு ---------- 10

ITI | ஐடிஐபடிப்பு ---------- 26

AFTER 12TH ? | பன்னிரண்டாம் வகுப்புமுடித்த பிறகு நிறைய வழிகளில் மேற்படிப்பு படிக்கலாம் ---------- 31

ENGINEERING | பொறியியல் ---------- 37

INDIAN INSTITUTE OF TECHNOLOGY (IIT) | இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் -41

MEDICAL STUDIES | மருத்துவபடிப்புகள் ---------- 45

FOREIGN MEDICAL | வெளிநாட்டில் முருத்துவ படிப்பு ---------- 55

LAW | சட்டப்படிப்பு ---------- 56

CHARTERED ACCOUNTANT | பட்டய கணக்காளர் ---------- 61

CORPORATE SECRETARYSHIP | கார்ப்பரேட் செயலாளர் ---------- 65

COST AND MANAGEMENT ACCOUNTANCY (CMA) | செலவு மற்றும் மேலாண்மை கணக்கியல் படிப்பு ---------- 67

HISTORY | வரலாறு ---------- 70

JOURNALISM | ஊடகத்துறை ---------- 73

TEACHER EDUCATION | ஆசிரியர் கல்வி ---------- 76

PILOT | பைலட் ---------- 86

ARTS AND SCIENCE | கலை மற்றும் அறிவியல் ---------- 90

TAMILNADU VETERINARY AND ANIMAL SCIENCE UNIVERSITY (TANUVAS) | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்----------95

TAMILNADU PHYSICAL EDUCATION AND SPORTS UNIVERSITY | தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்----------98

MASTER IN BUSINESS ADMINISTRATION (MBA) | மேலாண்மை படிப்புகள் ---------- 100

CENTRAL UNIVERSITY | மத்திய பல்கலைக்கழகம்---------- 104

NEET EXAM | நீட் தேர்வு---------- 106

AGRICULTURAL COURSES | வேளாண்படிப்புகள் ---------- 109

FISHERIES SCIENCE (B.F.Sc) | மீன்வளம் தொடர்பான படிப்புகள்---------- 111

FOOD TECHNOLOGY | உணவு பதப்படுத்துதலில் பொறியியல் படிப்பு ---------- 112

MARITIME UNIVERSITY | கடல்சார் படிப்புகள் ---------- 113

INDIAN INSTITUTE OF SCIENCE | இந்திய அறிவியல் நிறுவனம்---------- 115

IGNOU | திறந்தநிலை பல்கலைக்கழகம் ---------- 116

HOW TO CHOOSE COLLEGES? | கல்லூரிகளை தேர்ந்தெடுப்பது எப்படி? ---------- 118

SCHOLARSHIPS | கல்வி உதவித்தொகை---------- 122

ENTRANCE EXAMINATIONS | நுழைவுத் தேர்வுகள் ---------- 126

NON EQUIVALENT COURSES AS PER TNPSC | ஏற்றுக் கொள்ளப்படாத படிப்புகள் 133

TNTJ STUDENTS WING

NO PART OF THIS E-BOOK MAY BE REPRODUCED, MODIFIED IN ANY FORM OR ANY MEANS, ELECTRONIC, MECHANICAL ETC. WITHOUT THE WRITTEN PERMISSION OF TAMILNADU THOWHEED JAAMATH STATE EXECUTIVES.

IT IS ILLEGAL TO SELL THIS E-BOOK FOR MONEY OR CHARGE MONEY FOR SHARING THIS E-BOOK, IF IT COMES TO NOTICE OF PUBLISHERS. LEGAL ACTION WOULD BE TAKEN AGAINST THEM

FIRST EDITION RELEASE JUNE 2020

REVISION HISTORY

JUNE 2020

COPYRIGHT @2020 BY TAMILNADU THOWHEED JAMAATH

CAREER GUIDANCE BOOKLET

THIS BOOK IS FREE TO SHARE THROUGH ALL SOCIAL NETWORKS POSSIBLE AS SUCH AND LET IT REACH MAXIMUM AMOUNT OF PEOPLE. INSHA ALLAH, SO THAT WE GAIN MORE REWARDS FROM ALLAH.

மாநிலத் தலைமையக முகவரி

தமிழ்நாடுதவ்ஹீத்ஜமாஅத் [TAMILNADU THOWHEED JAMAATH]

25, அரண்மனைக்காரன்தெரு,

மண்ணடி, சென்னை-1

போன்- 044 2521 5226

மின்னஞ்சல்- tntjsw@gmail.com

Information contained in this book is gathered from various professors, teachers and career counsellors all over TAMILNADU and from the sources which are meant to be reliable. However, neither TNTJ nor its contributors guarantee the accuracy or completeness of any information herein, and neither TNTJ nor its contributors shall be responsible for any error, omissions, or damages arising out of use of this information. This book is published with the understanding that TNTJ and its contributors are supplying valid and true information.

TNTJ STUDENTS WING

AFTER 10TH ? |
10 முடித்தபிறகு நிறைய வழிகளில் மேற்படிப்பு படிக்கலாம்



- பிளஸ்-1 மற்றும் பிளஸ்-2 படிப்பு
- டிப்ளமோ – பட்டயப்படிப்பு மற்றும்
- சான்றிதழ் படிப்பு மற்றும் ITI இன்னும் பல படிப்புகள்
- துணை மருத்துவம் சார்ந்த படிப்புகள்

TNTJ STUDENTS WING

PLUS 1 AND 2 | பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 படிப்பு

பிளஸ் 1 மற்றும்பிளஸ் 2 மேல்நிலை படிப்பை மூன்று நான்கு வகைகளாக பிரிக்கலாம்

முதல் பிரிவு [First Group]

1st குரூப் என்பது கணிதம், வேதியியல், இயற்பியல், உயிரியல் (Maths, Physics, Chemistry, Biology) பாடப் பிரிவுகளை கொண்டது. இது மருத்துவ படிப்பு படிப்பதற்கு ஏற்ற ஒரு பிரிவு இந்த பிரிவை எடுத்தால் இதன் பிறகு எந்த துறையை வேண்டும் என்றாலும் நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். மருத்துவ படிப்பு மட்டும் தான் செல்ல வேண்டும் என்ற அவசியம் கிடையாது. நீங்கள் இன்ஜினியரிங் படிப்பை தேர்ந்தெடுக்கலாம் அல்லது கலை மற்றும் அறிவியல் படிப்பையும் தேர்ந்தெடுக்கலாம் மற்றும் இதர எல்லா படிப்புகளையும் நீங்கள் ஃபர்ஸ்ட் குரூப் எடுக்கும் பொழுது தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. பெரும்பான்மயான அனைத்து பிரிவுகளுக்கும் இந்தப் படிப்பை படித்தால் செல்ல முடியும் என்ற காரணத்தினால் இந்த படிப்பை படிக்க மாணவர்கள் ஆர்வம் காட்டுவது நம்மால் பார்க்க முடியும்.



இரண்டாம் பிரிவு [Second Group]

அடுத்ததாக இரண்டாம் பிரிவில் கணிதம் வேதியியல் இயற்பியல் கணினி அறிவியல் (Maths, Physics, Chemistry, Computer Science) போன்ற பாடங்கள் இருக்கும் இந்த பிரிவை படித்து முடித்த பிறகு உங்களால் பொறியியல் படிப்புகளைப் படிக்க இயலும் மற்றும் கலை மற்றும் அறிவியல் படிப்புகளைப் படிக்க இயலும் மற்றும் இதர படிப்புகளை நம்மால் படிக்க இயலும் . ஆனால் மருத்துவம் சார்ந்த படிப்பை நம்மால் படிக்க இயலாது . முதல்

பிரிவு கிடைக்காத மாணவர்கள் பெரும்பாலும் இரண்டாம் பிரிவை தேர்ந்தெடுக்கக்கூடிய நிலையை நம்மால் பார்க்க முடிகிறது. அனைத்து பிரிவுகளும் அரசாங்க வேலைவாய்ப்புகளுக்கு பயன் தரும் என்பதையும் நாம் இந்த தருணத்தில் தெரிந்துகொள்வோம்.

மூன்றாம் பிரிவு (Third Group)

வணிககணிதம் , கணக்கியல், வர்த்தகம், பொருளாதாரம் (Business Maths, Accountancy, Commerce, Economics) உள்ளிட்ட பாடப்பிரிவு களை கொண்டது இதனை படிப்பவர்கள் பன்னிரண்டாம் வகுப்பு முடித்த பிறகு B.Com, CA, CS, ICWA, ICMA போன்ற படிப்புகளை தேர்ந்தெடுத்து ஆடிட்டிங் மற்றும் கணக்கு சம்பந்தமான வேலைகளுக்கு செல்லலாம்.

TNTJ STUDENTS WING
TNTJ Students Wing

DIPLOMA IN ENGINEERING | டிப்ளோமா பட்டயப்படிப்பு

DIPLOMA COURSES

- Marine (Sailor, Marine Eng,)
- Fire and safety
- Hotel Management
- Advertisement & Marketing
- Interior designing
- Computers and programming
- Business Management
- Architectural Assistantship
- Apparel Design
- Stenography

DIPLOMA COURSES

- Event Management
- Travel & Tourism
- Multimedia
- Animation & 3D
- Photography
- Agriculture
- Computers and programming
- DMLT
- Dental Mechanics, etc
- Culinary Arts
- Journalism &
- Mass Communication
- Elementary Education

டிப்ளமோ (Diploma) என்பது (Development, Improvement and preparation for Leadership, Organisational, Management and achievement) விரிவாக்கம் ஆகும்.

டிப்ளமோ கல்வி என்பது இளநிலை பட்டய கல்விக்கு ஒப்பான ஒன்றாகும். மேலும் டிப்ளமோ என்பது செயல்முறை பாடத்திட்டத்தை அடிப்படையாக கொண்டது. டிப்ளமோ படிப்பில் பல தரப்பட்ட பிரிவுகள் உள்ளது. குறிப்பாக பொறியியல் துறை சார்ந்த படிப்புகள், மருத்துவத்துறை சார்ந்த படிப்புகள், பாதுகாப்புதுறை சார்ந்த படிப்புகள் என பலதுறைகளில் டிப்ளமோ படிப்பு உள்ளது.

பொறியியல் துறையில் அதிக ஆர்வம் கொண்ட மாணவர்கள், பொருளாதாரப் பற்றாக்குறை, குறைவான மதிப்பெண், போன்ற சிலகாரணங்களினால் பொறியியல் கல்வியில் (Engineering) சேர்வது தடைபட்டுவிடுகிறது. இப்படிப்பட்ட மாணவர்கள், டிப்ளமோ படிப்பின் மூலமாக பொறியியல் துறையில் உள்ளே நுழைவது எளிமையாகிவிடுகிறது. மேலும், குறைவான காலங்களில் (10 + 3 வருடம்) படிப்பை நிறைவு செய்து வேலைக்கு செல்ல விரும்புபவர்களும் டிப்ளமோ படிப்பை தேர்வு செய்யலாம். தமிழ்நாட்டில் பொறியியல் துறைசார்ந்த டிப்ளமோ படிப்பை DOTE (Directorate Of Technical Education) நிர்வகித்து சான்றுகளை வழங்குகிறது.

தகுதிகள்:

பொறியியல்துறை சார்ந்த டிப்ளமோ படிப்பை நீங்கள் படிப்பதற்கு பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (அல்லது) பன்னிரெண்டாம் வகுப்பு கணிதப்பாடத்தை ஒரு பாடமாகக் கொண்ட பிரிவை தேர்வு செய்து தேர்ச்சிபெற்றிருக்கவேண்டும்.

ஆண்டுகள்

டிப்ளமோ படிப்புகளின் காலம் 3 ஆண்டுகள் ஆகும். ஆறு செமஸ்டர்கள் பொதுத்தேர்வை கொண்டது.. பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று நுழைந்தவர்கள் நேரடியாக இரண்டாம் ஆண்டில் சேரலாம் (Lateral entry). தமிழகத்தைப் பொருத்தவரை, டிப்ளமோபடிப்பை தமிழ் மற்றும் ஆங்கில வழியில் நாம் கற்கமுடியும்.

பாடப்பிரிவை தேர்ந்தெடுப்பது:-

டிப்ளமோ படிப்பை பொறுத்தவரை மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ், சிவில் மற்றும் கெமிக்கல் உள்ளிட்ட பாடப்பிரிவுகளை தேர்ந்தெடுத்து படிக்கலாம்.

மேற்கூறப்பட்ட பாடப்பிரிவுகளை பொருத்தவரை, அதிகமான அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளை பெற்றுத்தரும்.
இவையல்லாத(specialised) பிரிவுகளை தேர்ந்தெடுக்கும் பொழுது, அவற்றைப் பற்றிய கூடுதல் அறிவும் ஆர்வமும் , தேர்ந்தெடுக்கக்கூடிய கல்லூரிகளும் வேலைவாய்ப்பை தீர்மானிக்கும். இது போன்ற பிரிவுகளை தேர்ந்தெடுக்கும் போது, அந்ததுறைகளில் படித்து பட்டம்பெற்ற, வேலைபார்க்கக்கூடியவர்களிடம் அறிவுரைபெற்று முடிவுசெய்வது சிறந்ததாக இருக்கும்.

வேலை வாய்ப்புகள்:-

பொறியியல் சார்ந்த டிப்ளமோ படிப்புகளை நீங்கள் படிப்பதின் மூலமாக மத்திய மற்றும் மாநில அரசாங்கத்தின் மின்சாரவாரியம், உற்பத்தி தொழிற்சாலைகள் போன்ற பலதுறைகளில் வேலைவாய்ப்புகள் கொட்டிக்கிடக்கின்றன. அதுமட்டுமல்லாது, உள்நாடு மற்றும் வெளிநாடு தனியார் நிறுவனங்களிலும் அதிகமான வேலைவாய்ப்புகள் உள்ளன. மேலும், பொறியியல் துறை சார்ந்த டிப்ளமோ படிப்புகளை திறன் படபடித்து வெற்றி பெற்றவர்கள் அசிஸ்டென்ட் இன்ஜினியர் ஆகவோ அல்லது ஜூனியர் இன்ஜினியராக அல்லது சூப்பர்வைசர் மேற்பார்வையாளர் போன்ற நல்ல வேலைகளில் பணியமர்த்தப்படலாம். டிப்ளமோ படித்தவர்களுக்கு, தனியார் நிறுவனங்களில் மாதவருமானமாக 8000 ரூபாய் முதல் 15,000 ரூபாய் வரைதரப்படுகின்றது. தொழில் சார்ந்த அறிவு மற்றும் ஆங்கில மொழிப் புலமை போன்றவற்றை வளர்த்துக்கொள்வதன் மூலம் அடுத்தடுத்த ஆண்டுகளில் அவர்களது வருமானம் இலகுவாக பெருகுவதற்கான வாய்ப்புகளும் உண்டு.

மேற்படிப்பு:-

டிப்ளமோ படிப்பில் வெற்றி பெற்றவர்கள் B.E., B.Tech., இரண்டாம் ஆண்டில் நேரடியாக சேர்ந்து மேற்படிப்பை தொடரலாம். நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்கள், பகுதிநேர B.E., B.Tech., படிப்புகளை பயிலலாம். அண்ணா பல்கலைக்கழகம் உட்பட பல்வேறு பல்கலைக்கழகங்களில் பகுதிநேர B.E., B.Tech., பயிற்றுவிக்கப்படுகிறது. மேலும், டிப்ளமோவில் செயல்முறை பாடத்திட்டம் (practicals) அதிகமாக இருப்பதினால், அவர்கள் மேற்படிப்பு (B.E., B.Tech.,) தொடரும் பொழுது எளிமையாகவும், உள்ளார்ந்தும் கற்றுக்கொள்ளலாம். மிகமுக்கியமாக டிப்ளமோ முடித்து பொறியியல் படிப்பை படிக்ககூடிய மாணவர்கள் கணிதத்தை மிகவும் கடினமாக உணர்கின்றனர் இதனால் நிறைய மக்கள் கணித பாடத்தில் தேர்ச்சி மதிப்பெண்கள் பெறாமல் சிரமப்படுவதை காணமுடிகிறது கூடுதல் பயிற்சியும் முயற்சியும் மேல்நிலைகல்வியில் (பிளஸ் 1 மற்றும்பிளஸ் 2) கணிதம் கற்றவர்கள் படிப்பது போன்று கற்றலை எளிமையாக்கும்.

PARAMEDICAL COURSES |
துணை மருத்துவம் சார்ந்த படிப்புகள்

அன்பான மாணவ மாணவிகளே! பெற்றோர்களே! நோய் என்பது ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு ஆற்றலுடன் மக்களை சந்திக்கிறது அந்த நோய்யை எதிர்த்து மருத்துவத்துறையும் அந்தந்த காலகட்டத்தில் மருந்து கண்டுபிடித்து நோய்களை அழித்து வருகிறது. இஸ்லாமியர்களின் முக்கியமான ஒருநம்பிக்கை எல்லா நோய்களுக்கும் மருந்து உண்டு என்பது இதை முஹம்மதுநபி (ஸல்) அவர்கள் தெளிவாக கீழேபதிவு செய்துள்ள செய்தியில் கூறியுள்ளார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்' - அல்லாஹ் எந்த நோயையும் அதற்குரிய நிவாரணியை அருளாமல் இறக்குவதில்லை. எனஅபூஹுரைரா(ரலி) அறிவித்தார். நூல் ஸஹீஹ் புகாரி - 5678..

அப்படியெனில் எல்லா நோய்களுக்கும் இவ்வுலகில் மருந்து இல்லாமல் இல்லை அனைத்து நோய்க்கும் மருந்து உண்டு. அதை மருத்துவதுறை தன் ஆராய்ச்சி மூலம் கண்டறிகின்றனர் இறைவனின் அருளால்.

நாம் தற்போது உள்ள 2020 கால சூழல்மிகவும் சோதனையான காலகட்டம் ஏன் என்றால் தற்போது உலகத்தையே ஆட்டிப்படைக்ககூடிய ஒருநோய் COVID-19 உள்ள காலச்சூழலில் உள்ளோம். இந்த நோயின் மூலம் உலகில் உள்ள அனைத்து துறையினரும் மிகபெரிய படிப்பினையை பெற்றுள்ளோம். மருத்துவத்துறை, சுகாதாரத்துறை, பாதுகாப்பு துறைக்குச் சவாலான நோயாக உள்ளது. இதில் மிகவும் அற்பணிப்பு மற்றும் சேவைமனப் பான்மையுடன் உயிரை துச்சமென மதித்து பணி செய்யும் மிக உன்னதான மான பணிதான் இந்த மருத்துவ மற்றும் துணை மருத்துவபணி இந்த தூய பணியின் கல்விசார்ந்த தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

11, 12 - ஆம் வகுப்பில் எந்த பாடம் எடுக்கவேண்டும்

மருத்துவ மற்றும் துணை மருத்துவ படிப்புகள் படிக்க 11ஆம் வகுப்பில் Biology, Physics & Chemistry or Botany, Zoology, Physics, & Chemistry - உயிரியல், இயற்பியல்&வேதியியல் அல்லது தாவரவியல், விலங்கியல், இயற்பியல் & வேதியியல் ஆகிய பிரிவுகள் எடுத்து படித்தால் மட்டுமே இந்ததுறையை தேர்ந்துதெடுக்க முடியும் ஒரு சில மருத்துவபடிப்பை தவிர.

துணை மருத்துவ படிப்புகளுக்கு நீட்தேர்வு இல்லை

இந்த ஆண்டும் துணை மருத்துவ படிப்புகளுக்கு நீட்தேர்வு கிடையாது தமிழக அரசின் இடஒதுக்கீடு முறைதான் பின்பற்றபடும்.

அரசு கல்லூரிகளில் துணை மருத்துவ கலந்தாய்வு முறை

பி.எஸ்சி. நர்சிங் உள்ளிட்ட துணை மருத்துவப் படிப்புகளுக்கான விண்ணப்பங்களை www.tnhealth.org; www.tnmedicalselection.org ஆகிய இணையதங்களிலும் பதிவிறக்கம் செய்யலாம்.

அரசு கல்லூரிகளில் துணை மருத்தவம் விண்ணப்பிக்க தேதி

சென்ற ஆண்டுஆகஸ்ட 18 முதல் ஆன்லைனில் பதிவிறக்கம் செய்ய ஆரம்பம் செய்தனர், இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் எதிர்பார்க்கலாம்.

அரசு மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூரியில் மொத்த இடங்கள்

துணை மருத்துவபடிப்புகளுக்கு அரசு மருத்துவக் கல்லூரிகளில் மொத்தம் 600-க்கும் மேற்பட்ட இடங்களும், தனியார் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் 7,500 -க்கு மேற்பட்டஇடங்களும், 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிர்வாக இடங்களும் எனமொத்தம் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் உள்ளன. பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் கலந்தாய்வு நடத்தி இந்தப் படிப்புகளுக்கான மாணவர்கள் சேர்க்கை நடைபெறும்.

யார் விண்ணப்பிக்கலாம்

தமிழகத்தைப் சபூர்வீகமாகக் கொண்ட இந்திய குடியுரிமையுள்ள மாணவர்கள் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்க முடியும். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்கள் தங்களது ஜாதிச்சான்றிதழின் சான்றொப்பமிட்ட நகல்களை சமர்ப்பித்து விண்ணப்பங்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

சேர்க்கை & கூடுதல் விபரங்களுக்கு கீழ்காணும் முகவரியை அனுகலாம்

Selection Committee

Directorate Of Medical Education

162, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai-600010

ஈமெயில் selmedi@yahoo.co.in; தொலைபேசி +044-28361674

உதவி எண்கள் 9884224648, 9884224649, 9884224745, 9884224746

இணையதளம் www.tnhealth.tn.gov.in, www.tnmsc.tn.gov.in

கூடுதல் விபரங்களுக்கு

தமிழ்நாடு டாக்டர் MGR மருத்துவபல்கலைக்கழகம்

59, அண்ணாசாலை, கிண்டி, சென்னை - 600032

ஈமெயில் - mail@tnmgrmu.ac.in

தொலைபேசி : +91 44 22353574 /22353093

இணையதளம் - www.tnmgrmu.ac.in

கல்லூரிகளில் துணை மருத்துவபடிப்புக் கட்டணங்கள் - சிறுமாற்றம் இருக்காலம்

துணை மருத்துவ படிப்புகளை பொறுத்தவரை

- B.Pharm க்கு அரசுகல்லூரிகளில் அதிகபட்சக் கட்டணம் ஆண்டுக்கு 4,000 மட்டுமே.
- B.Sc., நர்சிங் அரசு ஒதுக்கீடு இடங்களுக்கு கட்டணம் 40,000 மட்டுமே
- BPT அரசு ஒதுக்கீடு இடங்களுக்கு கட்டணம் 33,000 மட்டுமே
- BOT அரசு ஒதுக்கீடு இடங்களுக்கு கட்டணம் 33,000 மட்டுமே.

நல்ல மதிப்பெண் எடுத்து அரசு கல்லூரிகளில் துணை மருத்துவபடிப்புகளை படிப்பதால் ஏழை எளிய மக்களுக்கு தங்களின் துறை சார்ந்த கனவை இலகுவாக குறைந்த செலவில் பெறமுடியும். தனியார் கல்லூரியை காட்டிலும் அரசு கல்லூரிகளில் படிப்பதே சிறந்தது. ஏனெனில் அரசு கல்லூரிகளில் ஒரு சில படிப்புகளுக்கு மாதாந்திர உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

துணை மருத்துவ துறையில் வேலை வாய்ப்புகள்

மருத்துவதுறை உயிர்காக்கும்துறை என்பதால் இந்தியாவில் மருத்துவமனைகளும், மருத்துவ சிகிச்சைகளும் உலகதரத்தில் வளர்ந்துள்ளன. அதிலும் தமிழகம் மருத்துவ துறையில் சிறந்து விளங்கும் பகுதி. மேலும் இந்தியாவில் மக்கள் தொகை அதிகம் என்பதால் அதிக மருத்துவமனைகளும், மருத்துவப் பணியாளர்களும் தேவைப்படுகின்றனர். உலகநாடுகளை ஒப்பிடுகையில் இந்தியாவில் மருத்துவ கட்டணங்கள் குறைவு என்பதால் வெளிநாட்டினர் பலரும் மருத்துவ கிச்சைபெற இந்தியா வருகின்றனர். எனவே இந்தியாவில் மருத்துவர்களுக்கு இணையாக மருத்துவ பணியாளர்கள் தேவைபடுகின்றனர். நகரங்கள் மட்டுமின்றி கிராமங்கள் வரை துணை மருத்துவபடிப்பு படித்தவர்கள் தேவை அதிகம் உள்ளது. மேலும் வெளிநாடுகளில் இந்தியர்களுக்கு அதிகம் வேலைவாய்ப்புகள் உள்ளன.

மருத்துவதுறையில் பட்டபடிப்புகளுக்கு மட்டுமின்றி டிப்ளமோ மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கும் தேவை அதிகம் உள்ளது. மருத்துவமனைகள் மட்டுமின்றி மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், மருத்துவ கல்வி நிறுவனங்களிலும் இப்படிப்புகளுக்கு வேலைவாய்ப்பு உள்ளது. பிறதுறைகள் போல்படிப்பை முடித்துவிட்டு வேலைக்கு காத்திருக்கும் நிலையோ அல்லது அரசு பணியை மட்டும் தேடும்நிலையோ

TNTJ STUDENTS WING

இப்படிப்புகளுக்கு இல்லை. சுருங்ககூறின் இப்படிப்புகள் படித்தோர் படிப்பை முடித்த அடுத்த ஆண்டு ஏதாவது ஒரு மருத்துவமனையில் வேலைக்கு சேரமுடியும் என்ற நிலை தற்போதுவரை உள்ளது. ஆகவே இப்படி ஏராளமான வாய்ப்புகள் உள்ள துணை மருத்துவபடிப்புகளை தவரவிட்டுவிடாதீர்கள் மாணவசெல்வங்களே.

துணை மருத்துவ படிப்புகளின் வகைகள். (B.Sc.)

B.Sc., Nursing	B.Sc., Medical Record Technician
B.Pharm – Pharmacy	B.Sc., Cardiac Technology
B.P.T – Physiotherapy	B.Sc., Accident & Emergency Care Technology
B.O.T - Occupational Therapy	B.Sc., Physician Assistant
B.Opto - Optometry	B.Sc., Critical Care Technology
B.Sc., Radiology & Imaging Tech	B.Sc., Nuclear Medicine Tech
B.Sc., Medical Lab Technology	B.Sc., Dental Hygiene
B.Sc., Radio Therapy Technology	B.Sc., Dental Mechanic
B.Sc., Dialysis Technology	B.Sc., Dental Technician
B.Sc., Operation Theatre & Anesthesia Technology	B.Sc., Radiographic Assistant
B.Sc., Cardiac Pulmonary Perfusion Technology	B.Sc., Rehabilitation Therapy
B.Sc., Respiratory Therapy	B.Sc., Blood Transfusion Tech
BASLP Audiology & Speech Language Pathology	

இது போன்ற இன்னும் ஏராளமான துணை மருத்துவ படிப்புகள் உள்ளது இதில் நமது திறமைக்கு ஏற்றார் போல் ஒரு துறைதேர்ந்தெடுத்து துறைசார்ந்த வல்லுநர் ஆகலாம்.

முதுகலை துணை மருத்துவ படிப்புகள்

M.Pharm	M.P.T - Master Of Physiotherapy
M.Sc., - Surgical Nursing	M.Sc., - Community Health Nursing
MBA In Hospital & Health Care Management	Master In Sports Physiotherapy

இன்னும் ஏராளமான முதுநிலை துணைமருத்துவ படிப்புகள் உள்ளன அதில் சிலவற்றை மேலகுறிபிட்டுள்ளோம்.

எதிர்காலத்தில் துணை மருத்துவதுறை

உலக நாடுகளில் துணை மருத்துவ உட்பிரிவு விரிவாகி கொண்டேபோகிறது ஒவ்வொரு துறையிலும் உட்பிரிவு என்பது நீண்டுகொண்டே போகிறது ஆகையால் துணைமருத்துவ கல்வியறிவு என்பது வருங்காலங்களில் மிகப்பெரும் அசாத்திய நிகழ்வுகளை கொண்டதாக இருக்கும். இருதயத்தை மாற்றி அமைக்ககூடய காலகட்டம் தாண்டி மனிதனால் மாற்றி அமைக்க முடியாத உறுப்புகளையும் மாற்றி அமைக்கும் சிகரத்தை நோக்கி பயனிக்கிறது எதிர்காலமருத்துவம் அப்படிபட்ட சூழலில் துணைமருத்துவம் இல்லாமல் இவை எதுவும் சாத்தியம் இல்லை என்பதுதான் உண்மை.

*அரசு சார்ந்த நிறுவனத்தில் இணைவது அல்லது அரசு கல்லூரி கிடைக்காமல் சுயநிதி கல்லூரியில் அரசு ஒதுக்கீடு கிடைத்தால் அதில் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள்.

1. 400 மதிப்பெண்ணுக்குகூடுதலாக +2 வில் பெற்ற மாணவர்கள் பட்டபடிப்பு மற்றும் டிப்ளமோ படிப்புகளுக்கு தனித்தனியாக விண்ணப்பிக்கலாம். இடஒதுக்கீட்டு அடிப் படையில் அரசு கல்லூரிகளில் ஏதாவது ஒரு பயிற்சியில் சேர வாய்ப்பு கிடைத்தாலும் சேர்ந்து கொள்ளலாம். ஏனெனில் அரசு கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு அரசு வேலைக்கு செல்லும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

2. ஒரு வேளை கவுன்சலிங் மூலம் இடம் கிடைக்காது எனத் தெரிந்தால் நர்சிங் மற்றும் பார்மசி படிப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்து சுயநிதிகல்லூரிகளில் சேரலாம்.

3. படிப்பிற்கு ஆகும் செலவைகணக்கிட்டு தம்மால் இயலும் படிப்பில் சேரவேண்டும்.

4. சேரும் கல்லூரி அரசு அங்கீகாரம் பெற்றதா என்பதை உறுதிசெய்த பின்னரே சேரவேண்டும்.

5. கட்டணம் அதிகம் கொள்ளை அடிக்கும் கல்லூரிகளில் சேராமல் புறக்கணித்து அரசு சார்ந்த ஏதாவது ஒருதுணை மருத்துவதுறையை தேர்ந்து எடுப்பது நல்லது.

6. உள்ளூர்களில் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படும் அங்கீகாரம் இல்லாத நிறுவனங்களில் சேரவேண்டாம். ஏனெனில் இவை பெரும்பாலும் முறையான அரசு அங்கீகாரம் இல்லாமல் நடத்தப்படுகின்றன. இங்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் வேலைபெற பயன்படாது. மேலும் அரசு பணிக்கு செல்ல இவை உதவாது.

7. புதிய கல்லூரிகளில் சேருவதாயின் அவற்றின் அங்கீகாரத்தை சரிபார்த்து பின்னரே சேரவேண்டும்.

8. நகர கல்லூரிகளில் படித்தால் எளிதில் வேலை வாய்ப்பு பெறலாம்.

9. ஒன்றுக்கும் மேற்பட்ட கல்லூரிகளில் விசாரித்து சிறந்த தரமான கல்லூரியில் சேர்வது சிறந்தது.

மருத்துவம் சேர முயற்சித்து இடம் கிடைக்காத மாணவர்கள் அரசு கல்லூரிகளில் இப்படிப்புகளில் சேர இடம் கிடைத்தால் கண்டிப்பாக சேரலாம். ஏனெனில் அரசு பணி உத்திரவாதத்துடன் மருத்துவருக்கு அடுத்த சம்பளம் பெறும் வாய்ப்பு இப்படிப்புகளுக்கு உள்ளது என்பது இன்றும் தொடர்கிறது..

B.Sc., Nursing (4yrs)

இந்த துறை சேவை மனப்பான்மையுடன் செய்யும் பணி, நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது மற்றும் நோயாளிகளை பராமரிப்பது பற்றிய படிப்பாகும். இப்படிப்பில் மருத்துவ படிப்பு போன்று நோய்கள் பற்றியும், சிகிச்சை அளிப்பது பற்றியும் கற்று தரப்படுகின்றன. பொதுவாக மருத்துவமனைகளில் மருத்துவர்கள் நோயாளிகளை சோதித்து நோய் காரணிகளை கவனித்து அதன் அடிப்படையில் சிகிட்சை முறைகளை பரிந்துரைப்பார். அதன் அடிப்படியில் உரிய நேரத்தில் நோயாளிக்கு ஊசி, மருந்து வழங்கி நோயாளியை பராமரிக்கும் பணியை செய்வது நர்ஸ்கள் ஆவர்.

இந்தியாவில் மட்டுமின்றி, உலக அளவில் நர்ஸுகளின் தேவை அதிகமாக உள்ளது. தனியார் மருத்துவமனைகள் மட்டுமின்றி, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் என அரசு மருத்துவ துறைகளிலும் நர்ஸுகளுக்கு அதிக பணி வாய்ப்புகள் உள்ளன.

B.Pharm - Pharmacy (4yrs)

சிறப்புமிக்க படிப்பு மிகவும் கவனாமாக கையாள வேண்டிய துறை. இது மருந்து மற்றும் அவற்றை கையாள்வது பற்றிய படிப்பாகும். இதில் மருந்தின் தன்மை, அதில் சேர்க்கப்படும் வேதிப்பொருட்கள், வேதிப்பொருட்களின் தனித்தன்மை, அவற்றை என்ன அளவில் சேர்க்கலாம், அவை போக்கும் நோய்கள், அவற்றால் ஏற்படும் பக்க விளைவு குறித்து கற்பிக்கப்படுகிறது. மருத்துவர்கள் பிரிஸ்கிரிப்ஷனில் எழுதியிருப்பதைப் பார்த்து மருந்துகளைத் தருவதற்கான உரிமை உடையவர்கள் பார்மசிஸ்ட்டுகள் எனப்படும் மருந்தாளுநர்கள் மட்டுமே.

இதனை முடிப்போர் சுயமாக மருந்து கடை வைக்கும் உரிமை பெறலாம். மேலும் பெரிய மருந்தகங்களிலும், மருத்துவமனைகளில் உள்ள மருந்தகப்பிரிவிலும் பணிபுரியலாம். மேலும் மருந்து தயாரிப்பு நிறுவனங்களில் பணி வாய்ப்பு பெறலாம். அரசு துறையிலும் வேலை வாய்ப்புகள் உள்ளன.

B.P.T - Physiotherapy (4&1/2yrs)

இந்த துறை நோயாளியை தொட்டு அதன் மூலம் மருத்துவம் செய்யும் படிப்பு. இதில் மக்களுக்கு ஏற்படும் உடல் இயக்க குறைபாடுகளை தீர்க்கும் விதமான பயிற்சிகள் கற்றுத்தரப்படுகின்றன. மனித உடலில் சரியான இயக்கம் மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிப்பதும், அவயங்களின் ஒழுங்கற்ற தன்மையை சீராக்குவதும் பிசியோதெரபியின் முக்கிய பணியாகும். எலும்பு முறிவு, சதைப் பிடிப்பு, மூட்டு வலி போன்றவற்றுக்கு சிகிச்சை அளித்து வலியைப் போக்குவதில் பிசியோதெரபிஸ்டுகள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். இப்படிப்பில் நோயாளிகளுக்கான உடற்பயிற்சி முறைகள் மற்றும் இதர தெரபி முறைகள் கற்றுத்தரப்படுகின்றன.

பிசியோதெரபிஸ்டுகள் மக்களுக்கு ஏற்படும் பிறவி குறைபாடுகள், விபத்து மூலமான பாதிப்புகள், நோய்கள் மூலம் சரிவர இயங்காத அவயங்களை நன்கு இயங்க செய்ய உதவுவதுடன், நல்ல நிலையில் எப்படி உடல் அவயங்கள் இயங்குமோ அந்த நிலைக்கு அவற்றை மீட்டு கொண்டு வரும் பணியை செய்கின்றனர். பிசியோ தெரபிஸ்ட்களுக்கு மருததுவமனைகள், புனர்வாழ்வு மையங்கள் போன்ற இடங்களில் பனி வாய்ப்புகள் உள்ளன. மேலும் தனியாக கிளினிக் வைத்தும் சிகிச்சை அளிக்கலாம்.

B.O.T - Occupation Therapy (4&1/2yrs)

இந்த துறை சற்று இயல்பாக உள்ள நிலை இருந்து நாம் நம்மை மாற்றி பிறகு செயல்படும் தனித்துவமான துறை. இயல்பு நிலையிலிருந்து மாறுபட்ட மனிதர்களின் செயல்பாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து, அதற்கேற்ப சிகிச்சை அளிப்பது 'ஆக்குபேஷனல் தெரபி' எனப்படும். சாப்பிடுவது, உடை மாற்றுவது போன்ற அன்றாட வேலைகளுக்காக நோயாளிகள் யாரையும் சார்ந்திருக்காமல் வாழ்க்கையை தமக்கு பிடித்த வகையில் மேற்கொள்ள தேவையான சிறப்பு சிகிச்சைகள் அளிப்பது குறித்து இப்படிப்பில் கற்று தரப்படுகிறது. சிகிச்சை அளிக்கும் விஷயத்தில் டாக்டர்கள், பிசியோதெரபிஸ்ட்களுடன் ஆக்குபேஷனல் தெரபிஸ்ட்களும் இணைந்து பணியாற்றுகின்றனர்.

பொதுவாக நோயாளிகளுக்கு செயற்கை உறுப்புகளை பயன்படுத்தவும், குறிப்பிட்ட தசைகளின் இழந்த செயல்பாடுகளை மீட்கவும் ஆக்குபேஷனல் தெரபிஸ்ட்கள் சிகிச்சை அளிக்கின்றனர். இப்படிப்பை முடித்தவர்கள் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க புதிய உபகரணங்கள் வடிவமைக்கும் தொழில்நுட்ப ஆலோசகர்களாகவும், பயிற்சியாளராகவும், ஆசிரியராகவும் பணியாற்ற முடியும். மேலும் தனியார் கிளினிக், அரசு மருத்துவமனைகள், மறுவாழ்வு மையங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளிகள், சுகாதார மையங்கள், விளையாட்டு மையங்கள் போன்றவற்றிலும் மனநல சிகிச்சை மையங்கள், கல்லூரிகளிலும் பணி வாய்ப்புகள் உள்ளன.

B.Optom - Optometry (4yrs)

பார்வை எவ்வளவு முக்கியம் அதை சார்ந்த துறை இது. கண்களின் அமைப்பு மற்றும் அதன் செயல்பாடுகளை பற்றி படிக்கும் படிப்பு ஆப்தொமெட்ரி எனப்படும். பார்வை குறைபாடு

தொடர்பான பரிசோதனைகள், கண் நோய்களை கண்டறியும் முறைகள், கண் சிகிச்சை முறைகள் பற்றி இப்படிப்பில் கற்று தரப்படுகிறது.



மருத்துவமனைகளில் பார்வை தொடர்பாக ஏற்படும் பிரச்சினை களை கண்டறிந்து கிட்டப் பார்வை அல்லது தூரப் பார்வை உடையவர்கள் என்ன மாதிரியான கண்ணாடிகளை அணிய வேண்டும் என்பது போன்ற கண் தொடர்பான கோளாறுகளுக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளிப்பதற்கு முன் தேவையான பரிசோதனைகளை செய்து, அதற்கேற்ற சிகிச்சை குறிப்புகளை வழங்குபவர்கள் 'ஆப்தொமெட்ரிஸ்ட்' ஆவர். மருத்துவ மனைகளில் கண் மருத்துவர்களுக்கு உதவியாளர்களாக இவர்கள் செயல்படுவர்.

B.Sc., Radiology & Imaging Tech (4yrs)

மிகவும் பாதுகாப்பு உபகரணங்களுடன் பணியாற்ற வேண்டிய படிப்பு இது, கதிரியக்க தொழில்நுட்பத்தை பற்றி படிக்கும் படிப்பாகும். மனித உடல் உறுப்புகளின் அமைப்புகள் மற்றும் அதன் செயல்நிலை எவ்வாறு உள்ளது என்பதை அறிந்து கொள்ள இந்த படிப் உதவுகிறது. இதில், தேர்ச்சி பெற்றவர்கள் 'ரேடியாலஜிஸ்ட்' என்று அழைக்கப்படுவர். ரேடியாலஜி படிப்பில் எக்ஸ்ரே, சி.டி.ஸ்கேன், எம்.ஆர்.ஐ. தொழில்நுட்பம் போன்றவற்றை பயன்படுத்தவும் மற்றும் பரிசோதனை செய்யும் முறைகள் பற்றியும் கற்பிக்கப்படுகிறது.



மருத்துவமனைகளில் கதிர்வீச்சினை(எக்ஸ்ரே) மனித உடம்புக்குள் செலுத்தி, குறிப்பிட்ட உறுப்புக்களை படம் எடுத்து, நோய்களை கண்டறிவதும் மற்றும் காயங்கள் அல்லது எலும்பு முறிவுகளை அளவிடுவதும் ரேடியாலஜிஸ்ட்களின் பணியாகும்.

B.Sc., Radio Therapy Technology (4yrs)

இதுவும் மிகவும் பாதுகாப்பு உபகரணங்களுடன் பணியாற்ற வேண்டிய படிப்பு இது, கதிரியக்க தொழில்நுட்பத்தை கொண்டு நோய்களை குணமாக்கும் படிப்பு. ரேடியோ தெரபி மூலம் கேன்சர் நோய்களை குணபடுத்த முடியும். எக்ஸ் ரே மற்றும் சில கதிர்வீச்சுகள் செலுத்தி கேன்சர் செல்களை மட்டும் நம் உடலில் கொன்று சிகிச்சை செய்யும் கல்வி. இந்த படிப்புமிகப்பெறும் மருத்துவமடைகள் மற்றும் அனுபவம் மிக்க பெரிய மருத்துவமனைகள் பயன்படுத்தும் முறை

B.Sc., Medical Lab Technology (4yrs)

இந்த துறை நோய் கிரிமிகலோடு நாள் தோறும் பயனிகத்து கண்டறியும் துறை. இது மருத்துவ ஆய்வுக்கூட பரிசோதனைகள் மூலம் நோய்களை கண்டறிதல், நோயினை பகுத்து ஆராய்தல், மருத்துவரின் ஆலோசனைக்கு ஏற்ப ஆய்வுக்கூடத்தில் தேவையான பரிசோதனைகளை செய்து கொடுப்பதை பற்றிய படிப்பாகும்.

உடலில் உள்ள நீர் அளவு, ரத்தத்தின் அளவு, உப்பின் அளவு, சர்க்கரை அளவு, சதை, கெமிக்கல் அனாலிஸ், உடலில் உள்ள செல்களின் எண்ணிக்கையை கண்டறியும் முறைகள், நோய் கிருமிகள் கண்டறிதல் போன்றவற்றை பற்றி இந்த படிப்பில் மாணவர்களுக்கு கற்று கொடுக்கப்படுகிறது.

லேப் டெக்னிசியன் எனப்படும் இவர்கள் மருத்துவமனைகளில் ஹெமாட்டாலஜி, இம்யூனாலாஜி, கிளினிக்கல் பேதாலஜி, பிளட் பேங்க் டெக்னாலஜி, மாலிகுலார் பேதாலஜி, பயோ கெமிஸ்டரி, மைக்ரோபயாலஜி மற்றும் சிரோலஜி உள்ளிட்ட பிரிவுகளிலும் மற்றும் மருத்துவ பரிசோதனை மையங்களிலும் பணியாற்ற முடியும்.

B.Sc., Dialysis Technology (4yrs)

இந்த துறை தினமும் நம்மை நாம் புதிய தொழில்நுட்ப மேம்படுதலுக்கு மாற்றிகொள்ள வேண்டிய துறை. இது மனித உடலின் ஆரோக்கியத்திற்கு காரணமாக அமையும் செயலான இரத்தத்தை சுத்தப்படுத்தும் பணியை செய்யும் சிறுநீரகங்கள் சேதமடைந்தாலோ அல்லது பிற நோய் தொற்றுகளால் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டு சிறுநீரகங்கள் செயல் இழந்தாலோ மேற்கொள்ளப்படும் சிகிச்சையான டயாலிசஸ் பற்றிய படிப்பாகும். இப்படிப்பில் டயாலிசஸ் இயந்திரத்தை பொருத்துதல், ஸ்டெர்லிலைசேஷன் கலவை தயாரித்தல், நோயாளியை கண்காணித்தல், டயாலிசஸ் இயந்திரத்தை இயக்குதல், மேற்பார்வை செய்தல், இரத்த ஓட்டத்தை கணக்கிடுதல், இயந்திரத்தை சுத்தம் செய்தல் மற்றும் ஆய்வு செய்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

டயலாசிஸ் சிகிச்சைக்கு டயாலிசஸ் டெக்னிஷியன்களின் பணி அவசியம் என்பதால் மருத்துவம் மற்றும் சுகாதார துறைகளில் அதிக வேலை வாய்ப்புகள் உள்ளன.

B.Sc., Operation & Anesthesia Technology (4yrs)

இந்த துறை இல்லாமல் அறுவை சிகிச்சை இல்லை அந்த அளவுக்கு மிக முக்கிய துறை. நோயாளிகளின் உடல் தகுதிகளை ஆராய்ந்து, அறுவை சிகிச்சையின் போது அவர்களுக்கு செலுத்தப் படும் மயக்க மருந்தின் அளவை நிர்ணயிப்பது தொடர்பான படிப்பாகும். இப்பணி யினை மேற்கொள்பவர்கள் அனஸ்தீசியா டெக்னால ஜிஸ்ட்கள் ஆவர்.

இப்படிப்பில் மயக்க மருந்து உபகரணங்கள் இயக்குவது , மயக்க மருந்தின் நுட்பங்கள் மற்றும் நோயாளிகளின் உடல் தகுதிக்கு ஏற்றவாறு மயக்க மருந்தின் அளவை கணக்கிடும் முறைகள் மற்றும் மயக்க மருந்தை செலுத்தியவுடன் கண்காணிக்கும் விதிமுறைகள் போன்றவை கற்று தரப்படுகின்றன.

மருத்துவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கும், தீவிர மருத்துவ பராமரிப்பு பிரிவுகளிலும் இப்படிப்பை முடித்தவர்கள் பெறும் அளவில் தேவைப்படுகின்றனர். CCU மற்றும் ICU பிரிவிலும், அறுவை சிகிச்சைக்கு முன் மயக்க மருந்து வழங்கும் மயக்க மருந்து வல்லுநர்களாகவும், அறுவை சிகிச்சை அறையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடன் இணைந்தும் இவர்கள் வேலை செய்வர்.

B.Sc., Cardiac Pulmonary Perfusion Technology (4yrs)

இதயம் என்பது ஒரு மனிதனுக்கு எவ்வளவு முக்கியம் அதன் செயல்பாடு பழுதுபட்டதால், அதை இந்த துறை வல்லுனர் இல்லாமல் சரிசெய்ய இயலாது. இதய செயல்பாடு மற்றும் அதன் இயக்கம் பற்றிய படிப்பாகும். இதய அறுவை சிகிச்சையின் போது உடலின் ரத்த ஓட்டம் நின்றுவிடாமல் இருக்கவும், சீராக செயல்படுகின்றதா என்பதை கண்காணிக்கவும் 'பெர்பியூஷனிஸ்ட்' உதவுகின்றனர். அதனால், பெர்பியூஷனிஸ்ட் இல்லாமல் இருதய அறுவை சிகிச்சை நடைபெறுவதில்லை.



B.Sc., Respiratory Therapy (4yrs)



ஒரு மனிதன் தன்னிச்சையாக மூச்சை விடுவதில் சிக்கல் வரும் நேரத்தில் இந்த துறை பணி அளப் பெரியது. புற்றுநோய், ஆஸ்துமா , மூச்சுக் குழாய் அழற்சி, நிமோனியா மற்றும் இருதய நோய்களால் ஏற்படும் சுவாச பிரச்சனைகளுக்கு சிகிச்சை அளிப்பது தொடர்பான படிப்பாகும்.

இதில் மருந்துகளை நிர்வகித்தல், கார்டியோ பல்மோனாரி சிகிச்சை தொடர்பான உபகரணங்களை கையாள்வது, ஆக்ஸிஜன் மற்றும் பிற வாயுக்களின் அளவை தீர்மானிப்பதற்கு இரத்த மாதிரிகளை பகுப்பாய்வு செய்தல், செயற்கை மூச்சுக் குழாய்களை நிர்வகித்தல், முக்கிய சுவாச அறிகுறிகளை மதிப்பீடு செய்தல், நோயாளிகளுக்கு மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் பற்றி கற்றுக் கொடுக்கபடுகிறது.

இப்பயிற்சி முடிப்பவர்களுக்கு பெரிய மருத்துவமனைகளிலும், இதய நோய் மருத்துவமனைகளிலும் வேலை வாய்ப்புகள் உள்ளன.

BASLP Audiology & Speech Language Pathology (4yrs)



ஒரு மனிதன் காது கேளாமல், வாய்பேச முடியாமல் போனால் பிறரின் கருத்துக்களை இவர் கேட்கவும் இவரின் கருத்தை பிறர் கேடகவும் வழியில்லாமல் போகும் குறைபாடு சரிசெய்ய உதவும் கல்வி. காது கேட்பதில் மற்றும் பேசுவதில் குறைபாடுள்ள குழந்தைகள், கேட்கும் திறன் மற்றும் பேசும் திறனை இழந்தவர்கள், திக்குவாய் போன்ற பிரச்சனைக்கு உட்பட்டவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது குறைபாடுகளை கண்டறிந்து அதைக் குணப்படுத்தும் சிகிச்சை முறைகள் பற்றிய படிப்பாகும்.

இப்படிப்பை முடிப்பவர்களுக்கு மருத்துவமனைகள் மற்றும் காது கேளாதோர் கல்வி நிறுவனங்களில் ஆடியாலஜிஸ்ட் மற்றும் ஸ்பீச் தெரபிஸ்ட்களுக்கான பணி வாய்ப்புகள் அதிகம். மேலும், இதில் பட்டப்படிப்பை படித்தவர்கள் தனியாக கிளினிக் வைத்து சேவை அளிக்கலாம். இப்படிப்புக்கு வெளிநாட்டில் நல்ல வேலைவாய்ப்புகள் உள்ளன.

B.Sc. Medical Record Technician (4yrs)

இந்த துறை நோயாளிகளின் மருத்துவ விபரங்கள் பராமரிப்பு பற்றிய படிப்பாகும். இதில் மனித உடல்கூறு, நோய்கள், முக்கிய நோய் தீர்க்கும் மருந்துகள், நோயாளிகளின் நோய் குறிப்புகளைப் படித்து அதற்கேற்ப அவற்றை கையாளும் பயிற்சி போன்றவை கற்றுத்தரப்படுகின்றன. மேலும் தொழில்நுட்ப காலத்திற்கு ஏற்றவாறு , மின்னணு சாதன அமைப்பில் விவரங்களை பதிவு செய்வது, அதன் விதிமுறைகள், எத்தகைய தகவல்கள் இடம்பெற வேண்டும் என்பது பற்றியும் கற்பிக்கப்படுகின்றன.

மருத்துவமனைகளில் நோயாளிகளின் விபரங்கள், நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகள் பற்றின முழு விவரங்கள் போன்றவற்றை பராமரிப்பது முக்கியமான பணிகளில் ஒன்றாகும். எனவே இப்படிப்பு படித்தவர்களுக்கு மருத்துவ துறைகளிலும், பெரிய மருத்துவமனைகளிலும் வேலை வாய்ப்புகள் உள்ளன.

B.Sc. Cardiac Thechnology (4yrs)

இந்த கல்வி நவீன கால தொழில்நுட்பம் பலவற்றை உள்ளடக்கிய துறை. இதயம் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகள், சிகிச்சை முறைகள் பற்றிய படிப்பாகும். இப்படிப்பில் அல்ட்ரா சவுண்ட் மூலம் இதய படங்கள் எடுக்கும் தொழில்நுட்ப முறைகள், எடுத்த படங்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் நோய் கண்டறியும் செயல்முறைகள் பற்றி கற்பிக்கபடுகின்றன. இதய நோய்கள் கண்டறிவதிலும், அதற்கு சிகிச்சை அளிப்பதிலும் இதய மருத்துவர்களுக்கு இரத்த ஓட்ட நிலைகள் மற்றும் இதயத்தில் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை துல்லியமாக கண்காணித்து மருத்துவ அறிக்கையை தயார் செய்து தருவது கார்டியோ வாஸ்குலர் டெக்னாலஜிஸ்ட்கள் உதவுகின்றனர். வேலை வாய்ப்பு நிறைந்த துறை.

B.Sc., Operation Theatre & Anesthesia Technology (4yrs)

எந்த விதமான அறுவை சிகிச்சை செய்யவும் ஒரு வழக்கம் & வழிமுறை உண்டு அதை பற்றிய படிப்பு இது. மருத்துவ அறுவை சிகிச்சை அறையில் தேவைப்படும் மருத்துவ உபகரணங்களை கையாளுதல் பற்றிய படிப்பாகும். அறுவை சிகிச்சையின் போது மருத்துவருடன் இணைந்து தேவையான உதவிகளை செய்வது, அறுவை சிகிச்சைக்கு முன் அறுவை சிகிச்சை அறை மற்றும் தேவைப்படும் கருவிகளை தயார்படுத்தி வைப்பது என பல்வேறு வேலைகளை ஆபரேஷன் தியேட்டர் டெக்னீஷியன்ஸ் மேற்கொள்கின்றனர்.

பெரிய மருத்துவமனைகள் மற்றும் ஆபரேஷன் தியேட்டர்களில் இவர்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளது.

B.Sc., Accident & Emergency Care Technology (4yrs)

விபத்து என்பது எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம் அப்படி நடந்த விபத்தில் பாதிக்கப்பட்ட நபரை மருத்தவமனை கொண்டு செல்லும் முன்பும் கொண்டு சென்ற உடன் செய்யும் சிகிச்சை பற்றிய கல்வி ஆகும். அவசர சிகிட்சை தேவைப்படுவோருக்கு வழங்க வேண்டிய சிகிட்சை பற்றிய படிப்பாகும். இதில் அவசர சிகிட்சை தேவைப்படுவோரை பாதுகாப்பாய் மருத்துவமனைக்கு கொண்டு செல்வது, உடனடி முதலுதவி அளிப்பது மற்றும் அறுவை சிகிட்சைக்கு விரைவாக எப்படி உதவுவது என்பது பற்றி கற்பிக்கப்படுகிறது.

இப்படிப்பை முடிந்தவர்கள் மருத்துவர்கள் இல்லாத சூழலில் உயிரை காக்க செய்ய வேண்டிய அவசர மருத்துவ உதவியை இவர்கள் வழங்குவர். உள்ளூர் மட்டுமின்றி வெளிநாட்டு வேலைவாய்ப்பும் அதிகம் உள்ள கல்வி இதுவாகும்.

B.Sc., Physician Assistant (4yrs)

ஒவ்வொரு துறை சார்ந்த மருத்துவரும் மருத்துவ துறை சார்ந்த மற்றோரு துறை சார்ந்து தான் இயங்குகிறார்கள். அதுபோல தான் மருத்துவர்களும் தன்னிடம் சிகிச்சை பெறவரும் நோயாளிகளை கவனிக்க கண்காணிக்க பிற துறையை சார்ந்து தான் உள்ளார்கள். மருத்தவருக்கு உதவியாளராக, மருத்துவருக்கு துணையான பணி செய்ய மருத்தவ உதவியாளர் இவர். இநத துறையில் பிரகாசமான வேலை வாய்ப்புகள் உண்டு.

B.Sc., Critical Care Technology(3yrs)

இந்த துறையில் உள்ளவர் மிக நுனுக்கமானவராகவும் மற்றும் புத்திசாலித்தனமாக செயல்படக்கூடியவராக இருக்க வேண்டும். தீவர சிகிச்சை மற்றும் அதிதீவிர சிகிச்சை பெறும் உயிரை காப்பாற்ற தொடர்ச்சியான மருத்துவம் மற்றும் தொழில்நுட்பம் பயன்படுத்தபடும் அத்தகைய தொழில்நுட்ப தகவல்களை மருத்துவத்தை அறிந்துகொள்ள கூடிய கல்விதான் இது. மிகப்பெரிய மருத்துவமனைகளில் அதிக வேலை வாய்ப்பு உண்டு.

B.Sc. Dental Hygiene & Dental Mechanic

முகஅழகு என்பது பல் அழகில் அதிகமாக உள்ளது. விபத்து மற்றும் பிற நோய் காரணமாக பல் & தாடை ஏற்படும் பற்களில் ஏற்படும் குறைகளை நீக்க உதவும் துறை தான் இந்த துறை. பல் மருத்துவ சிகிச்சை தொடர்பான படிப்பாகும். பல் பராமரிப்பு, பல் பாதுகாப்பு மற்றும் பல் சிகிச்சை தொடர்பாக இப்படிப்பில் கற்று தரபடுகிறது. இப்பயிற்சி முடித்தவர்கள் பல் மருத்துவ மனைகளில் பல் மருத்துவருக்கு துணையாக செயல்படுவர். பல் மருத்துவ துறை சார்ந்த அனைத்து பொருட்களின் செயல்பாடுகள், தொழில்நுட்ப பொருட்களின் நுனுக்கங்கள், அதில் ஏற்படுள் குறைபாடுகள் மற்றும் குறைநீக்கி சரி செயதல் போன்ற பயிற்சிகள் வழங்கபடுகின்றன். மிக அருமையான வாய்ப்புகள் உள்ள துறை.

ITI | ஐடிஐபடிப்பு

ஐடிஐ (ITI)(INDUSTRIAL TRAINING INSTITUTE COURSE)அதாவது தொழிற்கல்வி படிப்பு இந்தப் படிப்பு டெக்னிக்கல் (technical) மற்றும் நான் டெக்னிக்கல் (Non technical) துறைகளில் வேலை செய்வதற்கான பயிற்சி

அளிக்கும் ஒன்றாகும். மேலும் இந்த தொழில் கல்வி துறைகள் அனைத்துமே அரசின் directorate general of employment of training(DGET) and ministry of labour and employment, இதன் கீழ் இயங்கும்.



மேலும் தொழிற் கல்வியை பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் பெரும்பாலும் அரசு நிறுவனங்கள் ஆகவோ அல்லது அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகத்தான் இருக்கும்.

இந்த துறைக்கும் ஏனைய படிப்பு சார்ந்த, அதாவது பள்ளிக்கூட மற்றும் கல்லூரி படிப்புக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால் இந்தத் துறைகளின் மூலம் எளிதில் வேலை வாய்ப்பை பெற முடியும்.

.

TNTJ STUDENTS WING

தகுதிகள்

இதற்கு பெரிதாக ஏதும் கல்வித் தகுதிகள் தேவை இல்லை. எட்டாம் வகுப்பு பத்தாம் வகுப்பு பன்னிரண்டாம் வகுப்பு படித்து இருந்தாலே போதுமானது.

ஆண்டுகள்

தற்போது இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் அரசு தொழில் கல்விப் பயிற்சியை அளித்து வருகிறது. இந்த படிப்பு பயிற்சியின் கால அளவானது பிரிவுக்கு ஏற்றார்போல் 6 மாதங்கள் முதல் 4 வருடங்கள் வரை ஆகும்.இந்தப் பயிற்சிகளுக்கான மாணவர் சேர்க்கை ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம்வரை நடைபெறுகின்றன. குறுகிய கால தொழிற்பிரிவுகளுக்கு அவ்வப்போது சேர்க்கை நடைபெறுகிறது. பெரும்பாலும் மதிப்பெண்கள் அடிப்படையிலும், அரசு நிர்ணயித்த விதிமுறைகளின்படியும் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. ஆண்டுதோறும் தமிழகம் முழுவதும் அரசு மற்றும் தனியார் ஐ.டி.ஐ.களில் சுமார் 70 ஆயிரம் மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பாடப்பிரிவு

தொழிற்கல்வி பெரும்பாலும் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. டெக்னிக்கல் (technical) மற்றும் நான் டெக்னிக்கல் (Non technical)இதில் பல பிரிவுகள் உள்ளன.

எட்டாம் வகுப்பு படித்தவர்கள் கீழ்க்கண்ட (technical) துறையில் பயிலலாம்.

கம்பியாள் (Wireman)	வர்ணம் அடிப்பவர் (Painter)	கம்மியர் விவசாய இயந்திரம் (Mechanic Agricultural Machinery)
பற்ற வைப்பவர் (Welder)	உலோகத் தகடு வேலையாள் (Sheet Metal Worker)	தச்சர் (Carpenter)
குழாய் பொருத்துபவர் (Plumber)	கட்டுமான வேலை செய்பவர் (Mason Building Constructor)	அச்சு வார்ப்பவர் (Foundryman),
கம்மியர் இயந்திரக் கலப்பை (Mechanic - Tractor)	மாதிரி அமைப்பு செய்பவர் (Pattern Maker)	

பத்தாம் வகுப்பு முடித்தவர்கள்

பத்தாம் வகுப்பு படித்தவர்கள் கீழ்க்கண்ட (technical) துறையில் பயிலலாம்.

ஆடை தயாரித்தல் (Dress Making)	லித்தோ ஆப்செட் மெஷின் மைண்டர் (Litho Offset Machine Minder)
கைவினைஞர் உணவுத் தயாரிப்பவர் (Craftsman Food Production)	நிறம் அகற்றுதல் மற்றும் சாயம் தோய்த்தல் மற்றும் காலிகோ அச்சடித்தல் (Bleaching Dyeing and Calico Printing)
ஓட்டுநருடன்கூடிய கம்மியர் (Driver-cum-Machine)	டேட்டா எண்ட்ரி ஆபரேட்டர் (Data Entry Operator)
கம்ப்யூட்டர் எய்டட் எம்ப்ராய்டரி மற்றும் நீடில் ஒர்க் (Computer Aided Embroidery and Needle Work)	தானியங்கி ஊர்தி (Automobile Sector)
உற்பத்தி மற்றும் தயாரிப்பு (Production and Manufacturing)	மின்சார பணி (Electrical), கட்டுமான பொருத்துநர் மற்றும் பற்ற வைப்பவர் (Fabrication - Fitting and Welding)
தோல்பொருள் மற்றும் காலணி (Leather Goods and Footwear)	உபசரிப்பு மேலாண்மை (Hospitality Management)
கட்டுமானம் மற்றும் மர வேலைப்பாடுகள் (Construction and Wood Working)	

12ம்வகுப்பு முடித்தவர்கள்.

பொருத்துநர் (Fitter)	கடைசல் பிடிப்பவர் (Turner)
இயந்திர வேலையாள் (Machinist)	இயந்திர வேலையாள் - அரவை இயந்திரம் (Machinist - Grinder)
கம்மியர் - குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பநிலைகட்டுப்படுத்துதல் (Mechanic - Refrigeration and Air - Conditioner)	கம்மியர் பராமரிப்பு -வேதிப்பொருள் நிறுவனம் (Maintenance Mechanic - Chemical Plant)
கம்மியர் கருவிகள் - வேதிப்பொருள் நிறுவனம் (Instrument Mechanic - Chemical Plant)	கம்மியர் கருவிகள் (Instrument Mechanic)
கம்மியர் - மோட்டார் வண்டி (Mechanic - Motor Vehicle)	இயந்திரப்பட வரைவாளர் (Draughtsman - Mechanical)
கட்டிடப் பட வரைவாளர் (Draughtsman - Civil)	நில அளவையாளர் (Surveyor)
மின்சாரப் பணியாளர் (Electrician)	மின்முலாம் பூசுபவர் (Electro Plater)
கம்மியர் - வானொலி மற்றும் தொலைக்காட்சி (Mechanic-Radio and Television)	கம்மியர் மின்னணுவியல் (Electronic Mechanic)

தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணுவியல் சாதனங்கள் பராமரிப்பு (Information Technology and Electronics System Maintenance)	தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணுவியல் சாதனங்கள் பராமரிப்பு (Information Technology and Electronics System Maintenance)
லிப்ட் மெக்கானிக் (Lift Mechanic)	கம்மியர் மற்றும் செயலாள் மின் அணு மற்றும் தகவல் தொடர்பு அமைப்புமுறை (Mechanic Cum Operator Electronics Communication System)
கருவி மற்றும் அச்சு செய்பவர் (Tool and Die Maker)	கம்மியர் இயந்திரப் பராமரிப்பு (Mechanic - Machine Tool Maintenance)
கம்மியர் (டீசல்) (Mechanic Diesel)	பம்ப் ஆப்பரேட்டர் - மெக்கானிக் (Pump Operator - Cum Mechanic)
பிளாஸ்டிக் செய்முறை பணியாள் - செய்முறை செயலாள் (Plastic Processing Operator)	கம்மியர் ஆட்டோ எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் (Mechanic Auto Electrical and Electronics)
கம்மியர் இரு சக்கர வாகனம் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு - (Two Wheeler Mechanic)	

மேலும் non-technical பாடப்பிரிவில் (Non-Technical Courses)

எண்ணியல் புகைப்படக் கலைஞர் (Digital Photographer)	கணினி இயக்குபவர் மற்றும் திட்டமிடுதல் உதவியாளர் (Computer Operator and Programming Assistant)
டெஸ்க்டாப் பப்ளிசிங் ஆபரேட்டர் (Desktop Publishing Operator)	செயலகப் பயிற்சி (Secretarial Practice)
சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சு (தமிழ் மற்றும் ஆங்கிலம் வழியில்)	நெட்ஒர்க்டெக்னிஷியன்" (Network Technician)

Students Wing

மேலே சொல்லப்பட்ட அனைத்து துறையும் இருக்கக்கூடிய மொத்த துறையின் ஒரு சிறு பகுதியே இதில் கிட்டத்தட்ட 150-க்கும் மேற்பட்ட துறைகள் இருக்கின்றன எனவே மாணவர்கள் தங்களுக்கு என்ன துறை பிடித்திருக்கின்றது எந்தத் துறையில் சென்றால் நாம் சாதிக்கலாம் என்று நினைக்கிறார்களோ அந்த துறையை தெளிவாக தேர்ந்தெடுத்து சென்றால் நிச்சயமாக எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்

கல்லூரிகள்

தொழில் வளர்ச்சியின்மூலம் உருவாகும் வேலை வாய்ப்புகளை, இளைஞர்கள் பெற வேண்டும் என்ற நோக்கிலும், தொலைநோக்குப் பார்வையுடனும் தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைமூலம் மாநிலங்கள் முழுவதும் 60 இடங்களில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை இயக்கி வருகின்றன. இதுதவிர சுமார் 620 தனியார்

தொழில் பயிற்சி நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. எனவே மாணவர்கள் தங்களுக்கு அருகில் என்ன கல்லூரி இருக்கின்றதோ அந்த கல்லூரியில் பயிலலாம். அதேபோல இந்தப் படிப்பிற்கு மாவட்ட கலந்தாய்வு மூலம் செல்லலாம். மாணவர்கள் தாங்கள் நல்ல மதிப்பெண் வைத்து இருக்கின்றோம் என்று நினைத்தால் கலந்தாய்வின் மூலம் செல்லலாம் அவ்வாறு கலந்தாய்வு மூலம் சென்றால் ஃபீஸ் மிகவும் குறைவாகத்தான் இருக்கும். இல்லை என்றால் நேராக கல்லூரியை அணுகியும் சேரலாம் அவ்வாறு சேர்ந்தால் அவர்கள் வைத்திருக்கும் மதிப்பெண் அடிப்படையில் கல்லூரி நிர்வாகம் சேர்த்துக் கொள்வார்கள் ஆனால் கலந்தாய்வில் செல்வதைவிட இவ்வாறு செல்வதால் ஃபீஸ் சற்று கூடுதலாக இருக்கும்.

வேலைவாய்ப்பு

மேலும் இத்தொழில் கல்வியை முடித்த மாணவர்களுக்கு all India trade test (AITT) என்று சொல்லக்கூடிய ஒரு தேர்வு உண்டு. இதில் அவர்கள் வெற்றி பெற்றால் அவர்களுக்கு national trade certificate என்று சொல்லக்கூடிய சான்றிதழ் கிடைக்கும் இதன் மூலம் அவர்களது வேலை வாய்ப்பு பிரகாசமாகும். மற்ற பட்டப்படிப்பை பயிலும் மாணவர்களை விட இந்தத் துறையை பயிலும் மாணவர்களுக்கு வேலை மிகக் குறுகிய காலத்திலேயே கிடைக்கும்.

TNTJ

TNTJ STUDENTS WING

AFTER 12TH ? | பன்னிரண்டாம் வகுப்பு முடித்த பிறகு நிறைய வழிகளில் மேற்படிப்பு படிக்கலாம்

வருடம் தோறும், மார்ச் ஏப்ரல் மாதங்கள் என்பது பள்ளி பருவபடிப்பை முடித்துவிட்டு பன்னிரண்டாம் வகுப்பில் எவ்வளவு மதிப்பெண்கள் பெறுவோம்; அதன்பின் என்ன படிப்பது? எங்கு படிப்பது? என மாணவர்களுக்கும்; தங்களுடைய பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக எந்த படிப்புகளை நம்பிள்ளைகள் படித்தால் நன்றாக இருக்கும் என்று பெற்றோர்களுக்கும்; பலவிதமான சிந்தனைகளும், கேள்விகளும், சந்தேகங்களும் எழக்கூடிய மாதங்கள் இவை. இதுபோன்ற சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் விடை அளிக்கும் விதமாக நாம் இந்தக் தொடர் கட்டுரையை தொகுத்துள் ளோம். முதன்மையாக, என்னென்ன படிப்புகள் பன்னிரண்டாம் வகுப்பிற்கு பிறகு படிக்க இயலும் என்பதை பார்ப்போம்,



TNTJ Students Wing

10 ஆம் வகுப்பு முடித்த பிறகு, மாணவர்கள் அவர்களுடைய விருப்ப பாடங்களை தேர்வு செய்திருப்பார்கள். அதன் அடிப்படை யில் கீழ்காணும் பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன.

1. இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் (அல்லது) தாவரவியல் மற்றும் விலங்கியல் பிரிவு.
2. கணிதம், இயற்பியல், வேதியியல், கணினி அறிவியல்
3. இயற்பியல், வேதியியல், கணிதம் மற்றும் உயிரியல் பிரிவு
4. கணக்குப்பதிவியல், பொருளாதாரம், வணிகவியல், வரலாற்றுப் பாடங்களைக் கொண்ட பிரிவு.
5. தொழிற்படிப்பு (ஒகேஷனல் கோர்ஸ்) பிரிவு.

TNTJ

TNTJ Students Wing

AFTER 12TH (MATHS)

- Maths, Physics, Chemistry
- B.Sc., (Maths, Physics, Chemistry, Comp. Science, etc.,)
- B.Sc., Actuarial Science, Statistics
- Diploma In Engineering (Lateral Entry)
- B.E., B. Tech., B. Arch., B. Plan.,
- Pilot, NDA (Army, Navy)
- Certificate & Diploma Courses
- Integrated Courses

TNTJ Students Wing

AFTER 12TH (BIOLOGY)

- B.Sc., Botany & Zoology
- Allopathy Medicine (MBBS, BDS, DVM)
- AYUSH Medicine
- B.Sc., (Microbiology, Bio Chemistry, Bio Tech.,)
- Para Medical
- B. Tech Agriculture/ Bio Tech/ Dairy Tech (If Maths)
- Certificate & Diploma Courses
- Teaching

பிரிவு-1உயிரியல் (அல்லது) தாவரவியல் மற்றும் விலங்கியல் பிரிவை சார்ந்தவர்கள்:-Physics, chemistry, botany, zoology or biology)

இந்த பிரிவை சேர்ந்தவர்கள், மருத்துவம், துணை மருத்துவம், விவசாயம் உட்பட பல துறைகளில் நுழையும் வாய்ப்புகள் உண்டு.. மருத்துவத் துறையைப் பொறுத்தவரை, கீழ்காணும் மருத்துவ துறையை தேர்ந்தெடுத்து மருத்துவராக சேவையாற்ற முடியும்.

அலோபதி மருத்துவம்,	சித்த மருத்துவம்
ஹோமியோபதி மருத்துவம்	ஆயுர்வேத மருத்துவம்
யுனானி மருத்துவம்	இயற்கை மருத்துவம்
கால்நடை மருத்துவம்	

மருத்துவர் ஆவதற்கு "நீட்" (NEET) என சொல்லப்படக்கூடிய நுழைவுத்தேர்வு கட்டாயம்.மருத்துவ வாய்ப்பை தவற விட்டவர்கள், துணைமருத்துவ இளநிலை பட்டப்படிப்புகளான (paramedical),

1. பிசியோதெரப்பி (Physiotherapy),
2. ஆக்குபேஷனல் தெரப்பி (Occupational Therapy),
3. பார்மசி (Pharmacy),
4. நர்ஸிங் (Nursing)

உள்ளிட்ட படிப்புகளும், வேளாண் துறை சார்ந்த படிப்புகளையும் தேர்ந்தெடுக்கலாம். இதில், அக்ரிகல்ச்சர் (Agriculture), ஹர்டிகல்ச்சர் (Horticulture), போன்ற படிப்புகளையும் தேர்ந்தெடுக்கலாம். இதுமட்டுமல்லாது, இளநிலை அறிவியல் (B.Sc.,) பட்டப் படிப்புகளையும் தேர்ந்தெடுக்கலாம்

இயற்பியல்,	வேதியியல்,	தாவரவியல்,
உயிரியல்	நுண்ணுயிரியியல்	

பிரிவு-2: கணிதம் மற்றும் கணினி பிரிவைச் சார்ந்தவர்கள், (Physics, Chemistry, Computer science & Maths)

இந்த பிரிவை தெரிந்தெடுத்தவர்கள், மருத்துவம் துணை மருத்துவம் என மேலே குறிப்பிட்ட எந்த ஒரு பிரிவையும் அவர்களால் தேர்வு செய்ய இயலாது. கணிதத்தை முதன்மையாக கொண்ட பொறியியல் உள்ளிட்ட பல முக்கியமான துறைகளை தேர்ந்தெடுத்து சாதிக்க இயலும். குறிப்பாக,

- பொறியியல் (Engineering),
- புள்ளியியல் (Statistics),
- கணிதம் (Maths)

பிற இளநிலை கலை மற்றும் அறிவியல், போன்ற துறைகளையும் தேர்ந்தெடுக்க முடியும். பொறியியல் துறையை பொறுத்தமட்டில், கலந்தாய்வின் (Counseling) மூலம் கல்லூரிகளில் சேர்வது சிறப்பானது. கடந்த ஆண்டு பொறியியல் படிப்புகளுக்கு கலந்தாய்வின் மூலம் பல கல்லூரிகளில் இடங்கள் நிரப்பப்படாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும், குறிப்பிடட அளவிற்கான மதிப்பெண்கள் எடுத்து இருந்தாலே போதுமானது ஆகையால் பொறியியல் படிப்பை மேற்கொள்வதற்கு கல்லூரிகளில் இடம் கிடைக்காதோ என்கிற அச்சம் தேவையற்றது. ஆனால், அதிகமான கட் ஆஃப் (Cut-off) மதிப்பெண்கள் (175க்கும் அதிகமாக) எடுத்து இருந்தாலே உங்களால் தரமான பொறியியல் கல்லூரியை தேர்ந்தெடுக்க முடியும்.

இதில், கூடுதலாக கவனிக்க வேண்டியவை; பொறியியல் படிப்பில் முதன்மை பிரிவுகளாக ECE, EEE, Mechanical, Civil, Chemical இன்ஜினியரிங் போன்ற பிரிவுகள் உள்ளன. இது மட்டுமல்லாமல், நாற்பதற்கும் நெருக்கமான பொறியியல் துறை படிப்புகளும் உள்ளன. இறைவன் நாடினால், இளநிலை கலைப் படிப்புகளாக, பொருளாதாரம், வணிகம், வணிகவியல் போன்ற படிப்புகளை அரசுக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கலாம். தற்போது ஏராளமான அரசு உறுப்புக் கல்லூரிகள் திறந்திருப்பதால் அதில் சேர்ந்து படிக்கலாம். கட்டணமும் குறைவு. அரசுப் பணித் தேர்வுகள் எழுத ஆர்வமுள்ளவர்கள், இளநிலைப் பட்டப்படிப்பில் தங்களுக்கு விருப்பமான பாடத்தைத் தேர்வுசெய்ய வேண்டும்.கடல்சார் படிப்புகளில் ஆர்வமிருந்தால், சென்னையில் உள்ள கடல்சார் பல்கலைக்கழகம் நடத்தும் நுழைவுத்தேர்வு எழுதி, அதில் சேரலாம்.

பிரிவு-3 கணிதம் மற்றும் உயிரியல் பிரிவை சார்ந்தவர்கள்:-(Physics, Chemistry, Biology & Maths)

இந்த பாடப் பிரிவை சேர்ந்தவர்கள், ஏறத்தாள அனைத்து துறைகளையும் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. மருத்துவம், துணை மருத்துவம் சார்ந்த படிப்புகள், பொறியியல், கணிதம் உள்ளிட்ட மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு பிரிவுகளிலும் உள்ள அனைத்து துறைகளையும் அவர்கள் தேர்ந்தெடுக்க இயலும்.

பிரிவு-4 கணக்குப்பதிவியல் (Accountancy, commerce, economics) பிரிவை சார்ந்தவர்கள்

- CPT Foundation (common proficiency test) தேர்வு எழுதலாம். இதில் தேர்ச்சிபெற்று (Chartered accountants) நேரடியாகப் பயிற்சி பெறலாம்.
- ICWAI (Institute of cost and works accountants of india), CMA மற்றும்
- ICSI (The Institute of Company Secretaries), CS நிறுவனங்களில் பயிற்சி பெறலாம்.

இளங்கலை வணிகவியல் (B.Com.,) மட்டுமல்லாது, பொருளாதாரம், மொழி, இலக்கியம், கலை சார்ந்த படிப்புகளையும் தேர்ந்தெடுக்க முடியும். பொருளாதாரம் சார்ந்த படிப்புகளை, `சென்னை ஸ்கூல் ஆப் எக்னாமிக்ஸ்' கல்வி நிறுவனத்தில் சேரலாம். இங்கு சேர, தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகம் நடத்தும் நுழைவுத்தேர்வை எழுத வேண்டும். தற்போது இதற்கான விண்ணப்பம் வழங்கப்படுகிறது.

கூடுதல் தகவல்கள்:-

கணினி வழியாக ஒலிப்பதிவு, அனிமேஷன், எடிட்டிங் போன்றவற்றில் ஆர்வமிருந்தால் விஷுவல் கம்யூனிகேஷன் படிக்கலாம். உடற்கல்வி, யோகா, விளையாட்டு உள்ளிட்ட படிப்புகளில் ஆர்வம் உள்ளவர்கள், சென்னையில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வி

பல்கலைக்கழகத்தில் சேரலாம். சட்டப்படிப்பு படிக்க விரும்புகிறவர்கள், ப்ளஸ் டூ படிப்புக்குப் பிறகு தமிழ்நாடு அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிக்கலாம்.
நடுவண் அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில் இளநிலை பட்டப்படிப்பு படிக்க விரும்புகிறவர்கள் பொது நுழைவுத் தேர்வுக்கு ஆன்லைன் வழியே https://www.cucetexam.in/ விண்ணப்பிக்கலாம். இங்கு, ப்ளஸ் டூ மாணவர்கள் ஒருங்கிணைந்த ஐந்தாண்டுப் படிப்புகளாக எம்.எஸ்ஸி வேதியியல் (Chemistry), பொருளியல் (Economics), உயிரி அறிவியல் (Life Sciences), கணிதம் (Maths), இயற்பியல் (Physics) படிப்புகள் உள்ளன. இங்கு பி.எட் படிப்புடன்கூடிய பி.எஸ்ஸி கணிதம் படிப்பும், இளநிலை பிரிவில் சிறப்புப் பாடங்களாக இசை, டெக்ஸ்டைல் போன்ற பாடங்களும் இருக்கின்றன.இந்தியா முழுவதும் உள்ள அரசு மற்றும் தனியார் உணவு மற்றும் உணவுத் தொழில்நுட்பம் குறித்துப் படிக்க விரும்புகிறவர்கள், இதற்கான National Council for Hotel Management and Catering Technology நடத்தும் பொதுத்தேர்வில் தேர்ச்சிப்பெறுவதின் மூலம் இத்துறை சார்ந்த படிப்புகளை பயிலலாம்.

பொதுவாக இரண்டாம் பிரிவை தேர்வு செய்தவர்களும் நான்காம் பிரிவை (vocational) தேர்வு செய்தவர்களும் பொறியியல் பட்டபடிப்பை தேர்வு செய்யலாம்.கல்வி என்பது ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமானது. மாணவர்களின் எதிர்கால திட்டத்தின் முதல்படி பன்னிரண்டாம் வகுப்பிற்கு பிறகு அவர்கள் தேர்வு செய்யும் பட்டப்படிப்பாக உள்ளது. ஆகையால், என்ன படிப்பை தேர்வு செய்ய வேண்டும் என்பது மிகவும் முக்கியமானது.

TNTJ
Students Wing

ENGINEERING



இன்ஜினியரிங் பட்டதாரிகளுக்கு வேலை இல்லை எனவும் அதுவொரு தரமற்ற படிப்பு எனவும் பெரும்பாலான மாணவர்களும் பெற்றோர்களும் இந்த படிப்பை குறித்து தவறான எண்ணத்தை கொண்டுள்ளனர். உண்மையாகவே இஞ்சினியரிங் படித்த பட்டதாரிகளுக்கு பல்வேறு வேலைவாய்ப்புகள் அரசு துறைகளிலும் தனியார் துறைகளிலும் குவிந்து கிடக்கின்றன. ஆனால் தரமான கல்வி பயின்ற தமது பாடத்தை குறித்த அறிவை வளர்த்துக் கொண்டுள்ள இன்ஜினியர்கள் கிடைக்காமல் நிறுவனங்கள் திணறுவதாக பல புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடமைக்கு என படிப்பை மட்டும் படித்துவிட்டு அறிவையும் திறமையையும் வளர்த்துக் கொள்ளாமல் அதுவும் பல அரியர்ஸ் வைத்து கொண்டுள்ள மாணவர்களுக்கு வேலை கிடைப்பது உண்மையாகவே அரிது. இன்ஜினியரிங் மட்டுமல்ல அனைத்து துறைகளிலும் வெறுமனே பட்டப்படிப்பை மட்டும் முடித்தவர்களுக்கு எந்த பயனும் இல்லை மதிப்பும் இல்லை. ஆனால் படிப்போடு சேர்த்து அறிவையும் திறமையையும் வளர்த்துக் கொள்ளும் பொழுது எளிமையான முறையில் தனியார் நிறுவனங்களில் அரசு நிறுவனங்களில் அல்லது சுயதொழில் செய்வதற்கும் வாய்ப்புகள் மேலும் கிடைக்கின்றன.

95 சதவீதத்திற்கும் அதிகமான கட்ஆப் மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு அண்ணா பல்கலைக்கழகம் உட்பட தரமான இஞ்சினீரிங் கல்லூரிகளில் இடம் கிடைப்பது எளிதாகிறது. 85 சதவிகிதத்திற்கும் அதிகமான கட்ஆப் மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு நல்ல இன்ஜினியரிங் கல்லூரிகளில் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. இதை விட குறைவான மதிப்பெண் பெற்றவர்கள் தான் விரும்பும் கல்லூரிகளையும் பாடப்பிரிவுகளையும் தரமான கல்லூரிகளையும் தேர்ந்தெடுக்க இயலாது. ஆகவே அவர்கள் கலை அறிவியல் போன்ற மற்ற துறைகளில் கவனம் செலுத்துவது சிறந்தது.

பாடப்பிரிவுகள்

Evergreen Courses என்று அழைக்கப்படும் பொய்யாத துறைகள் எடுத்து படிக்கலாம். உதாரணமாக (Mechanical Engineering, Civil, electrical, automobile, electrical and electronics, electronics and communication மற்றும் chemical. இந்த துறைகளை பொருத்தவரை பொதுவாகவே பல நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. ஆனால், அனைத்து கல்லூரிகளிலும் இந்த பாடப்பிரிவு நடத்தப்படுவதால் உங்களுக்கு போட்டி கடுமையாக இருக்கும். நீங்கள் மேலே சொன்ன திறமைகளை வளர்த்துக்கொண்டால் மட்டுமே சாதிக்க இயலும்.

Specialised engineering courses என்று வர்ணிக்கப்படும் பல சிறப்பான பாடப்பிரிவுகளும் உள்ளன. இந்தப் பாடப்பிரிவுகளை பொருத்தவரை நல்ல தரமான கல்லூரிகளை அதாவது தரப் பட்டியலில் 25 இடங்களுக்குள் உள்ள கல்லூரிகளை தேர்ந்தெடுத்து படித்தல் அவசியம். இந்தப் பாடப் பிரிவில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள் குறைவாக காணப்பட்டாலும் அதிகமான கல்லூரிகளில் இந்தப் பாடப் பிரிவுகள் நடத்தப்படுவது இல்லை. ஆகவே உங்களுக்கு போட்டிகள் சிறிது குறைவாகவே இருக்கும்.

ஐஐடி, என்ஐடி போன்ற மத்திய பொறியியல் தொழில்நுட்ப கல்லூரிகளில் படிப்பதற்கு JEE என்ற நுழைவுத் தேர்வு அவசியம். தரமான தொழில்நுட்ப கல்லூரிகள் கல்லூரிகளில் படிப்பதால் கேம்பஸ் இண்டர்வியூ மூலமாக பல ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் தான் விரும்பிய நிறுவனங்களை தேர்ந்தெடுக்க இயலும்.அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்க கூடிய அனைத்து கல்லூரிகளில் பயில்வதற்கு எந்த நுழைவுத்தேர்வு கிடையாது. பன்னிரண்டாம் வகுப்பில் எடுத்த மதிப்பெண்கள் அடிப்படையில் குறிப்பாக கணிதம், இயற்பியல், வேதியியல் போன்ற பாடப்பிரிவுகளில் எடுத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தரப்பட்டியல் தயாரிக்கப்பட்டு கலந்தாய்வுக்கு அழைக்கப்படுவர். இது அல்லாது தமிழகத்தில் பல நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றின் சார்பாக தனித்தனியே நுழைவுத்தேர்வு நடத்தப்பட்டு மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. நிகர்நிலை பல்கலைக் கழகத்தை பல்கலைக்கழகத்தை தேர்வு செய்வதற்கு முன்பாக பல்கலைக்கழகத்தின் தரத்தை நன்கு ஆய்வு செய்து முடிவு எடுப்பது இன்றியமையாதது

கட்டிட நிர்மாண கலை படிப்பு படிக்க.

தற்பொழுது பெரும்பாலான பெரும்பாலான மாணவர்களின் விருப்பப்படி மாறிவருகின்றது இந்தத் துறை . தமிழகத்தில் ஒரு சில கல்லூரிகளில் மட்டும்தான் இந்தப் படிப்பு உள்ளது. இந்தப் படிப்பில் சேருவதற்கு அண்ணா பல்கலைக்கழகம் ஒவ்வொரு ஆண்டும் கலந்தாய்வு நடத்துகின்றது. அதற்கான அறிவிப்புகள் மே ஜூன் மாதங்களில் அண்ணா பல்கலை கழகம் சார்பாக வெளியிடப்படுகிறது. இந்த துறையை தேர்ந்தெடுப்பதற்கு NATA என்ற தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

B.Arch கலந்தாய்வு முறை:-

பன்னிரண்டாம் வகுப்பு எடுத்த மதிப்பெண்களையும் நாட்டா தேர்வில் எடுத்த மதிப்பெண்களையும் வைத்து கட் ஆப் மதிப்பெண் கணக்கிடப்படுகின்றது. இந்த கட்-ஆப் மதிப்பெண அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு கலந்தாய்விற்கு அழைக்கப்படுவார்கள். இதில் முஸ்லிம்களுக்கு 3.5 இட ஒதுக்கீடு உள்ளது.

NATA தேர்வு:-

இது ஒரு கட்டிட நிர்மாண கலைத்திறன் ஆய்வு தேர்வாகும். ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் இருந்து இந்த தேர்வு எழுத பதிவு செய்துகொள்ளலாம். பதிவு கட்டணம் 1,250 ரூபாய். பதிவு செய்த சில வாரங்களில் தேர்வு எழுதலாம். தேர்வு தமிழகத்தின் பல மையங்களில் நடைபெறுகின்றன. தேர்வு எழுதிய சில வாரங்களில் மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும். இந்தத் தேர்வுக்காக பல தனியார் பயிற்சி மையங்கள் மூலமாக பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.நாட்டா தேர்வு இரண்டு தாள்களைக் கொண்டது. ஒன்று ஆன்லைன் தேர்வு 100 மதிப்பெண்கள். மற்றொன்று வரைதல் தேர்வு 100 மதிப்பெண் கொண்டது. ஐந்து முறை இந்த தேர்வை எழுதி எழுதலாம் ஐந்து முறையும் தேர்ச்சி பெறாவிட்டால் பின்பு அவர்களால் நடப்பு ஆண்டில் B.Arch படிக்க இயலாது.

Engineering Branches:-

Aeronautical Engineering	Industrial Engineering
Aerospace Engineering	Industrial Engineering and Management
Agricultural Engineering	Information Science and Engineering
Aircraft Maintenance Engineering	Information Technology
Architecture and Planning	Instrumentation & Control Engineering
Architecture Engineering	Instrumentation and Control Engineering
Automobile Engineering	Instrumentation Engineering
Biological Engineering	Manufacturing Engineering
Biomedical Engineering	Mechanical Engineering
Bio-medical Engineering	Mechatronics Engineering
Bio-science and Technology	Metallurgic Engineering
Bio-tech Engineering	Metallurgical & Materials Engineering
Bio-technology	Metallurgical and Materials Engineering
Chemical Engineering	Mineral Engineering
Civil Engineering	Mining Engineering
Computer & Comm. Engineering	Naval Architecture and Ocean Engineering
Computer Science Engineering	Print & Media Technology
Electrical & Electronics Engineering	Production and Industrial Engineering
Electrical Engineering	Petrochemical Engineering
Electronics & Communication Engineering	Production Engineering
Electronics & Instrumentation Engineering	Structural Engineering
Engineering Design	Telecommunication Engineering
Engineering Physics	Textile Engineering
Environmental Engineering	Textile Technology
Industrial & Production Engineering	Thermal Engineering

INDIAN INSTITUTE OF TECHNOLOGY [IIT] | இந்திய தொழில்நுட்பக் கழகங்கள்

உயர்கல்வி பயில விரும்பும் பெரும்பாலான மாணவர்களின் கனவு நிறுவனமாக இருப்பது, ஐஐடி எனப்படும் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (Indian Institute of Technology - IIT) ஆகும். முதலில் இந்தியாவில் கரக்பூர், பம்பாய் (இப்பொழுது மும்பை), கான்ப்பூர், மதராசு (இப்பொழுது சென்னை), தில்லி ஆகிய ஐந்து இடங்களில் நிறுவப்பட்டன. இதனை உலக தரத்தில் உருவாக்க முதல் கல்வி அமைச்சரான அபுல் கலாம் ஆசாத் அவர்களால் உருவாக்கப்பட்டது

IIT- JEE:-

இதில் சேர்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் பல லட்சம் மாணவர்கள் இதற்கான நுழைவுத் தேர்வை எழுதுகின்றனர். நாடு முழுவதும் 23 இடங்களில் உள்ள ஐஐடி கல்வி நிறுவனங்களில் மொத்தம் சுமார் 13, 500 இடங்கள் உள்ளன. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 2,000 இடங்கள் அதிகம். இந்த இடங்களுக்கு நிகழாண்டு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை தகவல்படி 10 இலட்சம் பேர். இதில் முதன்மைத் தேர்வில் (JEE – Main) வெற்றி பெற்றவர்கள் 2.5 லட்சம். அட்வான்ஸ் தேர்வு (JEE – Advanced) எழுதியோர் 1.73 லட்சம் பேர்.

இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள் மீது மாணவர்கள் இந்த அளவுக்கு ஆர்வம் காட்ட காரணம். உலகத் தரம் வாய்ந்த கல்வி, நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள், பேராசிரியர்களுடன் தொடர்புகொள்ள, கலந்துரையாட வாய்ப்பு, ஆராய்ச்சித் திட்டங்களுக்காக அமெரிக்காவின் புகழ்பெற்ற மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம், ஸ்டேன்ஃபோர்ட் மற்றும் ஹார்வர்ட் பல்கலைக்கழகங்களைப் பார்வையிடும் வசதி, ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி பெறுவது, படிப்பை முடித்தவுடன் பெரும் ஊதியத் தொகுப்புடன் சர்வதேச அளவில் வேலைவாய்ப்புகள் போன்ற பல பலன்கள் உள்ளன.இதிலுள்ள இடங்களின் அளவு ஆண்டுக்காண்டு கணிசமாக அதிகரிக்கப்பட்ட போதிலும், விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதைவிட அதிகமாகிக் கொண்டே போகிறது. போட்டி அதிகமாகிறது.

TNTJ STUDENTS WING

GATE:

நாட்டில் உள்ள ஐஐடி பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரிகள், மற்ற முன்னனி கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படிப்பதற்கு கேட் தேர்வு எழுதி தேர்ச்சி பெறுவது அவசியம் ஆகும் Graduate Aptitude Test In Engineering என்பதே கேட் விரிவாக்கம். இந்த தேர்வில் பெறும் மதிப்பெண் பொறுத்தே முன்னனி பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சீட் வழங்கப்படுகிறது.

JAM:

முதுகலை அறிவியல் பட்டமேற்படிப்பில் சேருவதற்காக ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் தேர்வு Joint Admission Test (JAM) ஆகும். இந்த தேர்வு 2004 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. கீழ்காணும் கல்வி நிறுவனங்கள் இந்த தேர்வின் மூலமாக மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது

- Indian Institutes of Technology (IITs),
- Indian Institute of Science (IISc, Bangalore),
- Indian Institutes of Science Education and Research (IISERs),
- National Institute of Science Education and Research (NISER, Bhubaneswar),
- National Institutes of Technology (NITs)

இந்த தேர்வின் மூலமாக முதுநிலை அறிவியல் மட்டுமல்லாது, Joint M.Sc.-Ph.D., M.Sc.-Ph.D. Dual Degree படிப்புகளுக்கும் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது

Chemistry	Physics	Mathematics
Applied Geology	Applied Geophysics	Applied Statistics
Biotechnology	Material Science	Energy
Environmental Science	Mathematics & Computing	Statistics
Geology	Applied Mathematics	Industrial Mathematics & Informatics

CEED:

வடிவமைப்பிற்கான பொதுவான நுழைவுத் தேர்வு என்பது அனைத்து ஐ.ஐ.டி (IIT) மற்றும் இந்திய அறிவியல் நிறுவனங்களில் (IISc) கூட்டாக ஆண்டுதோறும் நடைபெறும் தொழில்நுட்ப வடிவமைப்பு துறையில் முதுகலை படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வாகும்.. CEED தகுதி வாய்ந்த மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களில் MDes மற்றும் PhD திட்டங்களுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். CEED மதிப்பெண் முடிவு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகும்.

http://www.ceed.iitb.ac.in/2020/

HSEE:-

Humanities and Social Sciences Entrance Examination (HSEE) நுழைவுத் தேர்வு ஒவ்வொரு ஆண்டும் இந்திய தொழில்நுட்ப தொழில்நுட்ப மெட்ராஸால் நடத்தப்படும் தேசிய அளவிலான நுழைவுத் தேர்வாகும், இது நிறுவனத்தின் மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் துறை (எச்எஸ்எஸ்) வழங்கும் முதன்மை திட்டத்தில் சேருவதற்காக நடத்தப்படுகிறது. HSEE நுழைவுத் தேர்வு முற்றிலும் கணினி அடிப்படையிலானது மற்றும் பொதுவாக ஏப்ரல் இரண்டாவது அல்லது மூன்றாவது வாரத்தில் இந்தியா முழுவதும் பல்வேறு நகரங்களில் நடத்தப்படுகிறது. ஐ.ஐ.டி மெட்ராஸில் M.A. திட்டத்தை தொடங்குவதன் மூலம் 2006 ஆம் ஆண்டில் HSEE தொடங்கியது. ஐ.ஐ.டி வழங்கும் Humanities and Social Sciences பாடங்களில் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுநிலை திட்டத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும் ஒரே மாதிரியான சோதனை இதுவாகும்.

STREAMS OFFERED – 5 Years

- Integrated M.A. in Development Studies
- Integrated M.A. in English Studies

https://hsee.iitm.ac.in/about.html

LIST OF IITs

TNTJ STUDENTS WING

பெயர்	தொடங்கிய ஆண்டு	மாநிலம்/பிரதேசம்
IIT கரக்பூர்	1951	மேற்கு வங்காளம்
IIT மும்பை	1958	மகாராட்டிரம்
IIT சென்னை	1959	தமிழ்நாடு
IIT கான்பூர்	1959	உத்தரப் பிரதேசம்
IIT தில்லி	1963	புது தில்லி
IIT குவகாத்தி	1994	அசாம்
IIT ரூர்க்கி	2001	உத்தராகண்டம்
IIT பஞ்சாப்	2008	பஞ்சாப்
IIT புவனேசுவர்	2008	ஒடிசா
IIT ஐதராபாத்	2008	ஆந்திரப் பிரதேசம்
IIT காந்திநகர்	2008	குசராத்
IIT பட்னா	2008	பீகார்
IIT இராஜஸ்தான்	2008	இராஜஸ்தான்
IIT மண்டி	2009	இமாசலப் பிரதேசம்
IIT இந்தூர்	2009	மத்தியப் பிரதேசம்
IIT (Banaras Hindu University) வாரணாசி	1916	உத்தரப் பிரதேசம்
IIT தன்பாத்	2015	மத்தியப் பிரதேசம்
IIT பாலக்காடு	2015	கேரளா
IIT திருப்பதி	2015	ஆந்திரப்பிரதேசம்

MEDICAL STUDIES | மருத்துவபடிப்புகள்

ஆயிரம் பேருக்கு ஒரு அரசு மருத்துவர் இருக்க வேண்டும் என்கிறது உலக சுகாதார மையம் . ஆனால், இந்தியாவில் 11,000 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற விகிதத்திலுமே உள்ளது. இதனால் மருத்துவப் படிப்புக்குத் தேவை அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டின் ஒதுக்கீட்டில் மருத்துவப் படிப்புக்கு 6,000 இடங்கள் உள்ளன.

மருத்துவப் படிப்புகளில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்று மக்களுக்கு மருத்துவ சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில், இப்படிப்புகளில் சேர மாணவர்கள் பெரிதும் முயல்வது ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ் படிப்புகளில் சேர, நீட் நுழைவுத்தேர்வு எழுத வேண்டியது அவசியம். கடந்த இரண்டு ஆண்டுகளாக நீட் தேர்வெழுதுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துவருகிறது .

ஆனால், பாதுகாப்புத்துறையின் மிகச் சிறந்த மருத்துவக் கல்லூரியான, புனேவில் உள்ள Armed force Medical College-ல் நீட் மதிப்பெண் அடிப்படையில் விண்ணப்பிக்கலாம். இது பலருக்கும் தெரிவதில்லை. இக்கல்லூரியில் இடம்பெற்றால், கட்டணமில்லா மருத்துவப் படிப்பை முடிக்கலாம். இங்கு படிப்பையும், பயிற்சியையும் முடித்தவுடன் டாக்டர் மற்றும் மேஜர் பதவியுடன் கூடிய வேலையும் உறுதி. ராணுவ மருத்துவமனையில் ஏழரை ஆண்டுகளுக்குப் பணியாற்றிட வேண்டும். அதன்பின்பு, விருப்பத்தின் பேரில் தொடரலாம். இதைப்போலவே, Army Nursing College-லும் சேரலாம்.

நீட் தேர்வு எழுதும் மாணவர்கள், தமிழ்நாடு மருத்துவக் கவுன்சில் நடத்தும் கலந்தாய்விலும், அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கு இந்திய மருத்துவக் கவுன்சில் நடத்தும் கலந்தாய்விலும் கலந்துகொள்ள வேண்டும். இந்த இரண்டு கலந்தாய்வுகளிலும் கடுமையான போட்டி போட வேண்டி இருக்கிறது.

எம்.பி.பி.எஸ் மற்றும் பி.டி.எஸ் படிப்புகளுக்கு மாற்றாக ஏராளமான படிப்புகள் உள்ளன. BSMS - B.S.M.S. (Bachelor of Siddha Medicine and Surgery), BAMS- Bachelor of Ayurvedic Medicine and Surgery (இந்திய மருத்துவம்), BNYS- Bachelor of Naturopathy and Yogic Sciences (தமிழ்நாடு மருத்துவம்), BAMS- Bachelor of Ayurvedic Medicine and Surgery (ஜெர்மனி மருத்துவம்), BUMS- Bachelor of Unani Medicine and Surgery (அரேபிய மருத்துவம்) என்ற மருத்துவப் படிப்புகள் உள்ளன

மைசூரில் உள்ள All India Institute of Speech and Hearing (AIISH) என்ற மத்திய அரசுக் கல்லூரியில் Bachelor of Audiology and Speech Language Pathology (B.ASLP), Bachelor of Education Special Education (Hearing Impairment) [B.Ed. Sp. Ed.(HI)] என்ற இளநிலைப் படிப்புகளுக்கும், பல்வேறு பட்டயப் படிப்புகளுக்கும், முதுநிலைப் பட்டயப்படிப்புகளுக்கும் விண்ணப்பிக்க, அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இவற்றிற்கு http://www.aiishmysore.com/ என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்"

TNTJ

TNTJ STUDENTS WING

List of Government medical colleges

S NO	NAME OF THE COLLEGE	Total	AIQ(15%)
1	Madras Medical College, Chennai	250	37
2	Stanley Medical College, Chennai	250	38
3	Madurai Medical College, Madurai	250	37
4	Thanjavur Medical College, Thanjavur	150	22
5	Kilpauk Medical College, Chennai	150	23
6	Chengalpattu Medical College, Chengalpattu	100	15
7	Tirunelveli Medical College, Tirunelveli	250	38
8	Coimbatore Medical College, Coimbatore	150	22
9	Govt. Mohan Kumaramangalam Medical College, Salem	100	15
10	K.A.P. Viswanatham Govt. Medical College, Trichy	150	23
11	Thoothukudi Medical College, Thoothukudi	150	22
12	Govt. Kanyakumari Medical College, Kanyakumari.	100	15
13	Govt. Vellore Medical College, Vellore	100	15
14	Govt. Theni Medical College, Theni	100	15
15	Govt. Dharmapuri Medical College, Dharmpuri.	100	15
16	Govt. Villupuram Medical College, Villupuram.	100	15
17	Govt. Thiruvarur Medical College, Thiruvarur	100	15
18	Govt. Sivagangai Medical College, Sivagangai	100	15
19	Thiruvannamalai Medical College, Thiruvannamalai.	100	15
20	Govt. Omandurar Medial College, OmandurarEst,CH	100	15
21	Govt. Medical College & ESIC Hospital Coimbatore	100	15+20(MQ)
22	Govt. Pudukottai Medical College, Pudukottai	150	22
23	Govt. Karur Medical College ,Karur	150	22
Total		3250	506
1	Tamil Nadu Government Dental College, Chennai	100	15

Private Medical Colleges/ Deemed Universities.

S.No.	Medical College / Medical Institution	Affiliated to	Inception
1	Christian Medical College, Vellore	Dr. MGR Medical University.	1942
2	PSG Institute of Medical Sciences, Coimbatore	Dr. MGR Medical University	1985
3	Rajah Muthiah Medical College, Annamalainagar	Annamalai University	1985

TNTJ

S.No.	Medical College / Medical Institution	Affiliated to	Inception
4	Sri Ramachandra Medical College & Research Institute, Chennai	Sri Ramachandra Deemed University.	1985
5	Vinayaka Missions Kirupananda Variyar Medical College, Salem	Vinayaka Missions University	1996
6	Sree Balaji Medical College and Hospital, Chennai	Bharath University, Chennai	1999
7	Meenakshi Medical College and Research Institute, Enathur	Meenakshi University	2003
8	SRM Medical College Hospital & Research Centre, Kancheepuram	SRM Institute of Science & Technology	2005
9	Chettinad Hospital & Research Institute, Kanchipuram (Deemed University)	Chettinad Academy of Research and Education	2006
10	Sree Mookambika Institute of Medical Sciences, Kanyakumari	Dr. MGR Medical University.	2006
11	ACS Medical College and Hospital, Chennai	Dr. MGR Educational and Research Inst.,Chennai.	2008
12	Melmaruvathur Adiparasakthi Instt. Medical Sciences and Research	Dr. MGR Medical University.	2008
13	Saveetha Medical College and Hospital, Kanchipuram	Saveetha University.	2008
14	Shri Satya Sai Medical College and Research Institute, Kancheepuram	Sri Balaji Vidyapeeth, Pondicherry (Deemed Univ.)	2008
15	Chennai Medical College Hospital and Research center, Irungalur, Trichy	Dr. MGR Medical University.	2009
16	Karpaga Vinayaga Institute of Medical Sciences, Maduranthagam	Dr. MGR Medical University.	2009
17	Sri Muthukumaran Medical College, Chennai	Dr. MGR Medical University.	2010
18	Tagore Medical College and Hospital, Chennai	Dr. MGR Medical University.	2010
19	Annapoorna Medical College & Hospital, Salem	Dr. MGR Medical University.	2011
20	Dhanalakshmi Srinivasan Medical College and Hospital, Perambalur	Dr. MGR Medical University.	2011
21	Madha Medical College and Hospital, Thandalam, Chennai	Dr. MGR Medical University.	2011
22	Karpagam Faculty of Medical Sciences & Research, Coimbatore	Dr. MGR Medical University.	2012
23	Velammal Medical College Hospital and Research Institute, Madurai	Dr. MGR Medical University.	2013

இந்திய முறை மருத்துவ படிப்புகள்

ஆங்கிலேய முறை மருத்துவம் அல்லது அலோபதி மருத்துவம் என்பது ஆங்கிலேயர்களால் கண்டுபிடிக்கப்பட்டு இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட MBBS படிப்பின் அடிப்படையில் வழங்கப்படும் மருத்துவத்தை குறிக்கும். ஆனால் இந்தியாவில் பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்டு வந்த பல மருத்துவ முறைகள் உள்ளன. இவற்றில் கீழ்கண்ட ஐந்து முறைகளை மட்டும் இந்திய அரசு அங்கீகரித்து இம்முறைகளில் சிகிட்சை வழங்கவும், படிப்புகளை நடத்தவும் அனுமதி வழங்கியுள்ளது.

1. சித்த மருத்துவம்
2. ஹோமியோபதி மருத்துவம்
3. ஆயுர்வேத மருத்துவம்
4. யுனானி மருத்துவம்
5. யோகா மற்றும் இயற்கை மருத்துவம்

ஒவ்வொரு மருத்துவ முறையிலும் பயன்படுத்தப்படும் சிகிச்சை முறைகள், மருந்துகள் வெவ்வேறானவை. மேலும் மக்களின் கலாச்சாரம், நம்பிக்கை, மருத்துவ செலவு மற்றும் நோய் தன்மை பொருத்து மக்கள் வெவ்வேறு சிகிச்சை முறைகளை நாடுகின்றனர். அந்த வகையில் அலோபதி தவிர்த்து BAMS, BHMS, BUMS, BSMS, BNYS மருத்துவ படிப்புகள் இந்திய மருத்துவ படிப்புகளாக இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

சேர்க்கை & தகுதி

இவற்றில் BAMS, BHMS, BUMS, BSMS படிப்புகளுக்கு மட்டும் நீட் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. BNYS படிப்புக்கு +2 வில் மாணவர் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் சேர்க்கை நடைபெறுவதால் இதற்கு மட்டும் நீட் தேர்வு கட்டாயமில்லை.

கால அளவு

இந்த படிப்புகள் அனைத்தும் MBBS போன்று ஒரு வருட இன்டர்ன்ஷிப்புடன் கூடிய ஐந்தரை ஆண்டு கால மருத்துவ படிப்புகளாகும். இந்த இந்திய முறை இளநிலை மருத்துவப் படிப்புகள் அனைத்தும் தமிழ்நாடு டாக்டர்.எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட MBBS படிப்புக்கு இணையானவை ஆகும். நான்கரை வருட கல்லூரி படிப்புடன் இப்படிப்புகள் மேலும் 1 வருடம் ஹவுஸ் சர்ஜன் என முடிக்க ஐந்தரை வருடங்கள் ஆகும்.

TNTJ STUDENTS WING

தகுதி

இதில் சேர +2 வில் இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது தாவரவியல், விலங்கியல் பாடங்களை எடுத்து படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மருத்துவ படிப்பு மாணவர் சேர்க்கையை பொருத்தவரை மாணவர்களின் தேர்வாக அலோபதி மருத்துவ படிப்பான MBBS முதல் இடத்திலும் மற்றும் BDS இரண்டாம் இடத்திலும் உள்ளன. அதன் பின்னரே BHMS, BAMS, BUMS, BNYS, BSMS எனப்படும் இந்திய மருத்துவ படிப்புகளில் மாணவர்கள் சேர்கின்றனர்.

1. சித்த மருத்துவ படிப்பு - BSMS

சித்த மருத்துவம் என்பது தமிழ் மருத்துவ முறையாகும். தமிழ்நாட்டு பண்டைய சித்தர்கள் இதனை தமிழ் மொழியில் உருவாக்கி தந்துள்ளார்கள். சித்த மருத்துவம் எப்போது தோன்றியது என்று வரையறுத்து கூறமுடியாது. அது பாரம்பரிய மரபு முறைப்படி பரவி வந்துள்ளது. சித்த மருத்துவமானது இயற்கையில் கிடைக்கக்கூடிய எண்ணற்ற புல், பூண்டு, மரம், செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம், முதலியவைகளை கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு மருத்துவ முறையாகும்.

Students Wing

இந்திய மருத்துவ முறைகளில் ஒன்றான சித்த மருத்துவம் குறித்த கல்விகளை அளிக்கும் கல்லூரிகள் சித்த மருத்துவக கல்லூரிகள் என அழைக்கப் படுகின்றன. இக்கல்லூரிகளில் சித்த மருத்துவ அறிஞர் எனப்படும் B.S.M.S(Bachelor of Siddha Medicine and Surgery) படிப்பு வழங்கப்படுகிறது. இது ஒரு தமிழ் மருத்துவ படிப்பாகும்.

சித்த மருத்துவத்தில் முதுநிலை படிப்பான MD சித்தா கீழ்கண்ட மூன்று அரசு கல்லூரிகளில் நடத்தப்படுகிறது.

1. அரசு சித்த மருத்துவ கல்லூரி, பாளையங்கோட்டை
2. அரசு சித்த மருத்துவ கல்லூரி, சென்னை
3. தேசிய சித்த மருத்துவ நிறுவனம், தாம்பரம்

TNTJ STUDENTS WING

Siddha Colleges:-

S.No.	Name of Institutions	Annual Intake
Government Siddha Colleges in Tamil Nadu		
1	GOVT. SIDDHA MEDICAL COLLEGE, Palayamkottai	100
2	GOVT. SIDDHA MEDICAL COLLEGE, Chennai	60
Private Siddha Colleges in Tamil Nadu		
1	AKILA THIRUVITHAMCORE SIDDHA VAIDYA COLLEGE Anandasramam Munchirai, Pudukkadai Post, Kanyakumari District	40
2	SRI SAIRAM SIDDHA MEDICAL COLLEGE RESEARCH CENTRE Sai Leo Nagar, Sriperumbudur Taluk, West Tambaram, Chennai	50
3	VELUMAILU SIDDHA MEDICAL COLLEGE No. 48 Grand West Trunk Road, Sriperumbadur, Kancheepuram District	40
4	R.V.S. SIDDHA MEDICAL COLLEGE Kumaran Kottam, Trichy Road, Kannampalayam, Coimbatore	30
5	SIVARAJ SIDDHA MEDICAL COLLEGE Thumbathulipatty, Perumampatty p.o., Salem -	50
6	MARIA SIDDHA MEDICAL COLLEGE AND HOSPITAL Thottavaram, Moovatumugham Post, Thiruvattar, Kanyakumari District	100
7	JSA MEDICAL COLLEGE FOR SIDDHA & RESEARCH CENTRE, Pali Village,Ulundurpet Taluk, Villupuram District	60
8	EXCEL SIDDHA MEDICAL COLLEGE AND RESEARCH CENTRE, Pallakkapalayam, Komarapalayam, Namakkal District.	60
9	NANDHA SIDDHA MEDICAL COLLEGE AND HOSPITAL, Thiruvachi Panchayat, Erode District	60

2. ஹோமியோபதி மருத்துவ படிப்பு - BHMS

TNTJ STUDENTS WING

உலகில் 85 கும் மேற்பட்ட நாடுகளில் ஹோமியோபதி மருத்துவ முறை பயன்படுத்தப்பட்டு அலோபதிக்கு அடுத்து உலகின் இரண்டாவது பெரிய மருத்துவ முறையாக உள்ளது. ஒத்ததை ஒத்தது குணப்படுத்தும் என்பதன் அடிப்படையில் ஹோமியோபதி மருத்துவம் செயல்படுகிறது. தாவரங்கள், விலங்குகள், உலோகங்கள், கனி மங்கள் போன்ற பல்வேறு பொருட்களில் இருந்து ஹோமியோபதி மருந்துக்கான மூல பொருட்கள் பெறப்படுகின்றன.இது ஒரு ஜெர்மானிய மருத்துவ படிப்பாகும்.

S.No.	Name of Institutions	Annual Intake
	Government Homeopathy Colleges in Tamil Nadu	
1	Government Homeopathy Medical College, Thirumangalam, Madurai	50
	Private Homeopathy Colleges in Tamil Nadu	
1	White Memorial Homoeopathy Medical College Attoor, Veeyannoor Post, Attoor, K.K. DIST.	50
2	Venkateswara Homoeopathy Medical College 6/177-A mount Poonamallee Road., Karambakkam, Porur, Chennai.	50
3	Dr.Hahnemann Homoeopathy Medical College & Research Centre Koneripatti, Rasipuram, Namakkal District.	50
4	Sarada Krishna Homoeopathy Medical College Kulasekharam, Kanyakumari	100
5	Martin Homoeopathy Medical College & Hospital 54, Mettupalayam Road, G.N.MILLS(P.O.), Coimbatore.	50
6	Sri Sairam Homoeopathy Medical College Sai Leo Nagar, West Tambaram, Chennai	50
7	Rvs Homoeopathy Medical College 242-B-Trichy Road, Sulur, Coimbatore	50
8	Sivaraj Homoeopathic Medical College & Research Institute Siddhar Kovil Road, Thumbathulipatty, Perumampatty(p.o.), Salem	50
9	Maria Homoeopathic Medical College And Hospital. Perai Thiruvattar Post, Kanyakumari District	60
10	Excel Homoeopathy Medical College Pallakkapalayam, Komarapalayam, Namakkal Dist	100
11	Vinayaka Mission's Homoeopathic Medical College (Deemed University); Sankari Main Road, Salem - 636 308.	50

TNTJ STUDENTS WING

3. ஆயுர்வேத மருத்துவ படிப்பு - BAMS

ஆயுர்வேதம் கி.மு. 600 ஆம் ஆண்டில் இந்தியாவில் தோன்றிய மிகப் பழமையான மருத்துவ முறையாகும். மனித உடலில் நோய்கள் ஏற்படுவதற்கான முக்கிய காரணம் காலநிலை மாற்றமாகும். ஆயுர்வேதம் அந்த நோய்களுக்கு அறுவை சிகிச்சை யின்றி தீர்வு காண்கிறது. நோயாளியின் வயது, மனநலம், தனிப்பட்ட உணவு பழக்கம், வாழ்வியல் முறைகளை கருத்தில் கொண்டு சிகிச்சை அளிப்பது ஆயுர்வேதத்தின் சிறப்பாகும். ஆயுர்வேத மருத்துவத்தில் உலோகங்கள், தாதுக்கள், மூலிகைகள் உள்ளிட்டவற்றை பயன்படுத்தி எவ்வாறு சிகிச்சை அளிப்பது என்று கற்று கொடுக்கப்படுகிறது

S.No.	Name of Institutions	Annual Intake
Government Ayurveda Colleges in Tamil Nadu		
1	Government Ayurveda Medical College And Hospital Kottar, Nagercoil, Kanyakumari District	60
Private Ayurveda Colleges in Tamil Nadu		
1	Ayurveda College 242 Trichy Rd., Sulur, Coimbatore.	40
2	The Venkataramana Ayurveda College Periyar Nagar, Chennai. (No Admission from 2003-04)	30
3	Dharma Ayurveda Medical College & Hospital 17, Grant West Trunk Road, Sriperumputhur.	40
4	Sri Sairam Ayurveda Medical College And Research Centre Sai Leo Nagar, West Tambaram, Chennai	50
5	Sri Sankara College Of Ayurveda. Sanasipatti, Thiruchirappalli.	40
6	Maria Ayurveda Medical College And Hospital Kulathadivilai, Moovatumugham Post, Thiruvattar, Kanyakumarai District	60
7	Nandha Ayurveda Medical College And Hospital Thiruvachi Panchayat, Erode District	60

4. யுனானி மருத்துவ படிப்பு - BUMS

யுனானி மருத்துவம் என்பது கிரேக்க-அராபிய வைத்திய முறையாகும். பின்னர் இந்திய பாரம்பரிய மருத்துவத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. குறைந்த செலவில் பக்க விளைவுகள் இல்லாத சிகிட்சையை யுனானி மருத்துவம் வழங்குகிறது.

யுனானி வைத்திய முறை மனித உடலில் காணப்படும் நான்கு வகையான பாய்மங்களான கோழை, குருதி, மஞ்சள் பித்தம், கரும் பித்தம் இவைகளுக்கு இடையே உள்ள சமநிலையின்மையை நோய்க்கான காரணமாக கொண்டுள்ளது.

பெரும்பாலும் பின் விளைவுகளற்ற மூலிகைகளே மருந்துகளாக பயன்படுத்தப்படுகின்றன. யுனானி மருத்துவத்தில் பயன்படுத்தப்படும். வயது, உடல் அமைப்பின் தன்மை இவற்றையும், மருந்தின் தன்மையும் ஒப்பிட்டு பவுடராகவோ, கசாயமாகவோ, துணை மருந்துகளாகவோ, மாத்திரையாகவோ நோயாளிக்கு அளிக்கப்படுகிறது .

யுனானி மருத்துவ படிப்பு அரசுக் கல்லூரி ஒன்றில் மட்டும் நடத்தப்படுகிறது.

S.No.	Name of Institutions	Annual Intake
1	Government Unani Medical College, Chennai	60

Note: No private colleges.

5.நேச்சுரோபதி மற்றும் யோகிக் சயின்சஸ் மருத்துவ படிப்பு - BNYS

இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறை, அனைத்து நோய்க்குரிய மருந்தும் இயற்கைதான் என்ற கோட்பாட்டில் உள்ள மருத்துவ முறைதான் இந்த நேச்சுரோபதி என்ற இயற்கை மருத்துவமாகும். இது ஒளி, நீர், வெப்பம் ஆகியவற்றோடு உடற்பயிற்சி, உணவுப் பழக்கம், உடல் கூறியல் அம்சங்களை உபயோகித்து

TNTJ STUDENTS WING

மனிதனுக்கு வரும் நோய்களிலிருந்து குணம் தரும் மருத்துவ பிரிவாகும். இது மருந் துகளால் ஆளப்படும் துறையல்ல, மாறாக நாம் வாழும் முறையை இயற்கையுடன் ஒன்றி ணைப்பதே இதன் நோக்கமாகும் . உணவு முறையை பொறுத்த சிகிச்சை, ஆலோசனை மற்றும் வாழ்க்கை முறை சீரமைப்பு, மன அழுத்தத்தைத் குறைக்க உடற்பயிற்சி, ரிலாக்சேஷன் டெக்னிக் மற்றும் உணவின் மூலமாக அட்ரினலின் சுரப்பியை கட்டுப்படுத்துதல், இயற்கை முறைகளின் மூலமாக உடலில் சேர்ந்துள்ள நச்சுக்களை நீக்குவது, மூலிகை வைத்திய முறை போன்றவை இதில் பின்பற்றப்படுகின்றன.

S.No.	Name of Institutions	Annual Intake
Government Naturopathy and Yogic Sciences Colleges in Tamil Nadu		
1	GOVERNMENT YOGA AND NATUROPATHY COLLEGE Arignar Anna Government Hospital, Arumbakkam, Chennai	60
Private Naturopathy and Yogic Sciences Colleges in Tamil Nadu		
1	J.S.S. INSTITUTE OF NATUROPATHY & YOGIC SCIENCES Navakkarai, Palghat Main Road, Coimbatore	100
2	SIVARAJ NATUROPATHY & YOGA MEDICAL COLLEGE Siddhar Kovil Road, Perumamampatty Post, Salem.	40
3	SRI RAMAKRISHNA YOGA AND NATUROPATHY COLLEGE Padanilam, Kulasekharam, Kanyakumari District	100
4	SVS Medical College Of Yoga & Naturopathy & Research Institute Salem Main Road, , Kallakurichi, Villupuram District	50
5	EXCEL MEDICAL COLLEGE FOR NATUROPATHY & YOGA No 391/2 Ranganoor Road, Pallakkapalayam Village, Namakkal Dist.	100
6	NANDHA NATUROPATHY AND YOGA MEDICAL COLLEGE Tiruvachi Panchayat, Pitchandampalayam Post, Erode	60
7	ANNAI COLLEGE OF NATUROPATHY AND YOGA SCIENCE Anakudi Road, Kovilacheri, Kumbakonam, Thanjavur	100
8	KRISHNA NATUROPATHY AND YOGA MEDICAL COLLEGE, Kottaimedu, Inam Samayapuram, Manachanallur (T.K), Trichy District	100
9	MOTHER TERASA NATUROPATHY AND YOGA MEDICAL COLLEGE S.No.341-1A, 344-1A, Mettusalai, Veerapatti Village, Pudukkottai District.	100

கூடுதல்விபரங்களுக்கு: www.tnhealth.tn.gov.in; www.tnmsc.tn.gov.in ; www.tnmgrmu.ac.in ;

FOREIGN MEDICAL | வெளிநாட்டில் முருத்துவ படிப்பு

பிளஸ் 2 தேர்வு முடிவுகளை எதிர்பார்த்து இருக்கும் மாணவர்களுக்கும் குறிப்பாக பெற்றோர்களுக்கும் உள்ள மிக முக்கியமான ஒரு கேள்வி, வெளிநாட்டில் மருத்துவம் (MBBS) படிக்கலாமா?

வெளிநாட்டிபிளஸ் 2 தேர்வு முடிவுகளை எதிர்பார்த்து இருக்கும் மாணவர்களுக்கும் குறிப்பாக பெற்றோர்களுக்கும் உள்ள மிக முக்கியம். பிளஸ் 2 தேர்வு முடிவுகளை எதிர்பார்த்து இருக்கும் மாணவர்களுக்கும் குறிப்பாக பெற்றோர்களுக்கும் உள்ள மிக முக்கியமான ஒரு கேள்வி, வெளிநாட்டில் மருத்துவம் (MBBS) படிக்கலாமா?

வெளிநாட்டில் படிப்பு ,குறைந்த கட்டணம் ,ஓரளவு மதிப்பெண் இதுபோன்ற காரணத்தினால் வெளிநாட்டில் மருத்துவம் படிப்பதற்கு மாணவர்கள் ஆர்வம் காட்டிவருகிறார்கள் .ஆனால் அதில் இருக்கும் நன்மை தீமைகளை பற்றி தெரிந்துகொள்ளாமல் சிலர் போலியான நபர்களிடம் லட்சக்கணக்கான பணத்தை பறிகொடுக்கும் சூழலும் உள்ளது. வெளிநாட்டில் மருத்துவம் படிக்க விருப்பம் உள்ளவர்கள் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விஷயங்கள்

நீட் (NEET) தேர்வு அவசியம்

வெளிநாடுகளில் மருத்துவம் படிக்க வேண்டும் என்றாலும் நீட் (NEET) தேர்வில் தேர்ச்சி பெற்றாக வேண்டும். அதிக மதிப்பெண் எடுக்க வேண்டும் என்கிற அவசியமில்லை, தேர்ச்சி பெற்றால் மட்டும் போதுமானது .

மத்திய அரசின் அங்கீகார பெற்ற கல்லூரிகள் :

மத்திய அரசின் கீழ் இயங்கி வரும் MCI (Medical Council of India) அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் மட்டுமே மருத்துவம் படிக்க முடியும்.மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகள் மற்றும் நாட்டின் விபரங்களை கீழ்காணும் இணையதளத்தில் பார்த்து கொள்ளவும் .கல்லூரி மற்றும் நாட்டை தேர்வு செய்யும் பொழுது அந்த நாட்டின் பாதுகாப்பு ,கலாச்சாரம்,பொருளாதார நிலை போன்ற மிக முக்கியமான விஷயங்களை கருத்தில் கொள்ளவேண்டும்.

FMGE கட்டாய தேர்வு

வெளிநாட்டில் மருத்துவம் படித்தாலும் இந்தியாவில் மருத்துவராக பணியாற்றுவதற்கு மத்திய அரசு நடத்தும் FMGE தேர்வில் வெற்றி பெற வேண்டும்.இந்தியாவில் மிக கடினமான தேர்வில் இந்த தேர்வு முதன்மையானதாக உள்ளது.கடந்த 4 ஆண்டுகளில் 14% குறைவான மாணவர்களே இந்த தேர்வில் வெற்றி பெற்றுள்ளார்கள். FMGE தேர்வை பற்றிய முழு விபரமும் கீழ்காணும் இணையதளத்தில் பார்த்து கொள்ளவும். FMGE தேர்வில் தேர்ச்சி பெற முடியாதவர்கள் பிறநாடுகளில் மருத்துவராக பணியாற்றலாம்.

https://www.nbe.edu.in/

LAW | சட்டப்படிப்பு

பன்னிரண்டாம் வகுப்பிற்கு பின் ஒவ்வொரு மாணவரும் தனது வாழ்க்கையின் இலட்சியத்தை நோக்கி பயணிப்பதற்காக தமக்கு பிடித்தமான, அதிக பொருள் ஈட்டக் கூடிய துறைகளை தேர்ந்தெடுக்கின்றனர். படிப்பதற்கு எண்ணிலடங்கா துறைகள் இருந்தாலும் ஒரு சில படிப்புகள் மட்டுமே, சமூகநலன் சார்ந்து பெருவாரியான மக்களுக்கு பயனளிக்கக்கூடிய படிப்புகளாக அமைந்திருக்கின்றன.

சமூகம் சார்ந்து சமூகநலன் சார்ந்த படிப்புகளில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த படிப்பு சட்டப் படிப்பு. மக்களாக இருந்தாலும் சரி, மக்களாட்சியாக இருந்தாலும் சரி, சிறப்பாக செயல்பட சட்டங்கள் வகுப்பப்பட வேண்டும். அவ்வாறு வகுப்பப்பட்ட சட்டங்கள்தான் நீதியின் பிம்பம்களாக பிரதிபலிக்கின்றன.

உரிமை, கடமை என்பது ஒரு நாணயத்தின் இரு பக்கங்களை போன்றது. அதில் ஒன்று பயனற்று போனால் செல்லாகாசாகி விடும். தனிமனிதனின் உரிமைகள் கடமைகள் மட்டுமல்லாது தனி மனிதனை சுற்றியிருக்க கூடிய அரசு இயந்திரம், சுற்றுப்புறம் மற்றும் தனியார் நிறுவனங்கள் என அனைத்தும் சட்டத்திற்கு உட்பட்டே அமைகின்றது. அப்படிப்பட்ட சக்திவாய்ந்ததுறைகளில் ஒன்றான சட்டம் படிப்பு குறித்து இக்கட்டுரையில் காண்போம்!

காலஅளவு

- 12ம் வகுப்பு முடித்தவுடன் பி.ஏ. எல்.எல்.பி என்று ஒருங்கிணைந்த 5 ஆண்டுகள் படிப்பில் சேர்ந்து படிக்கலாம்.
- டிகிரி முடித்தவுடன் எல்.எல்.பி., (LLB) என்ற 3 ஆண்டுகள் படிப்பில் சேர்ந்து படிக்கலாம்.

- 5ஆண்டு ஒருங்கிணைந்த சட்டப்படிப்பில் பி.ஏ.,எல்.எல்.பி., பி.காம்., எல்.எல்.பி.,பி.பி.ஏ.,எல்.எல்.பி., மற்றும் பி.சி.ஏ.,எல்.எல்.பி.,(BA. LLB., B.Com. LLB., BBA LLB., BCA LLB) ஆகிய சட்டப் படிப்புகளும் உள்ளன.

கல்வி நிறுவனங்கள்

இந்திய அளவில் 22 தேசிய சட்டப் பல்கலைகழகங்களும் மற்றும் சில தனியார் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. 22 தேசிய சட்டப் பல்கலை கழகங்களில் ஒன்று திருச்சியில் இயங்கிவருகிறது.. தமிழகத்தை பொறுத்தவரை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கார் சட்டப்பல்கலைகழகம் மூலம் சென்னை, மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி உள்பட 10 சட்டக் கல்லூரிகள் இயங்கி வருகினற்ன சேலத்திலும், திண்டிவனத்திலும் தலா ஒரு தனியார் சட்டக்கல்லூரிகள் இயங்கிவருகின்றன. நிகர் நிலை சட்டப்படிப்பைவழங்குகின்றனர்.

வேலைவாய்ப்புகள்

சட்டப் படிப்பை வெற்றிகரமாக முடிக்கும்பட்சத்தில் நீதிபதி, வழக்கறிஞர் சட்ட ஆலோசகர் போன்ற பல்வேறு வேலைவாய்ப்புகள் காத்திருக்கின்றன.

எங்கு படிக்கலாம்:

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைகழகத்தின் கீழ் சென்னை (தற்போது திருவள்ளூர் மாவட்டம், பட்டறை பெரும்புதூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பாக்கம்), மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி, செங்கல்பட்டு, வேலூர் ,விழுப்புரம், தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் என 10 அரசு சட்டக்கல்லூரிகள் மற்றும் தனியார் சட்டக்கல்லூரியும், இயங்கி, வருகின்றன. மேலே உள்ள அனைத்து சட்டக் கல்லூரியிலும் பி.ஏ.,எல்.எல்.பி.,என்ற 5 ஆண்டு ஒருங்கிணைந்த இளநிலை சட்டப்படிப்புகள் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இந்த 5 ஆண்டு ஒருங்கிணைந்த சட்டப்படிப்பில் சேருவதற்கு 12ம் வகுப்பில் 70% மதிப்பெண்களுடன் தேர்சசி பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு கல்வி ஆண்டும் 1411 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

அதேபோல் அனைத்து சட்டக் கல்லூரியிலும் எல்.எல்.பி., என்ற 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்புகள் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இந்த 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் சேருவதற்கு ஏதாவது ஒரு இளங்கலை பட்டப்படிப்பில் 60% மதிப்பெண்களுடன் தேர்சசி பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு கல்வி ஆண்டும் 1541 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

வயதுவரம்பு

இந்த 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் சேருவதற்கு வயது வரம்பு கிடையாது.

விண்ணப்பிக்கும் முறை

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைகழகத்தின் கீழ் செயல்படும் 11 சட்டக் கல்லூரிகளில் சேருவதற்கு நுழைவு தேர்வு ஏதும் கிடையாது. 12ம் வகுப்பில் எடுக்கும் மதிப்பெண்ணின் அடிப்படையில் தான் தமிழ்நாடு டாக்டர். அம்பேத்கர் சட்டப் பல்கலைகழகத்தில் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு (Counselling) நடத்தப்படுகிறது. சட்டக் கல்லூரியில் சேர்வதற்காக விண்ணப்ப படிவத்தை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைகழகத்திலும் மற்றும் அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் நேரில் அணுகி இந்தியன் வங்கி கட்டண செல்லான் பெற்று விண்ணப்பக் கட்டணத்தை வங்கியில் செலுத்தி, மேற்படி செல்லானின் பல்கலைகழக படிவத்தினை கொடுத்து விண்ணப்பம் வாங்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் மற்றும் அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மாணவர்கள் சமர்பிக்கவேண்டும்.

விண்ணப்ப படிவத்துடன் 12ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், பிறப்புசான்றிதழ் அல்லது 10ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் ,பள்ளி மாற்றுச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் நகல் எடுத்து, மேற்படி ஆவணங்களில் மாணவர்களின் கையெழுத்து செய்ய வேண்டும். டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைகழகம் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மாணவர்களின் தரவரிசை பட்டியலை (Rank List) பல்கலைகழகம் தனது இணைய தளமான www.tndalu.ac.in என்ற இணைய தளத்தில் வெளியிடும். தர வரிசை பட்டியலின் (RankList) அடிப்படையில் ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாக கலந்தாய்வு(Counselling) நடத்தப்படும்.

கல்விக் கட்டணம்

கலந்தாய்வில் (Counselling) கல்லூரி தேர்வு செய்யப்பட்டவுடன் ரூ.1620/-கலந்தாய்வு (Counselling) அறையில் இருக்கும் வங்கி கவுண்டரில் உடனடியாக செலுத்த வேண்டும். கலந்தாய்வு (Counselling) கடிதம் பெற்ற குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்ந்தெடுத்த சட்டக் கல்லூரிக்கு சென்று அட்மிஷன் பதிவு செய்து சட்டக் கல்லூரியில் ரூ.1400/- கட்டணம் செலுத்த வேண்டும். சட்டக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் ஒவ்வொரு செமஸ்டருக்கும் தலாரூ.690/- கல்விக் கட்டணமாக செலுத்த வேண்டும்.

மத்திய சட்டக் கல்லூரி, சேலம் (தனியார்)

சேலம், மத்திய சட்டக்கல்லூரியில் பி.ஏ., எல்.எல்.பி., என்ற 5 ஆண்டு ஒருங்கிணைந்த இளநிலை சட்டப்படிப்பும் ,எல்.எல்.பி., என்ற 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. இந்த 5 ஆண்டு ஒருங்கிணைந்த இளங்கலை சட்டப்படிப்பில் சேருவதற்கு 12ம் வகுப்பில் 45% மதிப்பெண்களுடனும், 3 ஆண்டு இளங்கலை சட்டப்படிப்பில் சேருவதற்கு பட்டப்படிப்பில் 45% மதிப்பெண்களுடனும் தேர்ச்சி பெற்றிருக்க

வேண்டும். கல்லூரி விண்ணப்பபடிவம் பெறுவதற்கு ரூ.500/- மதிப்பில்THE CENTRAL LAW COLLEGE என்ற பெயரில் DD எடுத்து அனுப்ப வேண்டும். மேலும் பதிவுக் கட்டணமாக ரூ.2,000/- மற்றும் அட்மிஷன் கட்டணமாகரூ. 3,000/- கல்லூரியில் சேரும்போது கட்டவேண்டும். ஒவ்வொரு கல்வி ஆண்டிக்கிற்கும் கல்விக் கட்டணமாகரூ. 80,000/- வரைவ சூலிக்கப்படுகிறது.

LLBHons - 5 வருட ஒருங்கிணைந்த பட்டப் படிப்பு

தமிழகத்தில் சென்னை தரமணியில் அமைந்துள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைகழகத்தின் நேரடி கட்டுப்பாட்டில் ஸ்கூல் ஆப் எக்ஸலேன்ஸ் இன்லா(School of Excellence in Law) என்ற கல்விநிறுவனம் செயல்பட்டு வருகிறது. இங்கு

- பி.ஏ.,எல்.எல்.பி.,ஹானர்ஸ் (BA LLB Hons.)
- பி.காம்.,எல்.எல்.பி.,ஹானர்ஸ் (B.Com., LLB Hons.)
- பி.பி.ஏ.,எல்.எல்.பி.ஹானர்ஸ் (BBA LLB Hons.)மற்றும்
- பி.சி.ஏ.,எல்.எல்.பி.,ஹானர்ஸ் (BCA LLB Hons.)

என நான்கு விதமாக ஒருங்கிணைந்த 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்புகள் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இந்த 5 ஆண்டு ஹானர்ஸ் (Hons.) இளநிலை சட்டப்படிப்பில் சேருவதற்கு 12ம் வகுப்பில் 70% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு கல்வி ஆண்டும் 156 மாணவர்கள் சேர்க்கப் படுகிறார்கள்.

கல்விக் கட்டணம் -

5 ஆண்டு ஹானர்ஸ் (Hons.):- இளநிலை சட்டப் படிப்பில் சேருவதற்கு வயது வரம்பு கிடையாது. இந்த 5 ஆண்டு ஹானர்ஸ் (Hons.) இளநிலை சட்டப்படிப்பிற்கு ஒரு வருட கல்விக் கட்டணமாக ரூ.87,635/- வசூலிக்கப்படுகிறது.

3 வருட பட்டப் படிப்பு:- இதே போல் எல்.எல்.பி.,ஹானர்ஸ் (Hons.) என 3 ஆண்டு ஹானர்ஸ் (Hons.) இளநிலை சட்டப்படிப்பு கற்றுக் கொடுக்கப்படுகிறது. இந்த 3 ஆண்டு ஹானர்ஸ் (Hons.) இளநிலை சட்டப்படிப்பில் சேருவதற்கு ஏதாவது ஒரு இளங்கலை பட்டப்படிப்பில் 60%மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

ஒவ்வொரு கல்வி ஆண்டும் 156 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இந்த 3 ஆண்டு ஹானர்ஸ் (Hons.) இளநிலை சட்டப்படிப்பில் சேருவதற்கு வயது வரம்பு கிடையாது.

கல்விக் கட்டணம் - 3ஆண்டு ஹானர்ஸ் (Hons.)

இளநிலை சட்டப்படிப்பிற்கு ஒரு வருட கல்வி கட்டணமாக ரூ.87,135/- வசூலிக் கப்படுகிறது.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைகழகம், திருச்சி.

- TamilNadu National law School ,Trichy
- TamilNadu National law University

CLAT என்ற சட்ட பொது நுழைவு தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்கள், தமிழ்நாட்டில், திருச்சியில் அமைந்துள்ள தமிழ்நாடுதேசிய சட்டப் பல்கலைகழகத்தில் சேர்ந்து சட்டக் கல்வி பயிலலாம். இங்கு பி.ஏ.,எல்.எல்.பி., ஹானர்ஸ் (Hons.) மற்றும் பி.காம்., எல்.எல்.பி., ஹானர்ஸ் (Hons.) என இரண்டு விதமாக ஒருங்கிணைந்த 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்புகள் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

மூன்று பிரிவுகளில் முதுநிலை சட்டப் படிப்பும்கற்றுக்கொடுக்கப்படுகிறது.இந்த 5 ஆண்டு ஒருங்கிணைந்த இளநிலை சட்டப்படிப்பில் சேருவதற்கு 12ம் வகுப்பில் 45% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். CLAT என்ற சட்ட பொதுநுழைவு தேர்வில் கலந்து கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும். ஒவ்வொரு கல்வி ஆண்டும் 120 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

கல்விக்கட்டணம்

ஒவ்வொரு கல்வி ஆண்டிக்கிற்கும் கல்விக் கட்டணமாக ரூ.2,23,000/- வரை வசூலிக்கப்படுகிறது.

முகவரி:

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைகழகம்
திண்டுக்கல் மெயின்ரோடு, நாவலூர்குட்டப்பட்டு
திருச்சிராப்பள்ளி-620027.
போன்:0431-2692108, 2692102, 2692105.

TNTJ STUDENTS WING
TNTJ Students Wing

CHARTERED ACCOUNTANT | பட்டய கணக்காளர்

பன்னிரெண்டாம் வகுப்பிற்கு பிறகு மேற்படிப்பில் எதை தேர்வு செய்வது என்பது குறித்து பல்வேறு குழப்பங்கள் இருப்பதை மாணவர்களிடையே நாம் காண முடிகிறது அதிலும் குறிப்பாக பொறியியல் பட்டதாரி களுக்கு வேலைவாய்ப்பின்மை என்கிற எண்ணம் அதிகரித் துள்ள நிலையில் கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு கலை மற்றும் அறிவியல் படிப்புகளில் சேர ஒரு எண்ணிக்கை கூடுதலாகவே இருந்ததை நம்மால் காண முடிந்தது.

12ஆம் வகுப்பில் வணிகவியல் பாடப்பிரிவை தேர்ந்தெடுத்த மாணவர்களில் பெரும்பாலும் பட்டப்படிப்பில் பிபிஏ , பிகாம் அல்லது பிஏ வரலாறு , பொருளாதாரம் என பாடப்பிரிவுகளை தேர்வு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். பன்னிரண்டாம் வகுப்பு வணிகவியல் பாடப்பிரிவை படித்த மாணவர்கள் பட்டய கணக்காளர் எனப்படும் சாட்டர்ட் ஆக்கவுண்டன்ட் என்று தொழில் படிப்பில் சேர்ந்து படிப்பது மிகச் சிறந்ததாக இருக்கும்.

சார்ட்டட் அக்கவுன்டன்ட் படிப்பு பற்றிய அச்சம் மாணவரிடம் அதிகமாகவே இருக்கின்றது. அரசு பள்ளியில் படித்த மாணவர்கள் கிராமப்புற மாணவர்கள் என யாராயினும் சரியான முயற்சி, கடின உழைப்பும் மற்றும் ஆர்வத்துடன் செயல்பட்டால் அவர்களால் இலகுவாக வெற்றி பெற்ற பல சம்பவங்களை நம்மால் காண இயலும்..

கல்வித்தகுதிகள்

பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ள மாணவர் சிஏ படிப்பில் நேரடியாக சேரலாம்.

வணிகவியல் பாடப்பிரிவை படிக்காத வர்கள் சிஏ படிக்கஇயலாதா?

பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும்பொழுது வணிகவியல் பாடப்பிரிவு தெரிந்தவர்கள் மட்டுமே சிஏ படிப்பில் சேர முடியும் என்ற ஒரு தவறான எண்ணம் பலருக்கு இருப்பது வேதனையான ஒன்று!

12ஆம் வகுப்பில் எந்த பாடப்பிரிவை எடுத்து நீங்கள் படித்திருந்தாலும் நீங்கள் சி ஏ படிக்கலாம். 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களாக இருப்பின் நீங்கள் சிஏ படிப்பில் சேருவதற்கு முன்பாக சிஏ பவுண்டேஷன் (CA foundation) படிப்பில் சேர வேண்டும்.

பவுண்டேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே சிஏ இன்டர்மீடியட் (CA - intermediate) பாடப் பிரிவில் சேர இயலும்!. சிஏ பவுண்டேஷன் படிப்பின் கால அளவு ஓராண்டு ஆகும்.

பட்டப் படிப்பு முடித்தவர்கள் எவ்வாறு சேர்வது?

பிகாம், பிபிஏ, பிபிஎம், என வணிகவியல் பிரிவில் இளங்கலை பட்டப்படிப்பு முடித்தவர்கள் சிஏ பவுண்டேஷன் பாடப்பிரிவில் சேராமலேயே நேரடியாக சிஏ இன்டர்மீடியட் (CA - intermediate) பாடப்பிரிவில் சேர்ந்து படிக்கலாம்.. CA intermediate படிப்பின் கால அளவு ஒரு ஆண்டு ஆகும்.

சிஏ இன்டர்மீடியட் படிப்பில் பதிவு செய்தபிறகு 4 வாரங்கள் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்றுக்கொள்ள வேண்டும். (Integrated course on information technology and soft skill - ICITSS). இதில் தேர்ச்சி பெற்ற பிறகு ஏற்கனவே சிஏ பட்டம் பெற்ற ஒரு ஆடிட்டரிடம் 3 ஆண்டுகள் நேரடி பயிற்சி சேர்ந்து பணியாற்றுவது/ பயில்வது கட்டாயம். இந்த பயிற்சி காலங்களில் சுமார் 3000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும்.

பயிற்சி காலம் முடிவடைந்த நிலையில் CA படிப்பின் இறுதி தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். இந்த இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு அந்த மாணவன் ஒரு சார்ட்டட் அக்கவுண்ட் ஆக ஆடிட்டராக முறையாக பதிவு செய்து கொள்ள வேண்டும்.சிஏ இறுதி தேர்விற்கு பதிவு செய்தபிறகு 4 வாரங்கள் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்றுக்கொள்ள வேண்டும். (Advanced integrated course on information technology and soft skill - AICITSS) .

வணிகவியல் சாராத பட்டப்படிப்பு முடித்தவர்கள் நிலை என்ன?

பொதுவாகவே வணிகவியல் சாராத பட்டப்படிப்பை முடித்தவர்கள் சிஏ படிப்பில் சேர முடியாது என்ற மற்றொரு தவறான எண்ணமும் அதிகமான நபர்களின் எண்ணத்தில் ஆழப்பதிந்து கிடைக்கின்றது. அது முற்றிலும் தவறானது.

எந்த ஒரு பட்டப்படிப்பை படித்திருந்தாலும் சிஏவில் அவர்களால் சேர இயலும். ஆனால் பி.காம் போன்ற வணிகவியல் பட்டப் படிப்பை முடித்தவர்களுக்கு சிஏ படிப்பது சிறிது எளிதாகவே இருக்கும். வணிகவியல் பாடப்பிரிவை தேர்ந்தெடுத்து பட்டப்படிப்பு முடித்தவர்கள் 55 விழுக்காடு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் இதர பட்டப்படிப்பு முடித்தவர்கள் 60 விழுக்காடு பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பது மட்டும் தான்

வித்தியாசம். இதற்கும் குறைவான மதிப்பெண்களுடன் யாரேனும் தேர்ச்சி பெற்றிருந்தால் அவர்களாலும் சிஏ படிக்க இயலும். ஆனால், அவர்கள் சிஏ பவுண்டேஷன் பாடப்பிரிவு மூலமாகத்தான் சிஏ படிப்பில் நுழைய இயலும்.

கல்விக்கட்டணம்

சுமார் 5 ஆண்டுகள் பயிலக்கூடிய இந்தப் படிப்பிற்கு தோராயமாக 50,000 ரூபாய் முதல் 75,000 ரூபாய் வரை செலவாகும்.இந்த காலகட்டங்களில் தனியார் பள்ளியில் எல்கேஜி படிப்பிற்கு கூட இந்த அளவு கல்விக்கட்டணம் வசூலிப்பது வேதனைக்குரியது!

எந்த கல்லூரியில் படிப்பது

தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியாவில் முழுவதும் எந்த ஒரு கல்லூரியிலும் சி ஏ என்ற படிப்பு பயிற்சி அளிக்கப்படுவதில்லை.. இந்தியன் சார்ட்டர்ட் அக்கவுன்டன்ட்ஸ் இன்ஸ்டிடியூட்டில் (ஐசிஏஐ - ICAI) என்ற அமைப்பில் பதிவு செய்வது, தேர்வு எழுதி தேர்ச்சி பெறுவது மூலமாக மட்டுமே ஒருவர் சார்ட்டட் அக்கவுண்டண்ட் ஆக முடியும். ஆனாலும் அனைத்து பெருநகரங்களிலும் சிஏ படிப்பிற்கு என பல தனியார் நிறுவனங்கள் பயிற்சி அளிக்கின்றன!

சம்பளம் மற்றும் வேலை வாய்ப்புகள்:

தணிக்கை நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், சட்ட நிறுவனங்கள் போன்றவற்றில் சி.ஏ.க்களுக்கு அதிக தேவை உள்ளது. பயிற்சி காலங்களின் போது சிஏ படிக்கும் மாணவருக்கு குறைவான வருமானம் ஈட்ட முடியும். ஆனால், மாணவர்கள் பாடநெறியை முடித்த பின்னர் நல்ல சம்பளத்தை எதிர்பார்க்கலாம். ஒரு CA இன் தொடக்க சம்பளம் சராசரியாக 40,000 வரை இருக்கலாம். ஆனால் இறுதிப் படிப்பை முடித்த பின்னர் ஆண்டுக்கு 4 முதல் 6 லட்சம் வரை. ஒரு CA இன் சம்பளம் அவர் வேலை செய்யும் நகரம் மற்றும் நிறுவனத்தைப் பொறுத்தது.

பிரபல நிறுவனங்களின் பெயர்கள்

சுமார் 10 லட்சத்திற்கும் அதிகமான சார்ட்டட் அக்கவுண்டண்ட் இந்தியாவில் மட்டும் தேவைப்படும் நிலையில் ஒன்றரை லட்சம் பதிவு செய்த சார்டர்ட் அக்கவுண்டன்ட் மட்டுமே உள்ளனர்.தணிக்கை செய்வதற்கு பிரபலமான சில நிறுவனங்கள் உடைய பெயர்களை கீழே குறிப்பிட்டுள்ளோம்

DELOITTE; Price Waterhouse Coopers; KPMG; ERNST &YOUG ; BDO INTERNATIONAL

கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர் (ஏடிசி) | AccountingTechnicianCourse

TNTJ STUDENTS WING

ஐசிஏஐ (ICAI) நிறுவனத்தின் சார்பாக அக்கவுண்டிங் டெக்னீசியன் கோர்ஸ் என்று சொல்லப்படக்கூடிய மற்றொரு பாடப் பிரிவும் நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பாடப் பிரிவைத் தேர்ந்தெடுத்து படிக்க விரும்புபவர்கள் பன்னிரண்டாம் வகுப்பு மற்றும் காமன் புரோபீஷியேன்ஸி டெஸ்ட் எனப்படும் சிபிடி என்ற தேர்விலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இது மட்டுமல்லாது சில குறிப்பிட்ட தேர்வுகளும் உண்டு.

பின்குறிப்பு:

மேலே சில குறிப்பிட்ட எளிய முறையில் புரிய கூடிய அளவு கட்டுரையாக வடிவமைத்துள்ளோம். இதுமட்டுமல்லாது பல விதிவிலக்குகளும் கூடுதல் நெறிமுறைகளும் பற்றி விரிவாக அறிந்துகொள்ள https://www.icai.org/ இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

TNTJ
Students Wing

CORPORATE SECRETARYSHIP | கார்ப்பரேட் செயலாளர்

பொருளாதாரத்தை ஈட்டுவதற்கு பல்வேறு துறைகள் இருந்தாலும் ஒரு சில துறைகள் மட்டும்தான் ஒரு நிறுவனத்தில் மிக முக்கியமான அங்கம் வகிக்கக்கூடிய பொறுப்பை வாய்ப்பாக அளிக்கிறது. அப்படிப்பட்ட வேலை வாய்ப்பை அளிக்கும் ஒரு பாடப்பிரிவு தான் கம்பெனி செக்ரட்டரி கோர்ஸ். இதற்காக மத்திய அரசே ஒரு கல்வி நிறுவனத்தை நிறுவியுள்ளது. "தி இன்ஸ்டிடியூட் ஆப் கம்பெனி செக்ரட்டரீஸ்" என்ற இந்நிறுவனத்தின் தலைமையகம், புதுடில்லியில் உள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன்பாக இந்த பாடப்பிரிவை அறிமுகப்படுத்தியது இந்திய அரசாங்கம்.

சென்னை, மும்பை, கொல்கத்தா, டில்லி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் உள்ளன. சென்னை மண்டல அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ், கோவை, சேலம், பெங்களூரு, ஐதராபாத், கொச்சி, மதுரை, மங்களூரு, மைசூரு, புதுச்சேரி, திருவனந்தபுரம், திருச்சி, விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் கிளை அலுவலகங்கள் இயங்குகின்றன. சென்னை மண்டல அலுவலகம் சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ளது.

இப் பாடப்பிரிவு மூன்று பகுதிகளாக கொண்டது.

1. பவுண்டேஷன் கோர்ஸ்
2. எக்ஸிக்யூட்டிவ் கோர்ஸ்
3. ப்ரொபஷனல் கோர்ஸ்

பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவர்கள் பவுண்டேஷன் கோர்சில் சேர வேண்டும். டிகிரி முடித்தவர்கள் நேரடியாக எக்சிகியூட்டிவ் கோர்சில் சேர முடியும். 50 சதவீத மதிப்பெண்களுடன் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மண்டல அலுவலகங்கள், கிளை அலுவலகங்களில் நூலக வசதி உள்ளது. வெற்றிபெற ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40 சதவீத மதிப்பெண் பெற வேண்டும். எல்லா பாடங்களிலும் சேர்த்து சராசரி 50 சதவீத மதிப்பெண் பெற வேண்டும். இப் படிப்பை படித்து முடிப்பதற்கு சுமார் 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபாய் செலவாகும்.கம்பெனி செக்ரட்டரி படிப்பு முடித்தவர்கள் வக்கீல், டாக்டர், ஆடிட்டர் போல தனியாகவும் practise செய்ய முடியும். நிறுவனம் தொடங்குதல், அரசு அலுவலகங்களில் நிறுவனம் சமர்பிக்க வேண்டிய ஆவணங்களை சமர்ப்பித்தல், கம்பெனி கோர்ட்களில் ஆஜராகுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம்.

அரசுத் துறைகளில், இப்படிப்பை முடித்தவர்களுக்கு பதவி உயர்வு, ஊக்கத்தொகையு கிடைக்கின்றன. கல்லூரி பேராசிரியராக பணியில் அமரலாம். கிளை அலுவலகங்கள் நடத்தும் வகுப்புகளிலும் பாடம் எடுக்க முடியும். கூடுதல் விவரங்களை கீழ்கண்ட இணையதளத்தில் காணலாம்.www.icsi.edu

COST AND MANAGEMENT ACCOUNTANCY [CMA] | செலவு மற்றும் மேலாண்மை கணக்கியல் படிப்பு

CMA தொழில் படிப்பு

பன்னிரண்டாம் வகுப்பில் வணிகவியல் படிக்க கூடிய மாணவர்கள் தேர்ந்தெடுக்கும் மிக முக்கிய துறைகளில் ஒன்றான சார்டட் அக்கவுண்டன்சி / பட்டயக் கணக்காளர் (Chartered Accountancy) போன்று காஸ்ட் அண்ட் மேனேஜ்மெண்ட் அக்கவுண்டன்சி (Cost and Management Accountancy) என்று சொல்லப்படக்கூடிய இந்த படிப்பும் தனித்துவமான தொழிற் சார்ந்த படிப்பாகும்.

கல்வித்தகுதி

Chartered Accountant படிப்பிற்கு என்ன கல்வித் தகுதிகள் அவசியமோ அதுவே CMA படிப்பிற்கும் பொருந்தும். அதாவது பன்னிரண்டாம் வகுப்பில் எந்தப் பிரிவில் தேர்ச்சி பெற்றிருந்தாலும் இந்த படிப்பிற்கு விண்ணப்பிக்கலாம் (Fine Arts) போன்ற துறை சார்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியாது).

குறிப்பு: பட்டப்படிப்பு முடித்தவர்கள் நேரடியாக Executive (இடைநிலை) தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் விண்ணப்பிக்க வயது உச்ச வரம்பு ஏதும் கிடையாது

விண்ணப்பிக்கும் முறை:

ஆன்லைன் அல்லது தபால் மூலமாக விண்ணப்பிக்கலாம். தேவைப்படும் ஆவணங்களையும், பணம் கட்டியதற்கான ரசீதையும் பதிவேற்றம் செய்ய அல்லது தபாலில் அனுப்ப வேண்டும். தமிழநாடு, தெலுங்கானா, ஆந்திரா கர்நாடகா, கேரளா, புதுச்சேரி மற்றும் லட்சத்தீவுகள் போன்ற மாநிலங்கள் மற்றும் பிரதேசதங்களில் உள்ளவர்கள் விண்ணப்பிக்க வேணடிய முகவரி

Southern India Regional Council

No.4, Montieth Lane, Egmore, Chennai - 600 008

Ph: 044-28554443/ 28554326/ 28528219; Website: www.sircoficwai.com; Email: sirc@ icmai.in

தேர்வு விவரம் மற்றும் நிலைகள்:

இப்படிப்பை படித்து முடிப்பதற்கு சுமார் மூன்று ஆண்டுகள் வரை ஆகும். சாட்டர்ட் அக்கவுண்டன்ட் படிப்பைப் போலவே இந்த படிப்பிற்கும் மூன்று நிலைகள் உள்ளன.

- CMA Foundation (6 மாதம்)
- CMA Executive (1 வருடம்)
- CMA Final (1 வருடம்)

CMA பவுண்டேஷன்

மொத்தம் நான்கு தாள்கள் இருக்கும். தலா 100 மதிப்பெண்களுக்கு தேர்வு எழுத வேண்டும். ஒவ்வொரு பரீட்சையிலும் குறைந்தது 40 மதிப்பெண் களும் நான்கு தாள்களின் மொத்த கூட்டு மதிப்பெண்களாக 200 (50%) பெற்றவர்களே தேர்ச்சியடைய முடியும்

CMA- எக்சிக்யூட்டிவ் மற்றும் CMA- ஃபைனல்

எக்சிக்யூட்டிவ் மற்றும் ஃபைனல் பிரிவுகளில் மொத்தம் 8 பாடங்கள் உள்ளன. அவை குரூப் 1 குரூப் 2 என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் தலா நான்கு பாடங்கள் இருக்கின்றன. இரண்டு குரூப்களையும் ஒன்றாக அல்லது தனித்தனியாக தேர்வு எழுதலாம் ஒவ்வொரு பரீட்சையிலும் குறைந்தது 40 மதிப்பெண் களும் நான்கு தாள்களின் மொத்த கூட்டு மதிப்பெண்களாக 200 (50%) பெற்றவர்களே தேர்ச்சியடைய முடியும். எக்சிக்யூட்டிவ் பிரிவில் தேர்ச்சி பெற்றவர்கள், இறுதி தேர்வுக்கு நுழைவதற்கு முன்பாக குறைந்தபட்சம் 6 மாதங்கள் ஒரு மேலாண்மை கணக்காளரிடம் பயிற்சி எடுக்க வேண்டும்.

ஆண்டு முழுவதும் சேர்க்கை நடைபெறுகின்றன. இருப்பினும் ஜூன் மாதத்தில் தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள் ஜனவரி 31ம் தேதிக்குள்ளும், டிசம்பர் மாதம் தேர்வு எழுத விரும்புபவர்கள் ஜூலை 31ம் தேதிக்குள்ளும் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிப்பதற்கு தேவைப்படும் ஆவணங்கள்

- Attested copy of Mark Sheet
- 10, 12th and degree certificate
- Passport size photo

கட்டண விவரம்

விண்ணப்பக் கட்டணம் ரூபாய் 250

TNTJ STUDENTS WING

பதிவுக் கட்டணம்

- Foundation = ₹4000
- Executive = ₹2000
- Final = ₹17000

இது தவிர தேர்வுக் கட்டணமும், சில பயிற்சி கட்டணங்களும் செலுத்த வேண்டும்.

பிறபயிற்சிகள்

- கம்யூனிகேஷன் அண்ட் சாஃப்ட் ஸ்கில்
- கட்டாய கணினிப் பயிற்சி - 100 மணி நேரம்
- இண்டஸ்ட்ரி ஓரியன்டேஷன் - 7 நாட்கள்
- மாடுலர் ட்ரெய்னிங் - 15 நாட்கள்

வேலைவாய்ப்பு

CMA படித்தவர்களுக்கு இலட்சக் கணக்கில் வேலைவாய்ப்புகள் இருப்பதாக அறிய முடிகிறது. ஒரு பொருளின் தரத்தை குறைக்காமல் உற்பத்தி செலவை குறைக்க திட்டம் வகுப்பதால் அனைத்து உற்பத்தித் தொழிற்சாலைகளிலும் CMA படித்தவர்களுக்கு நல்ல வரவேற்பு உண்டு. மேலும் ஆராய்ச்சி, கல்வி போன்ற நிறுவனங்களில் நிர்வாக இயக்குனர், தலைமை நிதி அதிகாரி, தணிக்கை அதிகாரி, விலை நிர்ணய ஆலோசகர் என பல பொறுப்புகளில் பணியாற்றும் வாய்ப்புகள் உள்ளன. இதுமட்டுமல்லாது கலால் மற்றும் சுங்கத்துறை நிதியமைச்சகம் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் என பல அரசுத் துறைகளிலும் CMA படிப்பு முக்கியத்துவம் வாயந்ததாக கருதப்படுகிறது.

TNTJ Students Wing

HISTORY | வரலாறு

இன்றைய கல்வி என்பது அறிவைத் தேடுவதல்ல. பணம் சம்பாதிப்பதற்கான வழியைத் தேடுவது மட்டுமே என்றாகிவிட்டது. எனவே அறிவுத் தேடலுக்கு உதவும் பல பாடங்கள், பிரிவுகள் பள்ளி, கல்லூரிகளில் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன.

அவற்றில் முக்கியமா னவை ஹிஸ்டரி (History) குரூப் எனப்படும் வரலாற் றுப் பிரிவு, இவை சில அரசுப் பள்ளிகளில் மட் டுமே இன்று உள்ளன. எந்தத் தனியார் பள்ளி யிலும் இல்லை எனும் நிலைதான் உள்ளது . இன்று பெருமளவு பள்ளிக ளில் வேலை வாய்ப்பை பெற்றுத் தரும் என்று நம்பப்படுகின்ற பிரிவுகளான கணிதம் - உயிரியல் பிரிவு, வணிகவியல் - வணிகக் கணக்கு, கணிணி அறிவியல் - கணக்குபோன்றவரை மட்டுமே உள்ளன. சில பள்ளிகளில் வொகேஷனல் எனும் தொழில் கல்வி வைத்திருக்கிறார்கள். இதன் மூலம் அதிக மதிப்பெண்கள் பெற முடியும் என்பதால் மாணவர்களை இதில் சேரச் சொல்லி வற்புறுத்துகிறார்கள்.

ஆனால் பெரும்பாலான தனியார் பள்ளிகளில் வரலாற்றுப் பிரிவே இல்லை எனும் நிலை உருவாகிவிட்டது. காரணம் வரலாறு பாடப்பிரிவில் படித்து என்ன படிப்பை தொடரலாம், என்ன வேலைவாய்ப்புகள் கிடைக்கப்போகிறது என்ற அறியாமையே காரணம் . உண்மையில் மற்ற பாடப்பிரிவுகளை விட அதிகமான கற்கும் வாய்ப்புகளும் வேலை வாய்ப்பும் வரலாற்றுப் பாடப்பிரிவில் இருக்கின்றன. வரலாறு படித்தால் வரலாறு படைக்கலாம் என்பதை இந்த கட்டுரையின் வழியே பார்க்கலாம்.

யார் வரலாறு படிக்கலாம்

பி.ஏ. வரலாறு படிப்பில் சேர ஒரு மாணவர் பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பி.ஏ. வரலாறு பாடப்பிரிவை தேர்வு செய்து படிப்பவர்கள் முதுநிலை பட்டப்படிப்பை (MA) எடுத்து முடித்தால் நல்ல பதவிகளில் அமரலாம். பி.ஏ. வரலாறு (B.A. History) பட்டப்படிப்பு 3 ஆண்டுகள் கொண்டதாகும். சில கல்வி நிறுவனங்கள் இப்படிப்பில் மாணவர்களை சேர்க்க நுழைவுத் தேர்வையும் நடத்துகின்றன. (உதாரணமாக

திருவாரூரில் அமைந்துள்ள மத்திய பல்கலைக் கழகம்) . வரலாறு படித்து முடித்த பிறகு இந்தப் பாடப்பிரிவிலேயே ஆராய்ச்சியும் மேற்கொள்ளலாம்.

காத்திருக்கும் வாய்ப்புகள்!

1. ஆசிரியர்பணி

அரசுத் துறைகளில் வேலை வாயப்பைப் பெற வேண்டும் என முயற்சிக்கும் மாணவர்கள் இளங்கலை வரலாற்றுப் பாடத்தை எடுத்துக் கொண்டு நல்ல கல்லூரிகளைத் தேர்வு செய்து படிக்க வேண்டும். இதன் பிறகு முதுகலை பட்டப் படிப்பை படித்தால் நல்லது. பி.எ வரலாறு முடித்த பிறகு கல்வியியல் கல்லூரியில் சேதந்து பி. எட் (B.Ed.,) இரண்டாண்டுகள் படித்தால் ஆசிரியர் பணியில் ஜொலிக்கலாம்.

தனியார் மற்றும் அரசு பள்ளிகளில் கட்டாயம் வரலாற்று ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். மத்திய மாநில அரசுகள் நடத்தும் TET தேர்வுகளில் தேர்ச்சி பெற்றால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் அரசு வேலை வாய்ப்பை பெறலாம். அல்லது தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களாக பணியாற்றலாம்.

2. பேரசிரியர் பணி மற்றும் ஆராய்ச்சித்துறை வாய்ப்புகள்!

அரசு துறை சார்ந்த தேர்வுகளுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில் தொலைதூர கல்வி வழியாகக்கூட முதுகலை படிப்பை படிக்கலாம். இதையடுத்து, எம்.பில். (M.Phil.,) படிக்க சேர்ந்தால் சில பல்கலைக் கழகங்களில் மாதந்தோறும் ரூ. 3 ஆயிரம் உதவித்தொகை கிடைக்கும். (உதாரணமாக புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் வழங்கப்படுகிறது) .

ஆங்கில மொழியில் நல்ல அனுபவத்தையும் பெற முடியும். எம்.பில் முடித்தவர்கள் ஆராய்ச்சி துறையிலோ , தனியார் மேல்நிலைப் பள்ளியில் முதுகலை ஆசிரியராகவோ அல்லது தனியார் கலைக் கல்லூரிகளில் உதவி பேராசிரியராக பணியாற்றலாம். எம். எவரலாறு அல்லது எம். ஏ. எம்.பில் . (M.A. M.Phil.,) முடித்த வரலாற்று பட்டதாரிகள் மத்திய அரசு நடத்தும் (NET Exam For Lectureship JRF) தேர்விலும், தமிழக அளவில் நடத்தப்படும் (SLET) தேர்லும் தேர்ச்சி பெற்றால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலைக் கல்லூரிகளில் உதவி பேராசிரியராக பணியாற்றலாம்.

எம். ஏ. எம்.பில் (M.A. M.Phil.,) முடித்த வரலாற்று பட்டதாரிகள் ஆய்வாளர் (பி.ஹெச்.டி - Ph.D.,) படிப்பில் சேர்ந்து தேர்ச்சி பெற்றால் பல்வேறு அரசு துறைசார்ந்த வேலைவாய்பபுகள் உள்ளன. மேலும், புதுதில்லி ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகம்,

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களில் நடைபெறும் இளநிலை ஆய்வாளர் (பி.ஹெச்.டி) தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்குப் பல்கலைக்கழக நிதியுதவிக் குழு மூலம் 5 ஆண்டுகளுக்கு மாதம் மாதம் உதவித் தொகை கிடைக்கும். அத்துடன் ஆண்டுக்கு புத்தகங்கள் வாங்க கணிசமான உதவித்தொகை கிடைக்கும். எனவே, நன்றாகக் படிக்கக்கூடிய மாணவர்கள் இப்படிப்பில் சேர்ந்தால் 5, 6 ஆண்டுகளில் நல்ல நிலைக்கு வர முடியும். இப்படிப்பை முடித்தால் தொல்லியல் துறை, சர்வதேச அளவில் யுனெஸ்கோ நிறுவனத்தின் வரலாற்று ஆய்வு மையம், உலகம் முழுதும் உள்ள அருங்காட்சியகங்களில் வேலை வாய்ப்பை பெற முடியும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பேராசியர்களாக பணியாற்ற முடியும்.

3. போட்டித் தேர்வின் மூலம் அரசு பணிகள்

இன்று நாம் அரசு அலுவலகங்களுக்கு சென்றால் அங்கு பணியாற்றபவர்களில் பெரும்பான்மையானவர்கள் வரலாறு பாடப்பிரிவில் பட்டம் பெற்றவர்களாக இருப்பதை நாம் பார்க்க முடியும் ஏனென்றால் இன்றைய போட்டித் தேர்வுகளில் கேட்கப்படும் 40 சதவீதக் கேள்விகள் வரலாற்று தொடர்புடையவைதான்.

மத்திய மாநில அரசுகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் ஏதாவது ஒரு பாடப்பிரிவில் இளங்கலை பட்டப்படிப்பு தகுதியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் போது வரலாறு பயின்றவர்கள் எளிதில் பங்கேற்க முடியும் எளிதில் வெற்றி பெறவும் முடியும். இன்னும் சொல்வதென்றால் குரூப் 1 தேர்வு எழுதும் பிற பாடங்கள் படித்த மாணவர்களின் விருப்பப் பாடமாக திகழ்வது வரலாற்றுப் பாடம்தான். அது போல ஐஏஎஸ் (IAS) தேர்வுகளிலும், சிவில் சர்வீஸ் தேர்வுகளிலும் வெற்றி பெறும் மாணவர்களில் 30 சதவிகிதம் பேர் வரலாற்றுப் பாடத்தை விருப்பப் பாடமாக எடுத்துப் படித்தவர்கள்தான். முறையாகத் தெரிந்து படித்தால் வரலாறு வாழ்க்கையைத் தரும் என்பதே உண்மை.. மாணவர்கள் எந்த துறையாக இருந்தாலும் தேர்வு செய்து அதில் தனித்துவம் பெற்றவர்களாக மாற முடியும். அறிவு பெறவும் வேலை வாய்ப்பு பெறவும் எல்லாதுறையைவிடவும் வரலாற்றுப் பாடம் முத்திரை பதிப்பதற்கு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்வோம். வரலாற்றை நாம் அறிது கொள்வதன் மூலம் நாம் நம் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொள்வோம்.

ஆம் மாணவர்களே! வரலாற்றை படிப்போம்! வரலாறு படைப்போம்!

JOURNALISM | ஊடகத்துறை

இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான மாணவர்கள் தாம் கற்ற அல்லது கற்கக்கூடிய கல்வி அதிக பொருளாதாரத்தை ஈட்ட வேண்டும் என்ற நோக்கத்திலேயே கல்லூரிகளையும் பாடப்பிரிவுகளையும் தேர்வு செய்கின்றனர். அதிகமான சவால்கள் நிறைந்த ஆனால் பொருளாதாரத்தையும் புகழையும் பெற்றுத் தரக்கூடிய ஒரு சிறந்த துறையாக ஊடகத்துறை இருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று வர்ணிக்கப்படுகின்ற இந்த ஊடகத்துறை பத்திரிக்கை தொலைக்காட்சி போன்ற மற்றும் மின்னணு ஊடகத் துறையிலும் சாதிக்கப் பல வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றது.

இன்றைய காலகட்டத்தில் பத்திரிக்கை இரண்டு வகைகளாக பிரிக்கப்படுகிறது. ஒன்று அச்சு ஊடகத்துறை அதாவது தினசரி வார மாத இதழ்களை குறிப்பது இரண்டாவது மின்னணு ஊடகத்துறை. பத்திரிகை செய்தி யில் அரசியல், சர்வதேச செய்திகள், கல்வி, பிராந்திய செய்திகள், குற்றம், விளையாட்டு, சினிமா, வணிகம், சட்டம், தொழில் போன்ற பல பிரிவுகள் உள்ளன. நீங்கள் உதவி ஆசிரியர், நிருபர் ஆகியோரைப் போலல்லாமல், சிறப்பு கட்டுரை எழுதுபவராக இருக்கலாம். ஒரு சிறந்த பத்திரிக்கையாளராக இருப்பதற்கு, தேவைப்படும் மொழியில் நல்ல பேச்சு மற்றும் எழுத்து திறன் அவசியம். மேலும் சுய நெறிமுறைகளை வகுத்துக் கொண்டவராகவும், எது குறித்தும் விமர்சனம் செய்யும் அளவிற்கு மனப்பாங்கு உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

பெரும்பாலான இளைஞர்கள் பத்திரிக்கைத்துறை என்றாலே செய்தி சேகரிப்பாளர் இன்று எண்ணத்தில் உள்ளனர். பத்திரிக்கை துறைகளில் பல்வேறு உட்பிரிவுகள் உள்ளன. உதாரணத்திற்கு, புகைப்படக்கலைஞர், கார்ட்டூனிஸ்ட், பிழை திருத்துனர், வரைகலை வடிவமைப்பாளர் பக்க வடிவமைப்பாளர் என்ற பல வேலைகள் இருக்கின்றன. மின்னணு ஊடகத்துறைகளான தொலைக்காட்சி, வானொலி, இணையதளம் போன்ற ஊடகங்களை பொருத்தவரை ஆசிரியர், உதவிப்பேராசிரியர் மட்டுமல்லாது நிருபர்கள், புகைப்பட கலைஞர்கள், ஒளி-ஒலிப்பதிவாளர்கள், தொழில்நுட்ப கலைஞர்கள், செய்தி

வாசிப்பாளர்கள், இணையதள வடிவமைப்பாளர்கள் அரங்கு அமைப்பாளரான பல வேலைவாய்ப்புகள் உள்ளன,இதழியல் துறையில் திறமைக்கு ஏற்ப பணிபரியும் நிறுவனத்திற்கு ஏற்ப வருமானம் மாறுபடுகிறது.இந்தியாவின் முன்னணி செய்தி நிறுவனங்களில் பல லட்ச ரூபாய் மாத வருமானம் பெறக்கூடிய பத்திரிக்கை யாளர்கள் இருப்பதை அனைவரும் அறிந்ததே!

நாட்டில் உள்ள முன்னணி பல்கலைக்கழகங்களில் பெரும்பாலானவற்றில் இதழியல் பாடங்கள் பயிற்று விக்கப்படுகின்றன. தமிழகத்தைப் பொருத்தவரை சென்னை பல்கலைக்கழகம் , மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் , பாரதிதாசன் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பெரும்பாலான கல்வி நிறுவனங்களில் இதழியல் பட்டப் படிப்புகள் பட்டயப் படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன. இந்தியன் இன்ஸ்டியூட் ஆஃப் மாஸ் கம்யூனிகேஷன் என்று சொல்லப்படும் நிறுவனம் டெல்லியில் அமைந்துள்ளது இந்த நிறுவனத்தின் சார்பாக பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

Indian Institute Of Journalism And New Media, Bangalore	Symbiosis Institute Of Media And Communication, Pune
Madras University, Chennai	Indian Institute of Mass communication, Delhi
Madras Christian College	

List of Programs:-

UNDERGRADUATE PROGRAM	DURATION	POSTGRADUATE PROGRAM	DURATION
Diploma in Journalism	1 Year	PG Diploma in Journalism	1 Year
Diploma in Journalism and Mass Communication	2 years	PG Diploma in Radio and TV Journalism	1 Year
B.A. in Journalism	3 Years	PG Diploma in Print & Broadcast Journalism	1 Year
Bachelor of Journalism	3 Years	PG Diploma in Acting	1 Year
B.A. in Convergent Journalism	3 Years	PG Diploma in Direction and Screenplay Writing	1 Year

Bachelor in Journalism and Mass Communication	3 Years	PG Diploma in Editing, Sound Recording &Design	1 Year
B.A. in Mass Media	3 Years	M.A. in Journalism and Communication	2 Years
B.A. in Journalism and Communication Studies	3 Years	M.A. in Entertainment, Media and Advertisement	2 years
B.A. in Script Writing	3 Years	M.A. in Multimedia	2 Years
B.Sc., in Mass Communication, Journalism and Advertising	3 Years	Masters in Communication	2 Years
B.Sc., in Mass Communication and Journalism	3 Years	Masters in Journalism and Mass Communication	2 Years

TNTJ
Students Wing

Teacher Education | ஆசிரியர் கல்வி

ஆசிரியர் பணி என்பது ஒரு பரந்து விரிந்த தொழில் வாய்ப்புகள் உள்ளது. மழலையர் பள்ளி (Nursery School) ஆசிரியர்கள் முதல் பல்கலைக் கழக விரிவுரையாளர் (University) வரையுள்ள பணியை உள்ளடக்கியது.

நமது பள்ளிக் கல்வி அமைப்பில் மழலையர் பள்ளி (Nursery School), தொடக்கப் பள்ளி (Elementary School) , உயர்நிலைப் பள்ளி (High School) மேல்நிலைப்பள்ளி (Higher Secondary School) அதன் பிறகு Higher Educational ல் poly-technique , Arts and science college, Engineering colleges, Medical colleges அதன் தொடர்புடைய paramedical colleges இவைகள் அனைத்தையும் உள்ளடக்கிய universities என்ற நிலைகள் காணப்படுகின்றன.

ஆசிரியர் பணியில் சேர்வதற்கு ஒவ்வொரு நிலைகளுக்கும் ஒவ்வொரு கல்வித்த தகுதியை நிர்ணயித்திருக்கிறது.

நமது இந்த கட்டுரையில் மழலையர் பள்ளி ஆசிரியர் (Nursery School teacher) முதல் பல்கலைக்கழக பேராசிரியர்கள் (professors) வரையிலான வாய்ப்புகளை பார்க்க இருக்கிறோம்.

1. <u>மழலையர் கல்விச் சான்றிதழ் - படிப்பு</u>

Advance Diploma in Montessori Kindergarten & Nursery Teacher Training, Advance Diploma in Montessori & Child Education, Diploma in Primary Education என்ற பல பெயர்களில் சான்றிதழ் படிப்புகள் உள்ளன.

- ELIGIBILITY: 12th pass / Degree / Equivalent to it.
- DURATION: One Year
- MODULE: Regular / Online / Correspondence (சில படிப்புகள் மட்டும்)

Fees: Rs 30,000 வரை கல்விக்கட்டணம் மட்டும் செலவாகும்.

குறிப்பு : பெண்கள் மட்டுமே பயிற்சி பெற முடியும்

2. <u>ஆசிரியர் கல்விப்பட்டயச் சான்றிதழ் (D.T.Ed)</u>

- ELIGIBILITY: 12th pass / Degree / Equivalent to it.
- DURATION: Two Year
- MODULE: Regular

Fees: அரசு மற்றும் அரசு உதவி பெறும் பயிற்சிப் பள்ளியில. அரசு நிர்ணயித்த கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படும். தனியார் பயிற்சிப் பள்ளியில் வருடத்திற்கு Rs 75,000 வரை செலவாகும்.

குறிப்பு : பெண்கள் மட்டுமே பயிற்சி பெற முடியும்

TNTJ
TNTJ STUDENTS WING

தமிழ்நாட்டிலுள்ள இடைநிலை ஆசிரியருக்கான பயிற்சிப் பள்ளிகள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன .

1. தமிழ்நாட்டில் மாவட்ட ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் மாவட்டம் தோறும் அமைக்கப்பட்டுள்ளது .

திருவல்லிகேணி, சென்னை	திரூர், திருவள்ளூர் மாவட்டம்	காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்
ராணிபேட்டை, வேலூர் மாவட்டம்	கீழ்ப்பெண்ணாத்தூர், திருவண்ணாமலை மாவட்டம்.	ஜிஅரியூர்., விழுப்புரம் மாவட்டம்
வடலூர், கடலூர் மாவட்டம்.	குருகத்தி, நாகப்பட்டினம் மாவட்டம்.	மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்.
ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.	புதுக்கோட்டை,புதுக்கோட்டை மாவட்டம்	லால்குடி, திருச்சி மாவட்டம்
பெரம்பலூர், பெரம்பலூர் மாவட்டம்	மாயனூர், கரூர் மாவட்டம்.	நாமக்கல், நாமக்கல் மாவட்டம்.
உத்தமசோழபுரம், சேலம் மாவட்டம்.	கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டம்.	பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.
திருமூர்த்தி நகர், கோயம்புத்தூர் மாவட்டம்.	கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.	ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்
காளையார் கோவில், சிவகங்கை மாவட்டம்.	மஞ்சூர், ராமநாதபுரம் மாவட்டம்.	தேகல்லுப்பட்டி., மதுரை மாவட்டம்
பாலையம்பட்டி, விருதுநகர் மாவட்டம்.	உத்தமபாளையம், தேனி மாவட்டம்.	முனைஞ்சிப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.
வானரமூட்டி, தூத்துக்குடி மாவட்டம்.	தேரூர், கன்னியாகுமரி மாவட்டம்.	

2. அரசு இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்.

இராயப்பேட்டை (மகளிர்) .சென்னை	இராணிப்பேட்டை (மகளிர்) வேலூர்	சமூகரங்கபுரம், திருநெல்வேலி மாவட்டம்
ஜோகில்பட்டி, விருதுநகர் மாவட்டம்	கங்கவல்லி, சேலம் மாவட்டம்.	சின்னதாராபுரம், கரூர் மாவட்டம்.
தாயார்சாகிப்தெரு, சென்னை-2 (உருது)	தஞ்சாவூர், தஞ்சாவூர் மாவட்டம்	கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம்

TNTJ

3. அரசு அங்கீகாரம் பெற்ற அரசு உதவி பெறும் தனியார் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்.

1. அவ்வை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, சென்னை. (பெண்களுக்கானது)
2. புனித கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, வேப்பேரி, சென்னை.
3. புனித அன்னம்மாள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, மாதவரம், சென்னை(பெண்கள்)
4. ஞானோதய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, புனித தாமஸ்மலை, சென்னை. பெண்களுக்கானது
5. மேரி இமாகுலேட் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, திருப்பத்தூர். பெண்களுக்கானது
6. கன்கார்டியா ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, ஆம்பூர். ஆண்களுக்கானது.
7. யூனியன் மிஷன் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, விருதம்பட்டு. ஆண்களுக்கானது.
8. பீட்டி ஆசிரியர் பயிற்சிப்பள்ளி,ராணிப்பேட்டை. பெண்களுக்கானது
9. புனித மேரி ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, அன்மருதை, திருவண்ணாமலை. பெண்களுக்கானது
10. ஆர்.சி. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திண்டிவனம். ஆண்களுக்கானது.
11. தூய இருதய ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, கடலூர். பெண்களுக்கானது
12. சேவா மந்திர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பரங்கிப்பேட்டை. பெண்களுக்கானது
13. டி,இ.எல்.சி. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, தரங்கம்பாடி. ஆண்களுக்கானது.
14. புனித தெரஸா ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, தரங்கம்பாடி. பெண்களுக்கானது
15. புனித ஜோசப் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, மன்னார்குடி. பெண்களுக்கானது
16. பெரியார் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திருச்சி. ஆண்களுக்கானது.
17. நாகம்மை ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திருச்சி. பெண்களுக்கானது
18. ஆர்.சி. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திருச்சி. ஆண்களுக்கானது.
19. புனித ஏஞ்சலா ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பொன்மலைப்பட்டி, திருச்சி. பெண்களுக்கானது
20. டி.எம். அன்ட் ஆர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திருமங்கலம், மதுரை. பெண்களுக்கானது
21. டி.இ.எல்.சி ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, உசிலம்பட்டி.
22. புனித தெரசா ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, மதுரை.
23. சாங்ட்டா பாத்திமா ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திண்டுக்கல்.
24. வியாகுல அன்னை ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, திண்டுக்கல். (பெண்களுக்கானது
25. புனித மைக்கேல் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பழனி.
26. சி.எஸ்.ஐ. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி,வத்தலக்குண்டு.
27. ராமகிருஷ்ணா மிஷன் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி,கோவை.
28. புனித மேரி ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, கருமாதம்பட்டி, கோவை.
29. பெத்லஹம் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, உதகை.
30. புனித ஜோசப் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பகல்பட்டி, சேலம்.
31. சி.எஸ்.ஐ. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, உறஸ்தம்பட்டி, சேலம்.
32. என்.ஆர்.தாஸ் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, வடமலாபுரம், விருதுநகர்.

33. புனித ஸ்தனிஸ்லாஸ் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, சாத்தூர்.
34. கிறிஸ்து ராஜா ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பாளையங்கோட்டை.
35. பிஷப் சார்ஜென்ட் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பாளையங்கோட்டை.
36. ஊழியஸ்தானம் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பழையகோட்டை, திருநெல்வேலி.
37. சாரா டக்கர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பாளையங்கோட்டை.
38. வள்ளியம்மையார் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, குலசேகரப்பட்டினம், தூத்துக்குடி.
39. புனித ஜான் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, நாசரேத், தூத்துக்குடி.
40. புனித அன்னம்மாள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, அடைக்கலாபுரம், தூத்துக்குடி.
41. டி.வி.டி. ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, கோட்டார், கன்னியாகுமரி.
42. குழந்தை இயேசு ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, மூளகுமுடு, கன்னியாகுமரி.
43. ஆங்கிலோ இந்திய ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, சர்ச் பார்க், சென்னை. -ஆங்கில வழி கல்வி

4. சுயநிதி இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

தமிழ்நாட்டில் தனியார் அமைப்பு, சங்கம் போன்றவற்றின் நிதியில் இயங்கும் சுயநிதி இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஏராளமாக உள்ளன.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி பள்ளிகளில் உள்ள இடங்கள் கலந்தாய்வு மூலம் ஒற்றைச்சாளர முறையில் (சிங்கில் விண்டோ சிஸ்டம்) நிரப்பப்படுகிறது. தனியார் ஆசிரியர் பயிற்சி பள்ளிகளில் இடங்களைக் பயிற்சிப்பள்ளி நிர்வாகத்தினரே நிரப்பி கொள்ளலாம்.

தமிழ்நாடு அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் தனியார் பள்ளிகளில் ஆசிரியராகப் பணிபுரிய TNTET என்ற ஆசிரியர் தகுதித் தேர்வினை எழுதித் தேர்ச்சி பெற வேண்டும்.

3. இளநிலைக் கல்வியியல் (B.Ed)

- ELIGIBILITY: Any Degree UG or PG.
- DURATION: Two Year
- MODULE: Regular/ Distance Education/ Open University (சில பல்கலைக்கழகங்களில்)

Fees: அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரியில். அரசு நிர்ணயித்த கட்டணம் மட்டுமே. தனியார் கல்லூரியில் வருடத்திற்கு Rs 75,000 வரைசெலவாகும்.

B.Ed தகுதி பெற்றவர்கள் இடைநிலை பட்டதாரி ஆசிரியர்கள் 6 முதல் 8 வகுப்புவரையுள்ள வகுப்புகளுக்கு ஆசிரியராகலாம் . RTE (Right to Educational Act 2010)

விதியின் படி B.Ed தகுதி பெற்றவர்கள் கண்டிப்பாக TET (Teachers Eligibility Test) தேர்வு எழுத தேர்ச்சி பெற்றால் மட்டுமே அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியர்களாக முடியும். இளநிலை பட்டதாரி ஆசிரியர்களாக 9 மற்றும் 10ம் வகுப்பிற்கு TET (Teachers Eligibility Test) கட்டாயமில்லை.

முதுகலை பட்டப் படிப்பு தகுதியுடன் பி.எட். படித்தவர்கள் முதுநிலைப்பட்டதாரி ஆசிரியர்கள் எனப்படுவர். எல்லா முதுகலைப் படிப்பிற்கும் தனித் தனி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்கள் 11 மற்றும் 12 வகுப்புகளுக்கு ஆசிரியர்களாக பணியாற்றுவதற்கு தகுதியானவர்கள்.

9 முதல் 12 ம் வகுப்பு வரையுள்ள நிலைகளில் ஆசிரியர்களாக அரசுத்துறை பள்ளில் சேர TRB (Teachers Requirement Board) மூலமாக தேர்வு செய்யப்படுவார்கள்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில் உள்ள இடங்கள் கலந்தாய்வு மூலம் ஒற்றைச்சாளர முறையில் (சிங்கில் விண்டோ சிஸ்டம்) நிரப்பப்படுகிறது.

தனியார் கல்லூரிகளில் உள்ள பி.எட். இடங்களைக் கல்லூரி நிர்வாகத்தினரே நிரப்பி விடுவார்கள். அரசு மற்றும் அரசு கல்லூரிகளில் பி.எட். படிப்புக்கான விண்ணப்பங்கள் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் முதல் வாரத்தில் வழங்கப்படுகின்றன. ஒற்றைச்சாளர முறை மாணவர் சேர்க்கை என்பதால் ஒரேயொரு விண்ணப்பம் போட்டால் போதும். கலந்தாய்வின்போது தங்களுக்கு விருப்பமான கல்லூரியைத் தேர்வுசெய்து கொள்ளலாம்.

அரசுக் கல்லூரிகள்.

தமிழ்நாட்டில் 5 அரசு கல்வியியல் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் கோயம்புத்தூரில் மட்டும் முதுநிலைப் பட்டப்படிப்பு உள்ளன. மற்ற கல்லூரிகளில் இளநிலைப்பட்டப்படிப்பு மட்டும் உள்ளன.

1. அரசு பெண்கள் கல்வியியல் கல்லூரி, கோயம்புத்தூர். (இளநிலை-120, முதுநிலை -30)
2. அரசு கல்வியியல் கல்லூரி, குமாரபாளையம், நாமக்கல். (இளநிலை -105)
3. அரசு கல்வியியல் கல்லூரி, புதுக்கோட்டை. (இளநிலை -100)
4. அரசு கல்வியியல் கல்லூரி, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம். (இளநிலை -100)
5. அரசு கல்வியியல் கல்லூரி, வேலூர்.(இளநிலை -117)

தன்னாட்சிக் கல்லூரிகள்.

தமிழ்நாட்டில் 7 தன்னாட்சி நிலைக் கல்வியியல் கல்லூரிகள் உள்ளன. இவைகளில் இளநிலைப் பட்டப்படிப்புகள் மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்புகள் உள்ளன. இந்த 7 கல்லூரிகளிலும் முதுநிலைப் பட்டப்படிப்பிற்கு 35 இடங்கள் வீதம் உள்ளன. இளநிலைப் பட்டப் படிப்புக்கான இடங்கள் அடைப்புக்குறிக்குள் அளிக்கப்பட்டுள்ளன.

1. கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் (தன்னாட்சி), சைதாப்பேட்டை, சென்னை இளநிலைப் பட்டப்படிப்பு இடங்கள்- 230)
2. வெலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் (தன்னாட்சி), திருவல்லிக்கேணி, சென்னை. (இளநிலைப் பட்டப்படிப்பு இடங்கள்- 200)
3. மேஸ்டன் கல்வியியல் கல்லூரி (தன்னாட்சி), இராயப்பேட்டை, சென்னை.(இளநிலைப் பட்டப்படிப்பு இடங்கள்- 120)
4. என்.கே.டி.பெண்கள் கல்வியியல் கல்லூரி (தன்னாட்சி), திருவல்லிக்கேணி, சென்னை. (இளநிலைப் பட்டப்படிப்பு இடங்கள்- 250)
5. புனித கிறிஸ்டோபர் கல்வியியல் கல்லூரி (தன்னாட்சி), வேப்பேரி, சென்னை. (இளநிலைப் பட்டப்படிப்பு இடங்கள்- 160)
6. ஸ்டெல்லா மதுதினா கல்வியியல் கல்லூரி (தன்னாட்சி), அசோக் நகர், சென்னை. (இளநிலைப் பட்டப்படிப்பு இடங்கள்- 200)
7. ஸ்ரீ இராமகிருஷ்ணா மிசன் வித்யாலயா கல்வியியல் கல்லூரி (தன்னாட்சி), பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர். (இளநிலைப் பட்டப்படிப்பு இடங்கள்- 100)

சுயநிதிக் கல்லூரிகள்

தமிழ்நாட்டில் கல்வியியல் கல்வி அளிக்கும் 649 சுயநிதிக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

4. பேரசிரியர் பணி (MPhil) மற்றும் ஆராய்ச்சித்துறை (Phd) வாய்ப்புகள்

- ELIGIBILITY: Any Master Degree 60% Marks
- DURATION: Two Year
- MODULE: Regular/ Distance Education (சில பல்கலைக் கழகங்களில் மட்டும்)

Fees: கல்லூரி மற்றும் பல்கலை கழகங்களை பொருத்து வருடத்திற்கு Rs 10,000 முதல் 2,00,000 வரை செலவாகும். எம்.பில். படிக்க சேர்ந்தால் சில பல்கலைக் கழகங்களில் மாதந்தோறும் ரூ. 3 ஆயிரம் உதவித்தொகை கிடைக்கும். உதாரணமாக புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் வழங்கப்படுகிறது).

TNTJ STUDENTS WING

Popular M.Phil. Programmes

M.Phil., History	M.Phil., Economics	M.Phil., Linguistics
M.Phil., English	M.Phil., in Geography	M.Phil., in Sociology
M.Phil., in Political Science	M.Phil., Hindi	M.Phil., Public Administration
M.Phil., in Humanities & Social Science	M.Phil., in Human Development Studies	M.Phil., Social Work
Popular M.Phil., Courses in Science		
M.Phil., in Biology	M.Phil., in Chemistry	M.Phil., Physics
M.Phil., in Life Sciences	M.Phil., Biotechnology	M.Phil., Botany
M.Phil., in Computer Science	M.Phil., in Zoology	M.Phil., in Clinical Psychology
M.Phil., in Mathematical Sciences	M.Phil., Degree in Aquatic Biology and Fisheries	
Other Popular M.Phil., Courses		
M.Phil., Commerce	M.Phil., in Law	M.Phil., in Education, M.Phil., (Physical Education)

M.Phil, தொலைதூரக்கல்வி (Distance Education) வழங்கும் பிரபலமான பல்கலைக் கழகங்கள்.

- IGNOU: Indira Gandhi National Open University (IGNOU) :- M.Phil., in Chemistry, Commerce, Economics, Geography, Political Science, etc.
- Annamalai University: M.Phil. English, History, Population studies, Microbiology, Zoology etc.
- Alagappa University: M.Phil, Management, Education, etc. Admissions usually take place in an online mode.
- MDU: Maharishi Dayanand University Rohtak, Haryana: M.Phil, course is also through distance education as well.

- Dr. BR Ambedkar Open University: M.Phil, courses in English, History, and Population studies, Microbiology, Zoology etc.
- Karnataka Open State University: M.Phil, courses in English, History, and Population studies, Microbiology, Zoology etc.

எம்.பில் முடித்தவர்கள் ஆராய்ச்சி துறையிலோ , தனியார் மேல்நிலைப் பள்ளியிலோ அல்லது தனியார் கலைக் கல்லூரிகளில் உதவி பேராசிரியராக பணியாற்றலாம். எம். எ. எம்.பில் முடித்த முதுகலை பட்டதாரிகள் மத்திய அரசு நடத்தும் (NET Exam For Lectureship JRF) தேர்விலும், தமிழக அளவில் நடத்தப்படும் (SLET) தேர்லும் தேர்ச்சி பெற்றால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலைக் கல்லூரிகளில் உதவி பேராசிரியராக பணியாற்றலாம்.

ஆய்வாளர் (பி.ஹெச்.டி)

ELIGIBILITY: Any Master Degree 60% Marks ,M. phil கூடுதல் தகுதியாக இருக்கும்.

கீழ்காணும் ஏதேனும் தகுதித் தேர்வில் தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்.

- National Eligibility Test,
- DBT
- JRF Entrance Exam,
- TIFR Graduate School Admission Test

DURATION: Two Year to Six years (ஆறு வருடங்களுக்குள் முடிக்க வேண்டும்)

MODULE: Regular / Distance Education (சில பல்கலைக் கழகங்களில் மட்டும்)

Fees: கல்லூரி மற்றும் பல்கலை கழகங்களை பொருத்து வருடத்திற்கு 4,00,000 வரை செலவாகும். Ph.D., படிக்க சேர்ந்தால் சில பல்கலைக் கழகங்களில் மாதந்தோறும் ரூ. 15 ஆயிரம் வரை உதவித்தொகை கிடைக்கும். புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களில் நடைபெறும் இளநிலை ஆய்வாளர் (பி.ஹெச்.டி) தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்குப் பல்கலைக்கழக நிதியுதவிக் குழு மூலம் 5 ஆண்டுகளுக்கு மாதம் மாதம் உதவித் தொகை கிடைக்கும். அத்துடன் ஆண்டுக்கு புத்தகங்கள் வாங்க கணிசமான உதவித்தொகை கிடைக்கும்.

TNTJ STUDENTS WING

Ph.D. in Philosophy: Few colleges in Tamilnadu

1. Ramakrishna Mission Vivekananda College (RMVC) , Chennai
2. Guru Nanak College (GNC) , Chennai
3. Khadir Mohideen College (KMC) , Thanjavur
4. The New College (TNC) , Chennai
5. Mohamed Sathak College Of Arts And Science (MSCAS) , Chennai
6. Institute For Financial Management And Research (IFMR) , Chennai
7. Er. Perumal Manimekalai College Of Engineering (EPMCE) , Dharmapuri
8. Periyar Maniammai University (PMU) , Thanjavur
9. SASTRA University , Thanjavur
10. PSG Institute Of Management (PSGIM) , Coimbatore
11. The Erode College Of Pharmacy & Research Institute (TECPRI) , Erode
12. Melmaruvathur Adhiparasakthi Institute Of Medical Sciences & Research, Kanchipuram
13. Sri Krishna Arts And Science College (SKASC) , Coimbatore
14. CMS College Of Science And Commerce (CMSCSC) , Coimbatore
15. Hindusthan College Of Arts & Science (HCAS) , Coimbatore
16. Academy Of Maritime Education And Training University (AMET) , Kanchipuram
17. Ponnaiyah Ramajayam Institute Of Science And Technology (PRIST) , Thanjavur
18. Dr. N.G.P Institute Of Technology (NGPIT) , Coimbatore
19. Dr. M.G.R. Educational And Research Institute (DRMGRERI) , Chennai
20. KSR Educational Institutions (KSREI) , Namakkal
21. Hindusthan Group Of Institutions (HGI) , Coimbatore
22. Park Group Of Institutions (PGI Coimbatore) , Coimbatore
23. St. Peter's Institute Of Higher Education And Research (SPIHER) , Chennai
24. Jansons School Of Business (JSB) , Coimbatore
25. Saveetha Engineering College (SEC) , Chennai

TNTJ Students Wing

TNTJ STUDENTS WING

Ph.D. in Philosophy: Top universities

Name of the Institutes	City	Total Fees
Madras University	Chennai	INR 1.20 Lacs per annum
Madurai Kamaraj Universities	Madurai	INR 1.20 Lacs per annum
Annamali university	Chithambaram	INR 1.50 Lacs per annum
Shri Jagdish Prasad Jhabarmal University	Rajasthan	INR 1.29 Lacs per annum
Lovely Professional University	Delhi	INR 3.16 Lacs per annum
Amity University	Noida	INR 1.50 per annum
Lovely Professional University	Jalandhar	INR 3.16 Lacs per annum
Chandigarh University	Chandigarh	INR 2.40 Lacs per annum
Christ University	Bangalore	INR 1.5 Lacs per annum
SGT University	Gurgaon	INR 4.50 Lacs per annum
Veermata Jijabai University	Mumbai	INR 1.30 Lacs per annum
Jamia Millia Islamia	Delhi	INR 31,810 Lacs per annum
Indian Institute of Science	Bangalore	INR 50,400 Lacs per annum
Indian Institute of Foreign Trade	Delhi	INR 2.5 Lacs per annum
Sanskrit University	Mathura	INR 1.95 Lacs per annum

இப்படிப்பை முடித்தால் ஆராய்ச்சி பணியியில் அரசு வேலைகிடைக்கும்.. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பேராசியர்களாக பணியாற்ற முடியும். தனியார் துறை வாய்ப்புகளும் ஏராளமாக உள்ளன..

.

TNTJ STUDENTS WING

PILOT | பைலட்

பள்ளியில் பயிலக் கூடிய அனைத்து மாணவர்களும் பல்வேறு கற்பனைகளோடும் குறிக்கோளோடும் தமது எதிர்காலத்தில் அடுத்து என்ன பயில்வது நாம் என்ன ஆகப் போகிறோம் என்பது குறித்து பல்வேறு எண்ண ஓட்டத்தை கொண்டவர்களாக இருப்பதை நாம் காண முடிகிறது. மாணவர்கள் மட்டுமல்லாமல் பெற்றோர்களும் தங்களுடைய குழந்தைகள் நல்ல ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையோடு அவர்களும் சீரிய சிந்தனையோடும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.



மாணவர்கள் தாம் தேர்ந்தெடுப்பதற்கு பல்வேறு துறைகள் இருந்தாலும் சில மாணவர்கள் விமானியாக வேண்டும் என்ற கனவோடு இருப்பதை நாம் கண்கூடாக காண முடிகிறது. விமானி என்பவன் தட்ப வெட்ப சூழ்நிலைகள், எந்த வழியில், எந்த உயரத்தில் பறக்க வேண்டும், விமானத்தின் டேக் ஆஃப் மற்றும் லேண்டிங் என பல்வேறு சவாலான பணிகளை மேற்கொள்ளக் கூடியவர். இந்தப் பணிக்கு பொறுப்புணர்வும் நன்னடத்தை, காலம் தவறாமை, நல்ல உடற் தகுதி அற்பணிப்பு என்பது போன்ற முக்கிய அம்சங்களோடு அவசர சூழலில் யோசித்து முடிவெடுக்கும் திறன் மிக மிக முக்கியமானதாக அமைந்துள்ளது.

நிலைகள்

பைலட் லைசன்ஸ் என்பது பொதுவாக

- ஸ்டூடண்ட் பைலட் லைசென்ஸ்
- பிரைவேட் பைலட் லைசென்ஸ்
- கமர்ஷியல் பிரைவேட் லைசன்ஸ்
- கார்கோ பிரைவேட் லைசன்ஸ்
- ஹெலிகாப்டர் பைலட் லைசென்ஸ்..... வகைகளாக பிரிக்கப்படுகிறது.

தகுதிகள்

ஒருவர் பைலட்டாக விண்ணப்பிப்பதற்கு கீழ்காணும் தகுதிகள் இருத்தல் அவசியம்.

- பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்
- இயற்பியல் வேதியியல் கணிதம் பாடங்களை 12ம் வகுப்பில் படித்திருக்க வேண்டும்.
- குறைந்தது 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்
- டிஜிசிஏ (DGCA) மூலமாக மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல்
- 17 வயது நிரம்பியிருக்க வேண்டும்

இதுமட்டுமல்லாது உயரம், தெளிவான கண் பார்வை மற்றும் ஆங்கில மொழித் திறன் போன்ற சில அடிப்படை தகுதிகள் வேண்டும். அறிவியல் மற்றும் கணிதம் பாடப்பிரிவை படிக்காதவர்கள், NIOS மூலமாக தேர்ச்சி பெறலாம். M.Sc., Aviation தேர்ச்சி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

காலஅளவு

நீங்கள் தேர்ந்தெடுக்கும் பாடப்பிரிவை பொறுத்து கால அளவு ஒரு வருடம் முதல் மூன்று வருடங்கள் வரை இருக்கும்.இந்த கால அளவு நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபட்டு இருப்பதை நம்மால் காண முடிகிறது.

படிப்பிற்கான கட்டணம்

தேர்ந்தெடுக்கும் பாடப்பிரிவை பொறுத்து கல்விக் கட்டணமும் மாறுபடும். பொதுவாக சுமார் 10 லட்சம் முதல் 40 லட்சம் வரை செலவாகும் என நம்மால் காண முடிகிறது. இந்த வேறுபாட்டிற்கு காரணம் ஒவ்வொரு லைசென்ஸிருக்கும் ஏற்றார் போல் விமானத்தில் பயிற்றுவிக்கும் காலமும் தனியாக பறக்கும் காலமும் வேறுபடும். பிரைவேட் பைலட் லைசென்ஸ் படிப்பிற்கு குறைந்தது 60 மணி நேரம் விமானம் ஓட்ட பயிற்சி பெற்றிருக்க வேண்டும். அதிலும் தோராயமாக 20 மணி நேரம் தனியாக விமானத்தை ஓட்டி இருத்தல் வேண்டும். ஆனால் கமர்சியல் பைலட் லைசென்ஸிருக்கு சுமார் 250 மணி நேரம் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். அதிலும் சில குறிப்பிட்ட மணி நேரங்கள் தனியாக விமானத்தை ஓட்டுதல் மற்றும் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பயணித்தல் போன்ற சில கூடுதல் விதிமுறைகளும் உண்டு.

சான்றிதழ்

பயிற்சி காலம் முடியும்போது சில தேர்வுகள் மூலம் மாணவர் கண்காணிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுவர். உதாரணமாக.,

- மருத்துவச் சான்றிதழ் (from aviation medical examiner)
- Oral and Flight test by FAA inspector.
- Computerised aeronautical knowledge test.

தேர்ச்சி பெற்ற பிறகு, விமானத்தில் கேப்டனாக பணிபுரிவதற்கு ஏர்லைன் டிரான்ஸ்போர்ட் பைலட் லைசென்ஸ் சான்றிதழுக்கு அப்ளை செய்யவேண்டும்.

சாதக பாதகங்கள்

அனைத்து படிப்புகளைப் போல இந்த துறையிலும் சில சாதகங்களும் சில பாதகங்களும் உண்டு.

:- பல்வேறு நாடுகளுக்கு பயணம் செய்யும் அரிய வாய்ப்பு.
:- ஒரு வணிக விமானி சுமார் 1 - 3 லட்சம் ரூபாய் சம்பளமாக பெறுகிறார்.
ஆனால் பல நாட்கள் குடும்பத்துடன் தங்க இயலாத சூழல், உணவு பழக்கவழக்கம், உறக்கம் என மாறுபட்ட சூழலுக்கு ஏற்றாற்போல வாழ வேண்டியது இருக்கும்.

கூடுதல்விவரங்கள்

பனிரெண்டாம் வகுப்பில் இயற்பியல் கணிதம் போன்ற பாடங்களை படித்த துறை சார்ந்த பட்டப் படிப்பை முடித்தவர்கள் NDA (national defence academy) நடத்தும் தேர்வின் மூலமாகவும் யுபிஎஸ்சி நடத்தும் தேர்வின் மூலம் ஆகும் விண்ணப்பித்து இந்திய விமானப்படையில் பணியாற்றுகின்ற வாய்ப்பையும் பெறலாம்.

எங்கு படிக்கலாம்

சென்னை மட்டுமல்லாது இந்தியாவின் பல்வேறு நகரங்களில் பிளையிங் ஸ்கூல் என்று அழைக்கப்படும் பல்வேறு அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளன. அரசாங்கத்தின் சார்பாக நடத்தப்படும் நிறுவனங்களில் சேர்ந்து பயில்வது சிறந்தது.

Few Flying schools

Madras Flying Club, Chennai, Tamil Nadu.	Air Carnival Aviation Academy , Coimbatore.
Kerala Aviation Training Centre, Thiruvananthapuram, Kerala	Banasthali Vidyapith Gliding and Flying Club, Coimbatore, Tamil Nadu
Indira Gandhi Rashtriya Udan Akademi, Rae Bareilly, Uttar Pradesh	Andhra Pradesh Aviation Academy, Hyderabad, Andhra Pradesh
Bombay Flying Club, Mumbai, Maharashtra	Government Flying Training Institute, Kolkata, West Bengal
Government. Flying Training School, Bangalore, Karnataka	Delhi Flying Club, New Delhi.
Academy of Carver Aviation, Belgaum, Karnataka.	Flytech Aviation Academy, Hyderabad,
HAL Rotary Wing Academy, Bangalore, Karnataka	

TNTJ STUDENTS WING
TNTJ Students Wing

ARTS AND SCIENCE | கலை மற்றும் அறிவியல்

மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையையும் மேற்படிப்பைத் தீர்மானிப்பதில் பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஆகையால் பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண்கள் குறித்து ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களும் அதிக அக்கறை செலுத்துகின்றனர். இன்ஜினியரிங் படிப்பின் மீது சில ஆண்டுகளாக முகம் குறைந்ததன் காரணத்தினால், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மீது வெகுஜனங்களின் பார்வை திரும்பியிருக்கிறது. ஆகையால் கலை அறிவியல் கல்லூரிகளில் இடம் கிடைப்பதுதான் குதிரைக் கொம்பாகி விடுமோ என்று எண்ணவும் தோன்றுகிறது.

தமிழ்நாட்டில் சுமார் 600க்கும் மேற்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. இதில் அரசு கல்லூரிகள் அரசு உதவி பெறும் கல்லூரிகள் சுயநிதி கல்லூரிகள் என அனைத்து கல்லூரிகளும் அடங்கும். சென்னை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மட்டுமே சுமார் 100க்கும் மேற்பட்ட கலை அறிவியல் கல்லூரிகள் உள்ளன.இந்த அனைத்து கல்லூரிகளும் சில பல்கலைக்கழகங்களுக்கு கீழ் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் இருக்கக்கூடிய மாநில அளவிலான பல்கலைக்கழகங்களில் பின்வருமாறு.

சென்னை பல்கலைக்கழகம்	அண்ணா பல்கலைக்கழகம்
பாரதியார் பல்கலைக்கழகம்	பாரதிதாசன் பல்கலைக்கழகம்
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்.	மனோன்மணியம்சுந்தரனார் பல்கலைக்கழகம்
அண்ணாமலை பல்கலைக்கழகம்	அழகப்பா பல்கலைக்கழகம்
அன்னை தெரேசா பல்கலைக்கழகம்	திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
மீன்வள பல்கலைக்கழகம்	தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்	

TNTJ STUDENTS WING

இவை மட்டுமல்லாது மத்திய அரசின் நேரடி கண்காணிப்பின் கீழ் இருக்கக்கூடிய சில பல்கலைக்கழகங்கள் தமிழகத்தில் உள்ளன.

இந்தியன் இன்ஸ்டியூட் ஆஃப் டெக்னாலஜி, சென்னை, (IIT CHENNAI)	நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி, திருச்சி
பாண்டிச்சேரி பல்கலைக்கழகம்	மத்திய பல்கலைக்கழகம், திருவாரூர்
காந்திகிராம் பல்கலைக்கழகம். திண்டுக்கல்	இந்திய கடல்சார் பல்கலைக்கழகம், சென்னை
தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்	



மேலே குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்களில் பொதுவாக முதுநிலை பட்டப்படிப்பு (post graduation), முதுநிலை பட்டயப் படிப்பு (PG diploma), சான்றிதழ் படிப்புகள், ஒருங்கிணைந்த பட்டப்படிப்பு (Integrated Course) மற்றும் தொலைதூர பட்டப்படிப்புகள் (Distance Education) பயிற்றுவிக்கப் படுகின்றன. இதில் இளநிலை பட்டப்படிப்பு படிப்பதற்கு கலை அறிவியல் கல்லூரிகளில் மட்டுமே படிக்க இயலும். சில பல்கலைக்கழகங்களில் ஒருங்கிணைந்த பட்டப்படிப்பு படிப்பதற்கான வாய்ப்புகளும் அளிக்கப்படுகின்றன.

TNTJ STUDENTS WING

இளநிலைப் பட்டப் படிப்பு படிப்பதற்கு எந்தவித நுழைவுத்தேர்வு கிடையாது. ஆனால் ஒருங்கிணைந்த பட்டப் படிப்பு படிப்பதற்கு பொதுவாக நுழைவுத்தேர்வுகள் மூலமாகவே மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இன்ஜினியரிங் பட்டப் படிப்புகளுக்கு இணையாக கலை அறிவியல் பட்டப் படிப்பு களிலும் கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த படிப்புகளும் வேலை வாய்ப்புகளும் பெருகி உள்ளதை காணமுடிகிறது. முன்பு பி.காம் என்று ஒரே ஒரு படிப்பு இருந்தது. ஆனால் இன்று, பி.காம் ஜெனரல், பி.காம் கார்ப்பரேட் செகரட்டரிஷிப், பி.காம் கம்ப்யூட்டர் சயின்ஸ், பி.காம் இகாமர்ஸ், பி.காம் கூட்டுறவு என பாடப்பிரிவுகள் பாடப்பிரிவுகளில் பட்டியல் நீள்கின்றது.

அறிவியல் பட்டப்படிப்புகள் (Bachelor of science - B.Sc.,)

B.Sc., Physics	B.Sc., Mathematics	B.Sc., Chemistry
B.Sc., Computer science	B.Sc., Psychology	B.Sc., Botany
B.Sc., Zoology	B.Sc., Microbiology	B.Sc., Biotechnology
B.Sc., Agriculture	B.Sc., Library science	B.Sc., Biochemistry
B.Sc., Actuarial Science	BCA (Bachelor of Computer Application)	B.Sc.,Statistics
B.Sc., Oceanography	B.Sc., Material Science	B.Sc., Bio-Polymer Science
B.Sc., Polymer Science	B.Sc., Clinical Research	B.Sc., Library Science
B.Sc., Counselling Psychology	B.Sc., Epidemiology	B.Sc., Environmental Science & Technology
B.Sc., Health Informatics	B.Sc., Quality Management Science	B.Sc., Commercial Shipping & Logistics
B.Sc., Food Nutrition & Dietics	B.Sc., Bio Medical Genetics	B.Sc., Neuro Science
B.Sc., Applied Geography	B.Sc., Anatomy	B.Sc., Geo-Informatics
B.Sc., Molecular Biology	B.Sc., Bio technology	B.Sc., Photonics/ Bio-Photonics
B.Sc., Nutrition	B.Sc., Journalism and Mass communication	B.Sc., Electronic communication
B.Sc., Cyber Forensics & Information Security	B.Sc., Physiology	B.Sc., Toxicology
B.Sc., Environmental Science	B.Sc., Applied Physics	B.Sc., Electronics
B.Sc., Industrial Electronics	B.Sc., Visual Communication	B.Sc., Library Information and Documentation Science

B.Sc., Health Care and Hospital Management.	B.Sc., Food Processing	B.Sc., Forestry
B.Sc., Horticulture	B.Sc., Catering Technology and Hospital Management	B.Sc., Nutrition and Dietetics
B.Sc., Bio Informatics	B.Sc., Rural Development Science	B.Sc., Electronic Science
B.Sc., Nutrition	B.Sc., Home Science	B.Sc., Information Technology
B.Sc., Applied Computer Science Technology	B.Sc., Geology	B.Sc., Environmental Zoology

அதேபோல கலை படிப்புகளிலும் கீழ்காணும் பட்டப் படிப்புகள் பல்வேறு பல்கலைக் கழகத்தின் சார்பாக வழங்கப்பட்டு வருகின்றன.

வணிகவியல் பட்டப்படிப்புகள்

B.Com., General	B.Com., Corporate Secretaryship	B.Com., computer science
B.Com., e-commerce	B.Com., Cooperation	BBA (Bachelor of Business Administration)
BBM (Bachelor of Business Management)		

கலை பட்டப்படிப்புகள் (Arts Degree)

B.A., Tamil	B.A., English	B.A., History
B.A., Sociology	B.A., Psychology	B.A., Journalism
B.A., Police Administration	B.A., Philosophy	B.A., Geography
B.A., Human Rights	B.A., Theology	B.A., Archaeology
B.A., Anthropology	B.A., Political Science	B.A., Museology
B.A., Social Work	B.A., Linguistics	B.A., Corporate Secretaryship
B.A., Hindi	B.A., Arabic	B.A., Telugu
B.A., Sanskrit	B.A., Urdu	B.A., French
B.A., Malayalam	B.A., Social Science	B.A., Defence Studies
B.LM. Bachelor of Labour Management	B.A., Economics	

கால அளவு:-

- இளநிலை பட்டப்படிப்பு - Under Graduation – B.Sc., B.A., B.Com., BCA., Etc.,- 3 Years
- முதுநிலை பட்டப்படிப்பு - Post Graduation – M.Sc., M.A., M.Com., MCA, etc – 2 Years

இளநிலை பட்டப் படிப்பை முடித்தவர்கள் தங்களது மேற்படிப்பிற்காக முதுநிலைப் பட்டப்படிப்பு அல்லது ஒருங்கிணைந்த முதுநிலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்பை படிப்பதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. முதுநிலை கல்வியை படிப்பதற்கு பல்கலைக்கழகங்களில் நேரடியாக படிப்பது மாணவர்களுக்கு அதிகமான கல்வியும் வேலை வாய்ப்பையும் பெற்றுத் தரும். அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம் போன்ற தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் முதுநிலை கல்வி பயில்வதற்கு நுழைவுத்தேர்வு கட்டாயம். முதுநிலை பட்டப்படிப்பை அண்ணா பல்கலைக்கழகம் சென்னை பல்கலைக்கழகம் மத்திய பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்களில் பயில்வதால் கேம்பஸ் இன்டர்வியூ மூலமாக வேலைவாய்ப்பு எளிதாக பெற்றுக் கொள்ள இயலும்.

TAMILNADU VETERINARY AND ANIMAL SCIENCE UNIVERSITY [TANUVAS] | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்



சென்னை மாதவரத்தில் உள்ள "தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்" (Tamilnadu Veterinary and Animal Science University) பலவிதமான கால்நடை மருத்துவம் சம்பந்தப்பட்ட பட்ட படிப்புகளும், பட்ட மேற்படிப்புகளும் நடத்தப்படுகிறது.

பாடப்பிரிவுகள்

துறைவாரியான சேர்க்கைக்கான இடங்கள்:

1. BVSc & AH 5½ Years (4½ Years +1 Year Internship) – 360 Seats
2. B. Tech (Food Technology) 4 years - 40 Seats
3. B. Tech (Poultry Technology) 4 years - 40 Seats
4. B. Tech (DairyTechnology) 4 years - 20 – Seats

கல்வித் தகுதிகள்

1. Bachelor of Veterinary Science and Animal Husbandry

இந்தப் படிப்பு 5 வருடப் படிப்பாகும். பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் உயிர் அறிவியல் (Biology) அல்லது தாவரவியல் மற்றும் உயிரியல் பாடத்தை விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுத்து இயற்பியல் மற்றும் வேதியியல் பாடங்களைத் தேர்ந்தெடுத்து படித்தவர்கள் இந்தப் படிப்பில் சேர்ந்து படிக்கலாம். அது மட்டுமல்லாது வொகேஷனல் பாடப்பிரிவை தெர்ந்தெடுத்தவர்களுக்கும் சில இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன

2. B.Tech. Food Process Technology/ Poultry Production Technology / Dairy Technology

இந்தப் படிப்பு நான்கு வருடப் படிப்பாகும். உணவைப் பதப்படுத்துதல் பற்றிய பிளஸ் 2 தேர்வில் கணிதம், இயற்பியல், வேதியியல் ஆகிய பாடங்களைத் தேர்ந்தெடுத்துப் படித்தவர்கள் இந்தப் படிப்பில் சேர்ந்து படிக்கலாம். அது மட்டுமல்லாது வொகேஷனல் பாடப்பிரிவை தெர்ந்தெடுத்தவர்களுக்கும் சில இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன

பட்ட மேற்படிப்புகள்

இளநிலைப் பட்டப் படிப்புகளைப் போலவே MVSc., MFSc.,, போன்ற பட்ட மேற்படிப்புகளும் இந்தப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படுகிறது. இவை 2 ஆண்டு படிப்பாகும். மேலும், கால்நடை அறிவியல் மற்றும் மீன்வள அறிவியல் துறைகளில் பி.எச்டி என்னும் ஆராய்ச்சி படிப்புகளும் இங்கு நடத்தப்படுகிறது. M.Tech BioTechnology. படிப்பும் இந்தப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படுகிறது. பயோ இன்பர்மேட்டிக்ஸ் (Bio Informatics), வொய்ல்டு அனிமல் டிசிஸ் மேனேஜ்மெண்ட் (Wild Animal Disease Management), வெட்னரி லேபரெட்டரி டயாக்னாசிஸ் (Veterinary Laboratory Diagnosis), பிசினஸ் மேனேஜ்மெண்ட் (Business Management) ஆகிய பாடங்களிலும் முதுநிலைப் பட்டயப் படிப்புகளும் நடத்தப்படுகிறது. தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தோடு இணைந்து சில கல்வி நிறுவனங்களும் இப்படிப்புகளை நடத்துகின்றன.

கல்லூரிகள்

கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடை பராமரிப்பு, உணவுத் தொழில்நுட்ப பட்டப் படிப்பு, கோழியின தொழில்நுட்ப பட்டப்படிப்பு, பால்வள தொழில்நுட்ப பட்டப்படிப்புக்கென மொத்தம் 360 இடங்கள் உள்ளன. மேற்கண்ட படிப்புகளில் சேர மே – ஜூன் இறுதி தேதி வரை இணையதளத்தில் விண்ணப்பித்து, கட்டணம் செலுத்தலாம்.

விண்ணப்பம் சமர்ப்பித்து கட்டணம் செலுத்திய பின், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தகுந்த சான்றிதழ் நகல்களை சேர்க்கைக்குழு தலைவரின் அஞ்சல் அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய அஞ்சல் முகவரி:

"The Chairman, Admission Committee (UG),
Tamil Nadu Veterinary and Animal Sciences University,
Madhavaram Milk Colony, Chennai-600 051"

சென்னை கால்நடைக் கல்லூரி, சென்னை -600 007	கால்நடை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் - 637 001
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி	கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு
உணவு மற்றும் பால் தொழில் நுட்ப நிறுவனம், கொடுவாலி, சென்னை -600 052	கோழி உற்பத்தி மற்றும் மேலாண்மை கல்லூரி, ஓசூர் - 635 110
விலங்கு அறிவியலுக்கான முதுநிலை ஆராய்ச்சி நிறுவனம், காட்டுப்பக்கம்	

மேலும் முழுமையான விவரங்களை

http://www.tanuvas.ac.in/ugadmission/prospectus2019.pdf என்ற லிங்கில் சென்று படித்து பார்த்து தெரிந்துகொள்ளவும். இணையதள முகவரி : www.tanuvas.ac.in

TNTJ
Students Wing

TAMILNADU PHYSICAL EDUCATION AND SPORTS UNIVERSITY | தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு அரசால் 2005 ஆண்டு உடல்கல்வியியல் மற்றும் விளையாட்டுத் துறைகளுக்கென சென்னையில் அமைக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம். இந்தியாவிலேயே இதுவே விளையாட்டுக் கல்விக்காக அமைக்கப்பட்ட முதல் பல்கலைக் கழகம் ஆகும். மேல்கோட்டை யூரில் அமைந்துள்ளது.

படிக்காமல் விளையாடிக்கொண்டு இருக்கும் குழந்தைகளைப் பார்த்து "விளையாடாதே" என பெற்றோர்கள் சொல்வார்கள். ஆனால் விளையாடிக் கொண்டே படிப்பதற்கு இந்த பல்கலைக் கழகத்தில் பல்வேறு வசதிகள் உள்ளது. பட்டப்படிப்புகளும், பட்ட மேற்படிப்புகளும், ஆராய்ச்சிப் படிப்புகளும் என பல படிப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. சில முக்கிய படிப்புகள் பின்வருமாறு

Bachelor& Master of Physical Education	B.Sc., Exercise Physiology	M.Sc., sports Psychology and Sociology
MSc., in Sports Coaching	M.Sc., Exercise Physiology and Nutrition	M.Tech., in Sports Technology
Ph.D Sports Coaching, Sports Mgmt, Sports Psychology & Sociology	Ph.D in Exercise Physiology &Nutrition & Physical Education	

காலஅளவு:-

- Bachelor of Physical Education - 1 Year
- Master in Physical Education - 2 Years
- B.Sc., - 3 Years
- M.Sc., - 2 Years

"Department of Yoga" என்ற துறையில் M.Sc., M.Phil, Ph.D., ஆகிய படிப்புகள் நடத்தப்படுகின்றன. "Department of Sports Managemnet" என்னும்துறையில் MBA Sports Management என்ற 2 ஆண்டுப் படிப்பு நடத்தப்படுகிறது. மேலும், M.Phil., Ph.D., எனும் படிப்புகளும் நடத்தப்படுகிறது. "Department of Sports Technology" என்னும் துறைமூலம் M.Tech. இரண்டு ஆண்டு படிப்பு நடத்தப்படுகிறது. "Department of Exercise Physiology and Nutrition" என்னும் துறையில் மூன்று ஆண்டு B.Sc., பட்டப்படிப்பு நடத்தப்படுகிறது. M.Sc., M.Phil., Ph.D., படிப்புகளும் இந்தத்துறையில் நடத்தப்படுகிறது. "Department of Sport Psychology and Sociology" என்னும் துறையில் M.Sc., பட்டப் படிப்பு நடத்தப்படுகிறது. இந்தத்துறை மூலம் M.Phil., Ph.D., ஆகிய பட்டப்படிப்புகளும் நடத்தப்படுகிறது.

இந்த உடற்கல்வியியல் பல்கலைக்கழகத்தின் மற்றொரு துறையான "Department of Coaching" என்னும் துறை சில டிப்ளமோ படிப்புகளையும் நடத்துகிறது. கால்பந்து, இறகு பந்து, ஹாக்கி ஆகிய பாடங்களில் டிப்ளமோ படிப்புகள் நடத்தப்படுகின்றது. பல்கலைக்கழக அளவில் அல்லது மாநில அளவில் விளையாட்டில் சிறப்புப் பெற்று பட்டம் பெற்றவர்கள் இந்தப் படிப்பில் சேர்ந்து படிக்கலாம்.

"Department of Sports Biomechanics and Kinesiology" என்னும் துறை இரண்டாண்டு எம்.எஸ்.சி. படிப்பை நடத்துகிறது. பட்டதாரிகள் இந்தப் படிப்பில் சேர்ந்து படிக்கலாம். தமிழ கத்தில்விளையாட்டுதுறை படிப்புகளை சிறப்பாக படிப்பதற்கு வசதியாக பல்வேறு கல்லூரிகள் உடற்கல்வியியல் படிப்பில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகளை நடத்தி வருகிறது.

தொலைதூர கல்வித்திட்டம் (Distance Education Programme)

தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் தொலைதூரக்கல்வி மூலம் பல படிப்புகளை நடத்துகிறது. அந்த படிப்புகளையும் மாணவர்கள் தேர்தெடுத்தது படிக்கலாம்

- M.B.A (Sports Management/ Sports Information System)
- M.Sc., (Yoga, Psychology, Sports Journalism)
- PG Diploma (Fitness and Wellness Management, Obesity and Weight Management, Fitness and Nutrition, Sports Journalism, Sports Marketing, Sports Management, Yoga, Counselling, etc)

6 மாதச் சான்றிதழ் படிப்புகளும், ஒரு வருட டிப்ளமோ படிப்புகளும் இந்தப் பல்கலைக் கழகத்தின் தொலைதூரக் கல்வி மூலம் நடத்தப்பட்டு வருகிறது குறிப்பிடத்தக்கதாகும்.

MASTER IN BUSINESS ADMINISTRATION [MBA] | மேலாண்மை படிப்புகள்

இன்றைய கால சூழ்நிலையில் பல்வேறு படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வந்தாலும் எம்பிஏ என்ற சொல்லப்படும் படிப்பு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த படிக்கவே இன்றும் கருதப்பட்டு வருகிறது. பிற படிப்புகளை போல அல்லாமல் ஒரு குறிப்பிட்ட துறையை பற்றி மட்டும் பயிற்றுவிக்கப்படுவது போலல்லாமல் விசாலமான அறிவை பெற்றுக் கொள்வதற்கு ஏற்றார்போல இந்த துறை அமைந்து இருக்கின்றது.

மேலாண்மை உயர்கல்விக்கான எம்பிஏ என்பது இன்று பல இளைஞர்கள் மத்தியில் எப்போதும் தனி கவனத்தைப் பெற்றிருக்கிறது. MBA வில் உள்ள சில முக்கிய பிரிவுகள் கீழ்வருமாறு:

1. MBA (Finance)
2. MBA (Marketing)
3. MBA (Human Resources)
4. MBA (Logistics)
5. MBA (Tourism Management)

எம்.பி.ஏ. படிப்புகளில் விருப்பத் தேர்வாக மார்க்கெட்டிங், மனிதவள மேம்பாடு, இண்டர்நேஷனல் பிசினஸ், ஆபரேஷன்ஸ் மேனேஜ்மென்ட் எனப் பல பிரிவுகள் முன்னணியில் இருந்தாலும், ஏராளமானோரின் தேர்வாக ‘ஃபினான்ஸ்’ உள்ளது. ஆனால், நவீன மேலாண்மைக் கல்வியானது, புதிய மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் விதமாய் ‘ஃபினான்ஷியல் அனலிடிக்ஸ்’, ‘ஃபின்டெக்’ போன்ற நிதி சார்ந்தவற்றிலும் மையம் கொண்டுள்ளது.

தற்போது இருக்கக்கூடிய சூழலில் மேல் குறிப்பிட்ட சில துறைகள் MBA வில் அதிக வேலைவாய்ப்புகளை பெற்றுத் தரக்கூடிய துறைகளாக பார்க்கப்படுகிறன.MBA Finance என்பது ஒரு நிறுவனத்தில் பொருளாதாரத்தை எவ்வாறு திரட்டுவது அதனை எவ்வாறு முறையாக கையாள்வது உள்ளிட்ட விஷயங்களை நாம் கற்றுக்கொள்ளலாம். MBA Marketing என்பது ஒரு நிறுவனம் உற்பத்தி செய்யக்கூடிய பொருளை அல்லது சேவையை எவ்வாறு சந்தைப்படுத்துவது உள்ளிட்ட தலைப்புகளை கற்றுக்கொள்ளலாம். MBA Human Resources என்பது ஒரு நிறுவனத்திற்கு தேவையான ஆட்களை எவ்வாறு தேர்வு செய்வது மற்றும் அவர்களுக்கான பயிற்சி முறைகள் குறித்த விஷயங்களை பற்றி படிக்கும் ஒரு துறை ஆகும்.

MBA Logistics என்பது சர்வதேச சந்தைகளில் ஒரு பொருளை எவ்வாறு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வது அவற்றில் உள்ள தேவையான சட்ட நடைமுறைகள் என்னென்ன என்பனவற்றை பற்றி படிக்கும் துறையே Logistics என்பதாகும். MBA Tourism Management என்பது ஒரு நாட்டிலிருந்து வேறு நாட்டிற்கு பல்வேறு தேவைகளுக்காக பயணம் செய்யும் மக்களுக்கு தேவையான தங்குமிடம், உணவு மற்றும் ஏனைய அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய தேவைப்படும் விஷயங்களை பற்றி படிப்பதே இந்த Tourism management துறை ஆகும்.

MBA-ல் கணிதம் (Maths), கணிதவியல் (Accountancy), பொருளாதாரம் (Economics), உளவியல் (Psychology), வணிக சட்டம் (Business law), உற்பத்தி நிர்வாகம் (Production management), மனிதவள மேம்பாடு (Human resource management), தொழிலாளர் நல சட்டம் (.Labour welfare and act), நிதி மேலாண்மை (Financial management), சர்வதேச பொருளாதார, சமூக சூழல் (International political and economic environment), ஆராய்ச்சி செயல்முறைகள் (Research methods) - இத்தனை பாடங்களையும் ஒருங்கேற கற்றுக் கொடுக்கிறார்கள்.

தேவைப்படும் தகுதி:- MBA படிப்பதற்கு கண்டிப்பாக +2 முடித்து பிறகு ஏதேனும் ஒரு இளநிலை பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

காலஅளவு:- MBA படிப்புகள் பொதுவாக இரண்டு ஆண்டுகள் பயிலும் படிப்பு ஆகும்.

கட்டண விவரம்:- MBA என்பது ஒரு முதுநிலை படிப்பு என்பதால் அதற்கு நாம் தேர்வு செய்யும் நிறுவனத்தை பொறுத்து குறைந்தது இரண்டு லட்சம் முதல் சராசரியாக நான்கு லட்சம் வரை செலவு ஆகும்.

கட்டணச் சலுகை :- பொதுவாக MBA படிப்புகளுக்கான கட்டண சலுகைகள் இளநிலை படிப்புகளில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. எனவே அத்தகைய ஸ்காலர்ஷிப் பெற முயலும் மாணவர்கள் தங்கள் இளநிலை பாடங்களில் சிறந்த மதிப்பெண்கள் எடுக்கவேண்டியது அவசியம் ஆகும்.

பகுதிநேர MBA

ஏற்கனவே ஒரு வேலையில் இருக்கு நபர்கள் அல்லது குறைந்த செலவில் MBA படிக்க விரும்பும் மாணவர்கள் பகுதி நேர MBA வை தேர்வு செய்து படிப்பது ஒரு சிறந்த தீர்வாகும். இதற்காக ஆகும் செலவு ரெகுலர் MBA வை விட குறைந்ததாகவே இருக்கும்.

துறைசார்ந்த MBA படிப்புகள்

ஒரு குறிப்பிட்ட துறையில் சாதிக்க விரும்பும் மாணவர்கள் அந்த துறை சார்ந்த இளநிலை படிப்புகளை முடித்துவிட்டு அந்த குறிப்பிட்ட துறை சார்ந்த கல்வி நிறுவனங்களில் வழங்கப்படும் MBA படிப்புகளை படிப்பதன் மூலம் நிச்சயம் அந்த துறையில் சாதிக்க முடியும்.

IIM (Indian Institute of Management) என்ற கல்வி நிறுவனம் இந்திய அளவிலும், உலக அளவிலும் புகழ்பெற்றது. IIM-ல் MBA படித்தவர்கள் ஒரு மாதத்திற்கே லட்சக்கணக்கில் சம்பளம் வாங்குகிறார்கள். IIM-ல் MBA சேர்வதற்கு CAT (Common Aptitude Test) என்ற அகில இந்திய பரீட்சை கட்டாயம் எழுத வேண்டும். அதை தவிர சில கல்லூரிகள் ஏற்றுக்கொள்ளும் MAT (Management Aptitude Test) என ஒரு டெஸ்ட் உள்ளது. இந்த தேர்வை சிறப்பான முறையில் எழுதிய மாணவர்கள் நிச்சயம் சிறந்த கல்லூரியில் சேர்ந்து MBA படிக்கலாம். மேலும், IIT (Indian Institute of Technology), பொறியியல் கல்லூரிகள், கலைக்கல்லூரிகள் என எல்லாவற்றிலும் MBA படிப்பு நடத்தப்படுகிறது.

தமிழ்நாட்டு கல்லூரிகளில் MBA சேர TANCET எழுத வேண்டும்

மத்திய அரசு சில ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தியது தான் சிமேட் (CMAT) என்று அழைக்கப்படும் பொது நிர்வாக நுழைவுத் தேர்வு. அகில இந்திய தொழில்நுட்பக் கவுன்சில் (ஏ.ஐ.சி.டி.இ.) அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனங்களிலும் பல்கலைக் கழகங்களிலும் எம்.பி.ஏ. படிப்பில் சேருவதற்கு இந்த ஒரு நுழைவுத் தேர்வை மட்டும் எழுதினால் போதும். இந்த தேர்வு மதிப்பெண்ணை வைத்து ஏ.ஐ.சி.டி.இ. அங்கீகாரம் பெற்ற அனைத்துக் கல்லூரிகளிலும் எம்.பி.ஏ. படிப்பில் சேர்ந்துவிடலாம்.

சிமேட் நுழைவுத்தேர்வை ஏ.ஐ.சி.டி.இ. ஆண்டுக்கு 2 முறை (பிப்ரவரி, செப்டம்பர்) நடத்துகிறது. இந்த நுழைவுத் தேர்வை எழுதுவதற்கு ஏதாவது ஒரு பட்டப் படிப்பில் 50 சதவீத மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஆதி திராவிடர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மாற்றுத் திறனாளிகள் ஆகிய இடஒதுக்கீட்டுப் பிரிவினர் 45 சதவீத மதிப்பெண் பெற்றிருந்தால் போதும். தற்போது பட்டப் படிப்பு இறுதி ஆண்டு படிப்பவர்களும் சிமேட் நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். நுழைவுத் தேர்வைப் பொருத்தவரை, பொது விழிப்புத்திறன், ஆங்கிலம், நுண்ணறிவுத்திறன், கணிதம் சம்பந்தப்பட்ட பகுதிகளில் இருந்து அப்ஜெக்டிவ் முறையில் கேள்விகள் கேட்கப்படுகின்றன. தவறான விடைக்களுக்கு மைனஸ் மதிப்பெண்ணும் உண்டு. இதர கல்வி நிறுவனங்களில் எம்.பி.ஏ. சேருவதற்கும் சிமேட் நுழைவுத் தேர்வை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு MBA மாணவர் - நல்ல தகவல் தொடர்பு திறன் (Communication skill), ஆங்கில அறிவு (English proficiency), தலைமைப் பண்பு (Leadership), பிறருடன் சுமூகமாக உறவாடுதல் (Interpersonal skill), ஒருங்கிணைக்கும் திறன் (Co-ordination), குழுவாக செயல்படுதல் (Team spirit) போன்ற திறன்களை பெற்றிருக்க வேண்டுமென எதிர்பார்க்கபடுகிறார்.

CENTRAL UNIVERSITY | மத்திய பல்கலைக்கழகம்

இந்தியாவில் உள்ள தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் ஒரு பிரிவான மத்திய பல்கலைக்கழகம் (Central University) இந்தியாவின் 15 நகரங்களில் அமைந்துள்ளது. மத்திய மனிதவளத் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கக் கூடிய இப்பல்கலைக்கழகம் தமிழகத்தில் திருவாரூரில் 2009 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இந்தப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு பட்டப் படிப்புகள் பயிற்று விக்கப்படுகின்றன. குறிப்பாக பல பல்கலைக் கழகங்களில் இளநிலைபட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு சாத் தியக் கூறுகள் இருக்காது. ஆனால், இந்த பல்கலைக் கழகத்தில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு பட்டப்படிப்புகள் பிரசித்தி பெற்றவையா கும் . இந்த நிறுவனத்தில் நுழைவதற்கு நுழைவுத் தேர்வு உண்டு.(Central University - Common Entrance Test - CUCET). இந்த தேர்விற்கான விண்ணப்பங்கள் மார்ச் மாதம் வெளியிடப்பட்டு தேர்வானது மே மாதம் நடைபெறும்.

இளநிலை பட்டப்படிப்பு மற்றும் ஒருங்கிணைந்த பட்டப் படிப்பிற்கு குறைந்தது 60 சதவீதம் மதிப்பெண்களும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 55 சதவீத மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். இதர வகுப்பினர் 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

மத்திய பல்கலைக் கழகத்தின் சார்பாக வழங்கப்படும் பல்வேறு பட்டப் படிப்புகள் பின்வருமாறு.

- Integrated MSc/ MA programs - 5 Years
- Chemistry, life sciences, mathematics, physics, economics.
- Integrated B.Sc., B.Ed., programme in mathematics - 4 years
- 2 years post graduate program (M.Sc., / MA/ M.Com.,)

- Library and information science, Commerce, Applied psychology, Chemistry, Computer Science Epidemiology and public health, Geography, Microbiology, Material science, Classical Tamil, Economics, English, Hindi, History, Mass Communication, Business administration, Social work, etc.,

இவை மட்டுமல்லாது பொருளாதாரம் குறித்த பல்வேறு உட்பிரிவுகளும் எம்.பில் (M.Phil.,) பி.ஹெச்.டி (Ph.D.,) அனைத்து பாடத் திட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டு முதல் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பாடப்பிரிவுகள்

M.Sc., Statistics and applied mathematics	M.Sc., Horticulture and floriculture
